கல்கி



KALKI 19-5-1957

30 நயா பைசா


பூவைப் போல...
உங்கள் மேனியை
மலரச் செய்வது
ரெக்ஸோனா
Rexona
BLENDED WITH CADYL
ரெக்ஸோனா சோப்பில் இருப்பது கேடில் — சருமத்திற்கு ஊட்டமளித்து உங்கள் இயற்கையழகை வெளிக் கொணரத் துணைபுரியும் எண்ணெய்கள் கலந்த விசேஷத் தைலமே கேடில்!
கேடில் கலந்துள்ள சோப் இது ஒன்றே
RP. 148-50 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைடரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது

கல்கி பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.



மதுரை அட்வகேட் ஸ்ரீ வி. எஸ். ரங்கசாமி அய்யங்கார் அவர்களின் மைத்துனர் சிரஞ்சீவி கே. டி. ஆர். பிச்சை. பி. காம். (பம்பாய் அகில இந்திய கதர் - கைத்தொழில் போர்டு ஆடிட்டர்) அவர்களுக்கும் சைதாப்பேட்டை ஸ்ரீ எஸ். ராமசாமி அய்யங்கார் அவர்களின் குமாரத்தி சௌ. சுலோசனாவுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க, பிச்சை - சுலோசனா !


மே 17 முதல்
பரணியின்
மணமகன் தேவை
...சென்னை...
வெலிங்டன் • ராக்ஸி
பாரத்
மற்றும் தென்னாடெங்கும்.
டைரக்ஷன்
ராமகிருஷ்ணா
சங்கீதம்
ஜி.ராமநாதன்
வசனம்
ஸ்ரீ சோமநாதன்
சீதா பிலிம்ஸ், சென்னை-17.



மலர் 16
இதழ் 42

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

ஹேவிளம்பி ஆண்டு
வைகாசி 6

ஹோட்டல் மறியல்

உணவுக் கடைகள் தென்னாட்டில் பொதுமக்களுக்குப் பெரும் சேவை செய்து வருகின்றன. முக்கியமாக ஏழைகளுக்கு மிகக் குறைந்த விலையில் சாப்பாடும் மற்ற உணவு வகைகளும் கொடுத்து உதவி வருகின்றன.

இப்பொழுது இந்தப் பணியைச் செய்து வரும் மக்களுக்கு திரு ஈ. வெ. ரா. பெரியாரும் அவரைச் சேர்ந்த ஆட்களும் அனாவசியமாகத் தொல்லைகளும் தொந்தரவுகளும் கொடுத்து வருகிறார்கள். இதற்கு "இயக்கம்" என்று பெயர் வேறு சூட்டியிருக்கிறார்கள்!

இது ஒரு நாள் பயித்தியமாக இருப்பின் பொருட்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் இந்தப் பயித்தியக்காரத்தனமோ தொடர்ந்து நடைபெறுகிறது. ஹோட்டல்கள் முன் நின்று மறியல் செய்வதால் ஏழை வியாபாரிகளுக்கு நஷ்டமும் கவலையும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்குக் கஷ்டமும் ஏற்படுகின்றன. இதுதான் இந்த இயக்கத்தினால் ஏற்படக்கூடிய விளைவு.

பெரியாருக்கு இந்த இயக்கத்தினால் பொது மக்களிடையே கௌரவம் ஏற்பட்டு விடாது. ஆனால் சாதித் துவேஷத்தை வளர்ப்பதே அவருடைய நோக்கமாயின் அதில் ஓரளவு வெற்றியடையலாம்.

சர்க்கார் சாதித்துவேஷ வளர்ப்பை நீண்ட நாட்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. விரைவில் தலையிட்டே யாகவேண்டும். இல்லையேல், சர்க்கார் நிர்வாக யந்திரம் இப்பொழுது ஆட்சி நடத்துபவர்கள் கையிலிருந்து திரு ஈ. வெ. ரா. அவர்கள் கைக்கே மாறி விட்டதாகக் கொள்ள வேண்டி யிருக்கும்.

முதலில் பன்னிரண்டு தி. க. ஆட்கள் ஹோட்டல் முன் நின்று மறியல் செய்வதாக இருந்தது. பின்னர் போலீஸார் தலையிட்டு, பன்னிரண்டு ஆட்கள் தேவையில்லை; ஆறு பேரே போதும் என்று பேரம் பேசினார்கள். இது காங்கிரஸ் சர்க்காரின் கௌரவத்துக்குச் சற்றும் பொருந்தாது!

திரு ம. பொ. சி. அவர்கள் இரண்டு வாரங்களாகத் தமது "செங்கோல்" பத்திரிகையில் இந்த ஹோட்டல் மறியலைப்பற்றி உண்மையை நாடி மிக உயர்ந்த முறையில் எழுதி வருகிறார். இக்கட்டுரைகளைச் சென்னை சர்க்காரும் பொது மக்களும் படிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்தத் தார் பூசும் இயக்கத்தினருடன் செல்லும் போலீஸ் பந்தோபஸ்தும், சமீபத்தில் போலீஸ் கமிஷனர் போட்டுள்ள தடை உத்தரவும் யாருக்குப் பயன்படும் என்பது திரு ம. பொ. சி. அவர்கள் சென்ற வார 'செங்கோல்' தலையங்கத்தில் எழுதியிருப்பதைப் படித்தால் தெளிவாகும்.

"பல நாட்கள் வேடிக்கை பார்த்தபிறகு பிராமணாள் அழிப்புப் போராட்டத்தை வெறுக்கவும் அதை நடத்துவோரை எதிர்க்கவும் மக்கள் முன் வந்த தருணத்தில் சென்னை போலீஸ் அதிகாரி அமைதி பராமரிப்புச் சட்டத்தை அமுல் நடத்தியிருக்கிறார். இதனால் உதவி பெறுபவர்கள் யார்? மறியல் நடத்தியவர்களா? மறியலில் பாதிக்கப்பட்டவர்களா? பொது மக்களின் அதிருப்தியிலிருந்தும் எதிர்ப்பிலிருந்தும் கிளர்ச்சிக்காரர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றே எண்ண வேண்டியிருக்கிறது" என்று ம. பொ. சி. எழுதியிருக்கிறார். இது உண்மை.

உணவுக் கடைகளில் பல வகையுண்டு. கடைக்குள் நுழைபவருக்கு முதலிலேயே அது எந்தவகை உணவுக் கடை என்பது தெரிய வேண்டும். அதாவது அந்தக் கடையில் விற்கப்படும் உணவு அருள்நெறி உணவா அல்லது மறவழி உணவா என்று மக்களுக்குத் தெரிய வேண்டும்.


அடுத்தாற்போல் மற்றொரு விஷயமும் உண்டு. அதாவது சமையல் முறையும் சமையல் செய்பவர்களும் அருள் நெறியில் பழகியவர்களா, அல்லது இரண்டும் கலந்து போகக்கூடிய பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களா என்பதும் மக்களுக்குத் தெரிய வேண்டும். இதனால்தான் "பிராமணர்கள் ஹோட்டல்" என்றும், "சைவாள் ஹோட்டல்" என்றும் "இராணி ஓட்டல்" என்றும் "சைனீஸ் ரெஸ்டாரண்ட்" என்றும் விளம்பரங்களும் விளம்பரப் பலகைகளும் காணப்படுகின்றன. பிராமணர்கள் சமையல் முறையில் செய்யப்பட்ட உணவு பெறக்கூடிய இடங்களில் 'பிராமணாள் ஹோட்டல்' என்று விளம்பரப் பலகைகள் இருந்து வருகின்றன. எந்தச் சாதியினரும் அந்தச் சமையல் முறையில் செய்யப்பட்ட உணவை நாடி, கடைக்குள் புகுந்து பெறலாம். 'சைவ உணவு' விடுதி என்றும் பலகைகள் இருந்து வருகின்றன. தென்னாட்டில் "சைவம்" என்றால் அருள் நெறியைக் குறிக்கும். வட நாட்டிலும் வட நாட்டிலிருந்து வருபவர்களுக்கும் வைஷ்ணவம் என்றால்தான் அருள் நெறியைக் குறிக்கும்.

விளம்பரப் பலகைகளும், அதில் எழுதும் முறையும் யாவும் உணவுக் கடைக்காரர்களின் சொந்த உரிமையாகும். அவற்றில் தலையிட வேறு யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் தமிழ் நாட்டிலோ தனி ஒருவரின் உடைமைப் பொருளில் தலையிட்டு ஒரு கோஷ்டி அக்கிரமஞ்செய்து வருகிறது. இதைத் தடுப்பதற்குத் தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்காமல் ஏனோதானோ என்று ஒரு சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்கிறது.

சாதி பேதங்களை ஒழிப்பதற்காக இதைச் செய்வதாக திரு ஈ. வெ. ரா. கூறுகிறார். இதைத் தூரத்திலிருப்பவர்கள் நம்பவும் நம்பலாம். ஆனால் திரு ஈ.வெ.ரா.வுக்குச் சாதி பேதங்களை ஒழிப்பதல்ல நோக்கம். ஒரு சாதியாரை ஒழிப்பதே அவர் நோக்கம். பேதத்தை வளர்ப்பதே அவர் நோக்கம். அவருடைய ஆட்கள் தெருக்களில் போலீஸ் பந்தோபஸ்துடன் சென்று போடும் கோஷங்களும் இதையே நிரூபிக்கின்றன. போலீஸ் பந்தோபஸ்து மட்டும் அவர்களுக்கு இல்லை என்றால் ஊரார் ஒரே நாளில் இந்த அக்கிரமத்தை நிறுத்தி விட்டிருப்பார்கள். அக்கிரமத்துக்குப் பாதுகாப்பு அளிப்பது அக்கிரமத்திலும் அக்கிரமமாகும்.

உண்மையில் எவரேனும் சாதிபேதத்தை ஒழிக்க விரும்பினால் துவேஷத்தை வளர்க்கும் முறைகளைக் கையாள்வது கூடாது. சாதி பேதங்களை ஒழிப்பதன் நோக்கம் என்ன? நாட்டில் ஒற்றுமையை வளர்ப்பதுதானே? ஒற்றுமையை வளர்ப்பதற்காக நாம் கைக்கொள்ளும் முயற்சிகள் துவேஷம் வளர்ப்பதற்கு உதவுமாயின் ஒற்றுமை வளர்க்கும் எண்ணம் வீணாகி விடும். உணவு முறைகளையும்

நிகழ்ச்சிச் சித்திரம்



உடுப்பு முறைகளையும் பலாத்காரமும் பயமும் உண்டாக்கி மாற்ற முயற்சி செய்வது மடமையாகும். அந்த முயற்சியின் நோக்கம் ஒரு கூட்டத்தினருக்குக் கஷ்டமும் நஷ்டமும் உண்டாக்குவதேயாயின் அது ஒரு பெரும் குற்றமேயாகும். தம்முடைய உதவியால்தான் தற்போது பதவி ஏற்றிருக்கும் சர்க்கார் தேர்தலில் வெற்றி அடைந்திருப்பதாக திரு ஈ. வெ. ரா. அவர்கள் எண்ணி இப்படி நடந்து கொள்கிறார் போலும். தம்முடைய போக்கைச் சர்க்கார் எதிர்க்கமாட்டார்கள் என்றும் நினைக்கிறார் போலும்!

சம்பளம் உயர்ந்தது!


இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்பதில் சர்க்காரை விட இன்ஷூரன்ஸ் சிப்பந்திகள் பெரிதும் ஆர்வம் காட்டி வந்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்வு நல்ல முறையில் அமைந்தால்தான், அவர்கள் திருப்தியுடன் வேலை செய்தால்தான் இன்ஷூரன்ஸ் வேலை சரியாக நடைபெறும். இதைப் பற்றியெல்லாம் பலதடவை கூறியிருக்கிறோம்.

இவ்வளவு தூரம் இன்ஷூரன்ஸ் சிப்பந்திகள் சார்பில் நாமும் மற்றவர்களும் பரிந்து பேசியது வீணாகப் போகவில்லை. சர்க்கார் எல்லாருக்கும் திருப்தி யளிக்கும் வகையில் ஒரு முடிவை வெளியிட்டிருக்கிறார்கள். இதற்காகச் சர்க்காரைப் பாராட்டுகிறோம்.

இந்த முடிவினால் நமது சர்க்கார் சுமார் ஐந்து லட்சம் ரூபாய் வரையில் அதிகப்படி செலவு செய்ய வேண்டியிருக்கும் என்று திரு டி. டி. கே. அறிவித்திருக்கிறார். இன்ஷூரன்ஸ் சிப்பந்திகள் ஊக்கத்துடன் வேலை செய்தால் சர்க்கார் செலவழிக்கும் அதிகப்படி செலவு ஒரு பொருளாகாது. சமீப காலத்தில் இன்ஷூரன்ஸ் சிப்பந்திகளைப்பற்றிப் பல குறைகள் கேள்விப்பட்டு வந்தோம். இவை உண்மையா அல்லவா என்பது நமக்குத் தெரியாது. சிப்பந்திகள் சுறுசுறுப்பின்றியும் அலட்சியமாகவும், காலம் தாழ்த்தியும் வேலை செய்து வருவதாகக் கேள்விப்பட்டோம். தனி நபர்கள் செய்து வந்த காரியங்களை சர்க்கார் எடுத்துக்கொண்டால் இப்படித்தான் ஆகும் என்பது பலருடைய அபிப்பிராயம். இதற்கு இடம் கொடுக்காமல் இனி இன்ஷூரன்ஸ் சிப்பந்திகள் குறைபாடுகள் இன்றி வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சர்க்கார் இன்ஷூரன்ஸை எடுத்துக் கொண்டு விட்டதனால் அதன் வழியாக வேலை செய்து சம்பாதித்து வந்த பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் இன்ஷூரன்ஸ் அமைப்பில் உத்தியோகம் பெற்று வேலை செய்பவர்கள் சம்பள உயர்வுக்காகச் சந்தோஷப்பட்டு ஊக்கமாக வேலை செய்ய வேண்டியது தர்மமாகும்.

- விஜி



புத்தர் ஜயந்தி வைபவங்கள்

இலங்கையின் சரித்திரத்தில் இவ் வாரத்தைப் போல இவ்வளவு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த வாரம் வேறு எதுவுமேயில்லையென்று கூறலாம். சென்ற திங்கள், செவ்வாய் இரு தினங்களிலும் இலங்கை முழுவதிலுமுள்ள பௌத்தர்கள் சம்புத்த ஜயந்தியின் முடிவு விழாவை விசேஷ சிரத்தையுடனும் பக்தியுடனும் குதூகலத்துடனும் கொண்டாடினார்கள். விசாக் விழா எனப்படும் வைகாசி மாதப் பௌர்ணமி உலகெங்குமுள்ள பௌத்தர்களுக்குப் புனிதமானது.

இவ்வருடத்திய விசாக பௌர்ணமி புத்த பகவான் நிர்வாண நிலையை அடைந்த 2500-வது ஆண்டு நிறைவைக் குறிப்பதினால் இதை சம்புத்த ஜயந்தியாகப் பௌத்தர்கள் கொண்டாடுகின்றனர். புத்தர் பூதவுடலை நீத்த தினத்தைச் சிரார்த்த தினமென்று அழைக்க வேண்டியிருக்க ஜயந்தி விழாவென்று அழைப்பதின் பொருள் விளங்கவில்லை. இதைப்பற்றி ஆரம்பத்தில் பலமான சர்ச்சைகள் நடந்த பொழுதிலும் இன்னமும் யாரும் தெளிவான விளக்கம் கொடுத்ததாகத் தெரியவில்லை.

பௌத்தர்களாயினும் சரி, அல்லது இதில்லாதவர்களாயினும் சரி, சிங்களவர்கள் அனைவருக்குமே இவ் வருடத்திய விசாக் பண்டிகை இன்னொரு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சிங்கள வம்சத்தின் ஆதி முதல்வனென்று வர்ணிக்கப்படும் விஜயன் என்ற இந்திய இளவரசன் புத்த பகவான் தேக வியோகமான அதே தினத்தில்தான் இலங்கையில் வந்து இறங்கியதாகச் சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன. அந்த நூல்களின்படி இலங்கையில் சிங்கள வம்சம் தோன்றி இவ்வருட விசாக் பண்டிகையுடன் சரியாக 2500 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

ஆனால் பௌத்த மதம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தேவனம்பிய தீசன் காலத்தில்தான் இலங்கைக்கு வந்தது. மஹான் மஹிந்தர் பௌத்தமதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்த தினத்தை போஸன் பண்டிகையென்று கொண்டாடுகிறார்கள்.

இவ்வாரம் பாரதப் பிரதமர் நேரு இலங்கைக்கு விஜயம் செய்வது மற்றொரு முக்கியமான சம்பவமாகும். அவருக்காக,14ம்தேதியுடன் முடிந்துவிட வேண்டிய புத்த ஜயந்திக் கொண்டாட்டங்களை 19ம் தேதி வரையில் நீடித்து வைத்திருக்கிறார்கள். இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகள் இவ்வாரம் சந்திக்கும் பொழுது சர்வதேசப் பிரச்னைகளே அவர்களுடைய [சம்பாஷணைகளில் முக்கியத்துவம் வகிக்கும். இலங்கை இந்தியர் பிரச்னையைப்பற்றி அவர்கள் பேசினுனும் அது மேலெழுந்தவாரியாக இருக்குமே தவிர தீர்வு காணும் முறையில் இருக்காது.



திரு தொண்டமான்

நேருஜிக்கு ராஜோபசார வரவேற்பு அளிக்கக் கொழும்பிலும் அனுராதபுரியிலும் ஆடம்பரமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

* * *

திரு எஸ். தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கை ஜனநாயக காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் வருடாந்திர மகாநாடு இவ்வாரம் 17, 18, 19ம் தேதிகளில் நடைபெறுகிறது. நேருஜி இலங்கைக்கு வருவதினாலும் இரு தேசப் பிரதமர்களும் இலங்கை இந்தியர் பிரச்னையைப் பற்றி வெகு விரைவில் சந்தித்துப் பேசக் கூடுமாகையினாலும் இவ்வாரம் நடக்கும் காங்கிரஸ் மகாநாடு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது நிச்சயம். 1954ம் வருடம் நேருஜி இலங்கைக்கு வந்திருந்த பொழுதும் காங்கிரஸின் வருடாந்திர மகாநாடு நடைபெற்றது. அப்பொழுது நேருஜி மகாநாட்டுக்குப் போகவில்லை. இவ்வருடமும் மகாநாட்டுக்குச் சென்று இந்தியத் தொழிலாளர்களை நேரடியாகச் சந்திக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்க மாட்டாது. காரணம் அவருக்கு அவகாசமில்லையென்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

* * *

முன்னாள் பிரதம மந்திரியான ஸர் ஜான் கொத்தலாவலையின் யு. என். பி. கட்சி காரியக் கமிட்டி இவ்வாரம் கூடித் தனிச் சிங்கள மசோதாவை அரசாங்கம் சாக அடித்து விட்டதென்றும் தமிழர்களுக்குப் பிரதமர் அறிவித்திருக்கும் சலுகைகள் தனிச் சிங்களச் சட்டத்தைப் பயனற்றதாக்கி விட்டதென்றும் குற்றஞ் சாட்டியிருக்கிறது. அதே சமயம் நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநிறுத்த சர்வகட்சி மகாநாடு ஒன்றை உடனே கூட்ட வேண்டுமென்றும் பிரதம மந்திரி பண்டாரநாயகாவை அறைகூவி யழைத்திருக்கிறது.

நாட்டில் நிலவிய தேசிய ஒற்றுமைக்கு இரண்டாண்டுகளுக்கு முன்னால் சமாதி கட்டியது இதே யு. என். பி. கட்சிதான். தமிழுக்கும் சிங்களத்துக்கும் அந்தஸ்து பேதமில்லாமலிருந்த காலத்தில் சம அந்தஸ்துக்குச் சட்டத்தைத் திருத்துவதாகச் சொல்லிப் புதிய பிரச்னையைக் கிளப்பியவர் ஸர் ஜான் கொத்தலாவலை தான்! அப்படிப்பட்டவரின் கட்சிக்குத் தேசிய ஒற்றுமையைப்பற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது என்று கேட்கிறது பிரபல தேசிய தினசரியான வீரகேசரிப் பத்திரிகை.—ரஜனி



பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு



இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா

நமது ஜனாதிபதி

இந்தியாவின் ஜனாதிபதியாக டாக்டர் பாபு ராஜேந்திரப் பிரசாத் இரண்டாவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என்பதைக் கேட்கப் பாரத மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மகாத்மா காந்தியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வந்த உத்தமத் தலைவர்களுள் பாபு ராஜேந்திரரும் ஒருவர் என்பதை அறியாதவர் இல்லை. தேசத் தந்தை காந்திஜியின் ஜீவிய காலத்திலும் பிறகும் அவரது உபதேசங்களிலிருந்து அணுவளவும் வழுவாது பணியாற்றி வரும் தியாகசீலரான பாபு ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் காங்கிரஸ் அக்ராசனராக இருந்து புகழ் பெற்றதுடன், சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்தை உருவாக்கிய மகாசபையின் தலைவராகவும் இருந்து அரும் தொண்டு புரிந்தார். பிறகு பாரதநாடு குடியரசாகத் திகழ்ந்த போது முதலாவது இந்திய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பெருமை அவருக்குக் கிடைத்தது. மொத்தம் உள்ள 4,63,196 வாக்குகளில் 4,59,698 வாக்குகள் பாபு ராஜேந்திரப் பிரசாத்துக்குக் கிடைத்துள்ளன. இதிலிருந்து அவருக்கு நாட்டில் எவ்வளவு பேராதரவு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இரண்டாவது தடவை ஜனாதிபதியாகி யிருக்கும் பாபு ராஜேந்திரரின் பதவிக்காலத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறி மக்கள் சுபிட்ச வாழ்வு பெற்று, நாடு செழிக்கும் என நம்புகிறோம். மீண்டும் ஜனாதிபதி பீடத்தை அலங்கரிக்கும் பாபு ராஜேந்திரப் பிரசாத், உபஜனாதிபதி பதவி வகிக்கும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் இவ்விரு தவப் புதல்வர்களும் உலக நாடுகளிடையே பாரதத்தின் பெருமை உயருவதற்குத் துணையாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.



ஆகாச வெடி

"வேலையில்லாமல் இருந்து வருபவர்களுக்கு மாதம் 60 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று உ.பி. சோஷலிஸ்டுகள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்!" —தினசரி

வேலையில்லாத் திண்டாட்டத்தில், குறைந்த சம்பளம் வாங்குவோருக்கும் மோகம் ஏற்படச் செய்ய வேண்டும் என்பது சோஷலிஸ்டுகளின் உத்தேசமோ?

★

"தூத்துக்குடி முத்துச் சிப்பி ஏலத்தில் ஒரு பெண்மணிக்கு ரூ 1500 மதிப்புள்ள நல் முத்து ஒன்று கிடைத்திருக்கிறது."

—செய்தி

"இந்த நல் முத்து ஒரு ஆண் பிள்ளைக்குக் கிடைத்திருந்தாலும், முடிவில் ஒரு பெண்மணியைத்தானே அடைந்தாக வேண்டும்?" என்கிறார் ஒரு கிரகஸ்தர்.

★

"கான்பூரில் ஒரு கோஷ்டியார் கடைத் தெரு விளம்பர போர்டுகளில் உள்ள ஆங்கில எழுத்துக்களை அழிக்க முயன்ற போது போலீஸாரால் துரத்தியடிக்கப் பட்டனர்."

—செய்தி

"இவ்வித எழுத்தழிப்புக் காரியங்களில் ஈடுபடுவோரின் தலையெழுத்தை யாரால்தான் அழிக்க முடியும்?"

★

"ருஷ்யா-இந்தியா வர்த்தக ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக, மூவாயிரம் ஜதை பூட்ஸுகள் ஹைதராபாத்திலிருந்து ஏற்றுமதியாக இருக்கின்றன." —தினசரி செய்தி

இரு நாடுகளின் வர்த்தக உறவு நல்ல முறையில் காலூன்றத் தலைப்பட்டிருப்பதைப் பாராட்ட வேண்டும்.

★

"மானிட உலகத்துக்குக் கேடு உண்டாக்கும் அணு ஆயுதப் பரீட்சை முறையை வல்லரசுகள் கைவிட வேண்டும்."

—செய்தித் தலைப்பு

"மாணவர் உலகத்துக்குக் கேடு உண்டாக்கும் பரீட்சை முறையையும் கைவிட வேண்டும்" என்கிறான் ஒரு மாணவன்.

ஈழ நாட்டுப் பிரயாணம் (19)



நுவரேலியாவிலிருந்து கண்டிக்குப் பிரயாணம் தொடங்கி விட்டோம். வானத்தை மூடியிருந்த மேகத்திரை விலகி விட்டது. சூரியன் இன்முகத்துடன் வழி அனுப்பி வைத்தான். நுவரேலியாவிலிருந்து கண்டி வரையில் இருபுறமும் இயற்கையின் பசுமை வெள்ளம் பெருகி ஓடியது. தேயிலைப் பண்ணைகளில் உள்ள தேயிலைச் செடிகள் மீது காற்றின் அலைகள் மோதும் காட்சி, புல்லாங் குழலில் படிப்படியாக எழும் தான வரிசைகளை ஒத்திருந்தன. காடுகளில் மரங்களின் தளிர்கள் பொன்னிற வனப்புடன் விளங்கின. தூரத்தில் தெரிந்த ஒரு மலைச் சிகரத்தைக் காண்பித்து, "அதோ தெரிகிறதே, அதுதான் கண்டி; கந்தா!" என்றார் நண்பர்.

"கந்தாவா? அப்படி என்றால்?"


"கந்தா என்ற சிங்களச் சொல்லுக்கு மலை என்று பொருள். அதனால் கந்தா என்றேன்."

"மலைமீது அமைந்துள்ள நகரமானதால் அதைக் கண்டி என்று சொல்லுகிறீர்களோ?"

"ஆமாம்."

இதற்குள் கண்டி நகரை நெருங்கி விட்டோம். பச்சைப் பசேல் என்ற பசுமை நிறைந்த மலைச் சிகரத்திலே கண்டி நகரம் அமைந்திருப்பது தன் காதலனின் மடியிலே காதலி ஆசையோடு வீற்றிருப்பது போலிருந்தது. அவர்கள் மெய்ம்மறந்த நிலையில் இருந்தார்கள். அதனால் தங்கள் ஆடை குலைவுற்று இருப்பதைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை போலும்! கண்டி நகரின் வழியே வளைந்து நெளிந்து செல்லும் மாவலி கங்கை கண்டி நங்கையின் பட்டுத் துகில் நழுவுவது போலக் காட்சியளித்தது. இந்த எழில்மிக்க அற்புதக் காட்சியைப் பார்த்தவுடனேயே "கண்டி, காதல் நகரம்தான்!" "காதல் நகரம் தான், கண்டி!" என்று மனத்துக்குள் சொல்லிச் சொல்லி, பின் வாய்விட்டே பாடி மகிழ வேண்டியிருந்தது.

காதல் நகரம்



உலகத்தில் தோன்றிய நகரங்கள் எல்லாம் மனிதன் தன்னுடைய ஆர்வத்தைக் கொண்டு நிர்மாணித்தவைதான். ஆனாலும் வட இந்தியாவில் உள்ள டில்லி, காசி, ஆக்ரா, தமிழ் நாட்டில் உள்ள மதுரை, திருச்சி, தஞ்சை ஆகிய நகரங்களோ மனிதன் உணர்ச்சி வசத்தில் ஈடுபட்டுப் படைத்தவை. இந்த அற்புத நகரங்களின் அழகைத் தற்கால நாகரிகம் குலைத்து விட்டது. இதற்கு உடந்தையாக இருந்து வருபவள் வாணிபம் என்னும் திருமடந்தை. அவள் பொற்பாதங்களின் கீழ் மனிதனின் எண்ணக் கடலில் மலரும் அழகுத் தாமரை பூக்குமா? வாணிபத்தின் குறிக்கோள் பொருள் சேர்ப்பதுதானே; மனிதனும் அவன் உணர்ச்சிகளும் அல்லவே!


வாணிபம் ஓங்கிவளரும் இடங்கள் லட்சுமியின் உறைவிடங்கள் என்று முன்பெல்லாம் மனிதன் பாராட்டி வந்தான். அன்று அவன் வழிபட்டது வெறும் செல்வத்தை மட்டும் அல்ல. அழகையும் சேர்த்தே வழிபட்டான். அதனால் வாணிபமும் மனிதத் தன்மையும் ஒன்றை ஒன்று பிரியாமல் ஓங்கி வளர்ந்தன. வாணிபம் என்னும் திரு மடந்தை கருணை உள்ளம் படைத்த அன்ன பூரணியாகக் காட்சி அளித்தாள். அன்று அன்ன பூரணியாக இருந்த வாணிபத் திருமடந்தை இன்று பயங்கரக் காளியாக மாறிவிட்டாள்!

இதற்குத் தமிழ் நாட்டில் உள்ள பல நகரங்களை ஒப்பிடலாம். பழைய மதுரைமாநகரையும் இன்றைய மதுரையையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே நான் சொல்வது நேயர்களுக்குச் சுலபமாகப் புரிந்து விடும். மதுரை நகரம் இருக்கட்டும். கண்டியைப் பார்ப்போம்.

இந்தக்காலத்தில் நகரங்கள் அந்தந்த நாட்டுக்குரிய நகரங்களாக இராமல் காலத்துக்கு ஏற்ற பட்டணங்களாக மாறி வருகின்றன. இயந்திரப் புதுமை தந்த அலங்கோலம் அவை. நகரங்களின் முகங்கள் எல்லாம் ஒரே சாயல்தான். அலங்காரத்தில் தான் சில சில வேறுபாடுகள். ஆனால் கண்டி நகரம் மிகவும் திருத்தமாக, பழைய 'காலத்துக் கண்டியைப் போலவே ஒளி வீசிக் காட்சி தருகிறது.

இந்தக் காலத்து நகரங்கள் எல்லாம் ஒரே தோற்றம் உடையவை என்று கூறினேன் அல்லவா? அது கூட அவ்வளவு பொருத்தமல்ல. நகரத்தின் எழில் நிறைந்த முகத்தின் லட்சணத்தை நாம் பார்க்க முடிவதில்லை. அவற்றின் முகமூடியைத்தான் பார்க்கிறோம். அவை ஒரே தொழிற்சாலையில் ஒரே அச்சில் உருவானவை. சில நகரங்கள் இந்த முகமூடியைச்சுத்தமாக வைத்துக் கொள்கின்றன. மற்றவை கவனிப்பின்றி அழுக்கு வழியப் போட்டுக் கொண்டிருக்கின்றன. இவைகளை மணம் புரிந்த மாப்பிள்ளைகள் வெவ்வேறானவர்கள். இவர்கள் காட்டும் ஆதரவுக்கு ஏற்ற வண்ணம் நகரத்தின் 'முகச் சாயல்கள் வேறுபடுகின்றன. திருமதி கண்டி நங்கை இருக்கிறாளே அவள் காலத்தின் போக்கைக் கண்டு கலங்கவில்லை. தன்னுடைய பண்பு மிக்க பழைய நாகரிகத்தைத் துறக்க அவள் தயாராயில்லை. உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரையில் குறையில்லாமல் அலங்காரம் செய்து கொண்டிருக்கிறாள். அதற்கு மேல் மணம் தரும் தைலம் பூசி மேனி அழகை மேலும் விருத்தி செய்து கொண்டிருக்கிறாள். இன்றைய நவீன நாகரிக நகரில் வசித்து வரும் எனக்குக் கண்டி நகருக்குள் புகுந்ததும் ஏதோ புது உலகத்துக்குள் புகுந்தது போன்ற பிரமையே ஏற்பட்டது. அமாவாசை இருட்டில் இருந்து பரிபூரண நிலவின்





வெளிச்சத்தில் காலடி வைத்ததுபோன்று மன ஆறுதல் உண்டாயிற்று.

பழமை நாகரிகத்தின் என்றும் இளமையான உருவைக் கண்டியில்தான் கண்டேன். பழைய காலத்து அழகு இந்த இடத்தில் இன்னும் தன் நிறமும் ஒளியும் குன்றாமல் சுடர்விட்டுத் திகழ்கிறது. லட்சுமிதேவி தாமரை மலரில் அமர்ந்திருப்பது போல வான விளிம்புவரை பசுங்கொழுந்துகள் படபடக்கும் தேயிலைப் பண்ணைகள், கமுகுச் சோலைகள், ரப்பர்த் தோட்டங்கள், பலாத் தோப்புகள், இந்திரச் சோலையுள் அமைதியுடன் மனிதர் நடத்தும் அருமையான வாழ்க்கை, வேண்டிய அளவு ஓய்வு, அந்த ஓய்வைப் பயன்படுத்த விசித்திரமான விழாக்கள்,— இங்கு இருப்பவை யாவும் நித்தியமானவை. பருவ காலங்கள் தோறும் பூவும், புள்ளும், வண்ணமும், மணமும், காயும், கனியும் மாறுவதைப்போல இங்குள்ள மக்கள் அன்றொருநாள் இருந்த விதமே, வழி வழியாகப் பெருகிவரும் கூத்தும் பாட்டும் விழாவும் இன்றளவும் தம் வாழ்வில் பொலிய இருந்து வருகிறார்கள். அதற்கு அவர்கள் நடத்தும் பெரஹரா என்னும் திருவிழாவே சாட்சி சொல்கிறது.

கண்டி நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். கட்டடங்கள் எல்லாம் கண்டியின் கட்டடக் கலை நுணுக்கத்துடன் கம்பீரமாகக் காட்சியளித்தன. நேர்நேரான சாலைகள், நெருக்கமான கடைத் தெருக்கள். இந்தக் கடைத் தெருக்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. கடைத் தெருவில் உள்ள கட்டடங்கள் பளிச்சென்று இருந்தன. வழி எங்கும் தமிழ் மக்கள்தான். தமிழ் மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் இங்குமங்கும் தெளித்தாற் போல் பல நிறப் பட்டு உடைகள் அணிந்த சிங்களப் பெண்களும் ஆண்களும் இருந்தனர். இந்தப் பெண்களின் நிறம் மாநிறம்தான். வனப்பில் முல்லைக் கொடியினை ஒத்திருந்தனர். இந்தமாதிரி பெண்களே அதிகமாகக் கண்ணில் படுகின்றனர். இவர்கள் கிளைகிளையாகப் பரவி நாடெங்கும் பூத்து விளங்குகின்றனர். கண்டி நகரம் என்ன இலங்கைத் தீவு முழுவதுமே இந்தப் பெண் மலர்கள்தானோ என்று ஐயம் கொள்ளும் அளவுக்கு இந்தச் சிங்களப் பெண்கள் வலைய வந்து காட்சி அளிக்கின்றனர்.

கடைத்தெருவைத் தாண்டி அப்பால் நகர்ந்தால் மிகப் பெரிய ஏரி நம்மை வரவேற்கிறது. கண்டி நகரின் அழகுக்கு அழகு செய்வது போல ஏரி எழில் பெற்று விளங்குகிறது. ஏரியின் அமைப்பு இலங்கைத் தீவு போல் இருக்கிறது. சமுத்திரம் போன்ற இந்த ஏரி இல்லாவிட்டால் கண்டிக்கு உயிர் இருக்காது என்றே சொல்லி விடலாம். கண்டி நகரை உயிர்த் துடிப்புடன் செய்துவருவது இந்த அழகு ததும்பும் ஏரிதான். ஆகா! இந்த ஏரியைச் சுற்றிக் கொண்டு செல்லும்போது மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சிகளைச் சொல்லுவதா? மிகப் பெரிய இந்த ஏரி, இயற்கை ஏரி இல்லை என்று கேள்விப்பட்ட பின் ஏற்பட்ட வியப்பைச் சொல்வதா? இந்த ஏரியை வெட்டிய அரசன் கண்டியின் கடைசி அரசனைப் போன ஆச்சரியத்தைப் பற்றிச் சொல்வதா? அவன் இந்த ஏரியை வெட்டிய காரணத்தைக் கேட்டுச் சிரித்ததைப் பற்றிச் சொல்வதா? எதைப் பற்றிச் சொல்வது என்றே தெரியவில்லை.

"கண்டி நகரின் கடைசி மன்னன் இந்த ஏரியை ஏன் வெட்டினான்? கண்டி நகரில் மக்களுக்குக் குடிதண்ணீர்க் கஷ்டமா?"

"கண்டியின் தண்ணீரைப் போன்ற சுவையான தண்ணீர் வேறு எங்குமே கிடைக்காது. இங்கு தண்ணீர்ப் பஞ்சமும் இல்லை!"

"பின் எதற்கு வெட்டினான்?"

"கண்டி மன்னனுக்குப் பல எதிரிகள். அவர்கள் தன்னை வந்து தாக்காமல் இருப்பதற்காக இந்த ஏரியை வெட்டினான்."

"இந்த ஏரியைப் பார்த்தால் தற்காப்புக்காக வெட்டியதாகத் தோன்றவில்லையே!"

"பின் எப்படித் தோன்றுகிறது?"

"நன்றாக நீராடி மகிழ்வதற்காகத்தான் வெட்டியிருக்க வேண்டும். ஏரியின் மத்தியில் கண்டியின் கலைமணம் கமழும் அற்புதமான நீராழி மண்டபம்கூட இருக்கிறதே!"

"ஆமாம். அந்த அரசன் பெரிய ரசிகன் தான். அவனுக்கு ஏராளமான மனைவிமார்கள் உண்டு. அந்த மனைவிமார்கள் பேரில் நம்பிக்கைக் குறைவால் அவர்களை இந்த நீராழி மண்டபத்தில் வைத்திருந்தான் என்றும், அதற்காகவே இந்த ஏரியை வெட்டினான் என்றும் சொல்லுகிறார்கள்."

"அப்படி இருக்கும் என்று என்னால் நம்ப முடியவில்லையே!"

"ஆமாம். தங்களைப் போலவே பலரும் அபிப்பிராயப் படுகிறார்கள். மன்னன் தன் காதல் மனைவிகளுடன் இந்த ஏரியில் உல்லாசமாகப் பவனி வருவான். அப்பொழுது ஏரியின் மத்தியிலிருக்கும் நீராழி மண்டபத்திலிருந்து பலவித வாத்தியங்களின் இன்னிசை ஒலிக்கும் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்."

"ஆம்; அப்படித்தான் இருக்க வேண்டும்."

"அப்படித்தான் இருந்திருக்குமோ இல்லையோ! இந்த ஏரியைப் பற்றி இப்படிப் பலகதைகள் மட்டும் சொல்லி வருகிறார்கள்."

"யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். இந்த ஏரியைப் போலவே அந்த அரசனின் இதயமும் விசாலமாக இருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை."

இந்த ஏரியைச் சுற்றிக் கொண்டே போனால் அந்தப் பாதை எதிர்க்கரையில் உள்ள குன்றுக்குச் செல்கிறது. அந்தக் குன்றின்மீது சென்று ஏரியின் மத்திய பகுதிக்கு வந்து நின்று கண்டி நகரின் அழகைப் பார்க்க வேண்டும். பகல் நேரத்தில் பார்த்தால் கண்டி நகரம் கடையும் கடைத் தெருவுமாய், வீடும் வாசலுமாய், கோபுரமும் குளமுமாய் விளங்குவதைப் பார்க்கலாம். இரவு நேரத்தில் பார்த்தாலோ வானத்தில் இருந்த நட்சத்திரங்கள் எல்லாம் கண்டி நகரில் வந்து தங்கி விட்டனவோ என்று வியக்கும்படி மின் விளக்குகள் பளிச் பளிச்சென்று மின்னும். அழகும் இளமையும் நிறைந்த கண்டி நகரம் குதூகலத்துடன் இந்தக் குன்றின் மீது உட்கார்ந்து இன்பக் கனவு காண்கிறதோ என்ற மனமயக்கத்தை ஏற்படுத்தும். இந்தக் காட்சி

திடமான பற்களும் ஈறுகளும் பெற

ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த

அற்புதமான பச்சை 'கோலினாஸ்' டூத்பேஸ்ட்

* பற்களைச் சுத்தமாயும் பிரகாசத்துடனும் வைக்கிறது
* ஈறுகளுக்குப் பலமளிக்கிறது
* பற்களை சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது
* வாய் நாற்றத்தை அகற்றுகிறது



'கோலினாஸ்'

நுரை தனிச்
சிறப்பு வாய்ந்தது

ஜெப்ரி மானேர்ஸ் அண்டு கம்பெனி
பிரைவேட் லிமிடெட்

GK, 1027

யைப் பார்ப்பதற்காகவே கண்டிக்குப் போகலாம். பழமையும் புதுமையும் கைகோர்த்துக் களிநடனம் புரியும் கண்டி நகரின் அழகை வார்த்தைகளால் அவ்வளவு சுலபமாக வர்ணித்துவிட முடியாது. போய்ப் பார்த்துத்தான் அனுபவித்து மகிழ வேண்டும்.

நகரின் அழகு இருக்கட்டும். இரவு நேரங்களில் ஏரியில் நடக்கும் இந்திர ஜாலங்களைப் பாருங்கள். நீலப் பட்டாடை விரித்தாற் போன்ற இந்த ஏரியின் நீரில் வானத்து நட்சத்திரங்கள் கண்சிமிட்டி மின்னும். நிலா மண்டலம் தனது குளிர்ந்த கதிர்களோடு இனிது பெறத் துலங்கும். நகரத்தில் எரியும் மின்சார விளக்குகள் பலவித வர்ணங்களில் ஜால வித்தைகள் காட்டும். இயற்கையும் செயற்கையும் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு அந்த ஏரியில் அடிக்கும் கும்மாளத்தை என்னவென்று சொல்வது?

'' இந்த அழகுமிக்க ஏரியை வெட்டிய அந்த மகா ரஸிகரான கடைசி கண்டி மன்னனின் பெயர் என்னவோ ?''

'' அவர் பெயர் திரு விக்கிரமசிங்கன். இவர்தான் இலங்கையில் கடைசியாக நீதி செலுத்திய தமிழ் மன்னன். இவருக்குப் பின்னர் ஆங்கிலேயர் கண்டி நகரைக் கைப்பற்றிக் கொண்டு அந்த மன்னரை நாடு கடத்தி விட்டனர். அப்பொழுது கண்டி மன்னரின் குடும்பம் இலங்கையைவிட்டு வெளியேறித் தமிழகத்துக்கே சென்றுவிட்டது. இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு மீண்டும் கண்டி மன்னர் சந்ததியாரை இலங்கைக்கு வருவதற்கு அனுமதி அளித்து அவர்களை இலங்கையின் கௌரவப் பிரஜைகளாகச் செய்து பெருமைப் பட்டனர் இன்றைய இலங்கை சிங்கள சர்க்கார்.''

'' இந்த அருமையான கண்டி நகரம் எப்பொழுது நிர்மாணிக்கப்பட்டது ?''

''பதினைந்தாம் நூற்றாண்டில் விக்கிரமபாகு என்னும் அரசனால் இந்தக் கண்டி நகரம் நிர்மாணிக்கப்பட்டது. இப்பொழுது சுமார் இரண்டு லட்சம் மக்கள் இந்த நகரில் வசிக்கிறார்கள். அவர்கள் பல்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒன்றாகவே வசித்து வருகின்றனர்.''

இரண்டு லட்சம் மக்களில் பெரும்பாலோர் தமிழ் மக்கள்தான். கடைத் தெருவில் ஏராளமான தமிழர்களின் கடைகளும் இருக்கின்றன. தமிழர்கள் எல்லாவிதமான தொழில்களிலும் ஈடுபட்டுக் கண்டியின் சிறப்புக்குப் பாடுபட்டு வருகின்றனர். முக்கியமாக, கண்டியில் உள்ள ஆண் மக்களை நாகரிகம் உள்ளவர்களாகச் செய்யும் தொண்டில் ஈடுபட்டுத் தொழில் புரிந்துவரும் தலையலங்காரக் கலைஞர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். ஆயிரக்கணக்கான தலையலங்காரக் கலைஞர்கள் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தீவுக்குச் சென்றிருக்கிறார்கள். கொழும்பு நகரிலும், கண்டியிலும் அவர்கள் நூற்றுக் கணக்கான தலை அலங்கார நிலையங்களைத் திறந்து மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்கள். தமிழ் நாட்டின் பண்பையும், மொழி உணர்வையும் தங்கள் தொழிலுடன் இணைத்து அவர்கள் ஆற்றி வரும் அரிய தொண்டு பாராட்டுதற்குரியது.

இலங்கைக்குச் சென்று முன்னேற்றமடைந்துள்ள இந்தத் தலையலங்காரக் கலைஞர்கள் நல்ல தமிழ் இதயத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள தமிழ் அபிமானத்தைவிடத் தமிழ் நாட்டிலிருந்து சென்ற இவர்களிடம் அதிக தமிழபிமானத்தைக் கண்டோம். இவர்களுடைய தமிழ் அபிமானத்தைக் குறித்து ஒரு யாழ்ப்பாண நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

அவர் சொன்னார்: '' தமிழ் அபிமானம் மட்டுமல்ல; தமிழ் வளர்த்த பெரியார்களிடம் இவர்கள் காட்டும் அபிமானம் இருக்கிறதே அது இன்னும் பெரியது'' என்றார்.

'' அது எப்படி ?''

'' பேராசிரியர் கல்கி அவர்கள் அமரரானார் என்று கேள்விப்பட்டவுடன், இங்குள்ள தலை அலங்காரக் கலைஞர்கள் எல்லாம் தங்கள் தொழில் நிலையங்களை மூடி மிகப் பெரிய கூட்டம் போட்டு அந்தப் பெரியாருக்கு மரியாதை செய்ததைப்போல் தமிழ் நாட்டில் கூடச் செய்திருக்க மாட்டார்கள்'' என்றார்.

இதைக் கேட்டபோது என் மனம் இளகிவிட்டது. கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. தமிழ் பக்தி என்றால் இதுவல்லவா பக்தி? இவ்வளவு தமிழ் பக்தியும், தமிழ் வளர்த்த பெரியார்களிடம் நம்பிக்கையும் கொண்ட தமிழ் மக்கள் கண்டியில் இருப்பது போலவே இலங்கைத் தீவு முழுவதும் இருக்கிறார்கள். அவர்களுடைய உண்மையான தமிழ் பக்தி இன்று இல்லாவிட்டால் என்றாவது ஒருநாள் வெற்றி பெற்றே தீரும். தமிழ் அன்னை இலங்கையின் அரியாசனத்தில் ஏறி அமர்ந்து அரசு செலுத்தி நீதி வழங்குவாள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

இந்த உண்மையான தமிழ் இதயம் படைத்த தமிழ் மக்களைப் பார்த்த மனத் திருப்தியுடன் கண்டி நகரத்தின் இதர எழில் மிக்க பகுதிகளைப் பார்க்கப் புறப்பட்டோம்.

''கண்டியில் முக்கியமாக இன்னும் என்னென்ன பார்க்க வேண்டும்?'' என்றார் உடன் வந்திருந்த சென்னை நண்பர்.

''ஹா! கண்டியில் இன்னும் எவ்வளவோ பார்க்க வேண்டும். புத்தர் தந்த ஆலயத்துக்குச் செல்லவேண்டும். அதற்குப் பக்கத்தில் உள்ள தொல்பொருள் கலை மண்டபத்துக்குப் போகவேண்டும். அங்குள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற கலைப் பொருள்கள், கண்டியின் கலை மணம் கமழும் சித்திர விசித்திர வேலைப்பாடுகள் நிறைந்த சாமான்கள் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். அதையெல்லாம் பார்த்த பிறகு உலகத்திலேயே மிகப் பெரிய தோட்டமான பெறதேனியா தோட்டத்துக்குப் போக வேண்டும். இதற்கெல்லாம் இன்று ஒருநாள் மட்டும் போதும் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றார் இலங்கை நண்பர்.

''வாருங்கள், இப்பொழுது புத்தர் பல் ஆலயத்துக்குப் போய்த் தரிசித்து விட்டு வருவோம். பிறகு நேரமிருந்தால் பெறதேனியா தோட்டத்துக்குப் போகலாம்'' என்றேன்.

''சரி'' என்றார் இலங்கை நண்பர். நேயர்களே! புத்தர் தந்த ஆலயத்துக்குக் கிளம்புவதற்குத் தயாராக இருங்கள். (தொடரும்)

என் பிள்ளை சாது!

சீ.ரா.

வாசலில் "குமா...ஆ...ஆ...ர்ர்!" என்று கீச்சுக்குரலில் குப்பாயி கூப்பிடும் சத்தம் கேட்டதும் அலறிப் புடைத்துக் கொண்டு நாற்காலியை விட்டு எழுந்தேன். "சரஸ்வதி! குமார் தயாரா? குப்பாயி வந்தாச்சு" என்று சமையல் அறையைப் பார்த்துக் குரல் கொடுத்தேன்.

"இதோ, ஒரு நிமிஷம்! குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறேன். அவனுடைய புத்தகம், பலகை முதலியவற்றை எடுத்து வையுங்கள். அப்படியே அவன் போட்டுக்கொள்ளச் சலவையாகி வந்த சட்டையும் நிஜாரும் பெட்டியிலிருந்து எடுத்து விடுங்கள். அவன் செருப்பையும் தேடி எடுங்கள்" என்று என் மனைவியின் பதில் குரல் சமையலறையிலிருந்து வந்தது.

முதலில் பெட்டியைத் திறந்து சட்டையும் நிஜாரும் எடுத்துக் கொண்டு போனேன். அதற்குள் குமாரைக் குளிப்பாட்டி விட்டு, சரத்தைத் துடைத்துக் கொண்டிருந்த சரஸ்வதி நான் கொண்டுபோனவற்றைப் பார்த்து, "உங்களிடம் ஒரு காரியம் சொன்னால் இப்படித்தான். மேலாகக் கையில் அகப்பட்டதை எடுத்து வந்து விட்டீர்களாக்கும்! கல்யாணம் கார்த்திகைக்காக வைத்திருக்கும் இந்த 'லாடின்' நிஜாரைப் போட்டு அனுப்பினால், மத்தியானம் திரும்பி வரும்போது கன்னங்கரேல் என்றிருக்கும்...ஹூம்! நீங்கள் போய் அவன் பலகை, குச்சியைத் தயார் பண்ணுங்கள். நானே சட்டை, நிஜாரை எடுத்துக் கொள்கிறேன்" என்று இரைந்தாள்.

பதில் பேச நேரமில்லாததால் மௌனமாகத் திரும்பி வந்து, குமாருடைய புத்தகம் ஸிலேட் முதலானவற்றைத்தேடினேன். அவன் படிப்பது மூன்றாவது வகுப்பானாலும் எட்டு நோட்டுகள், பலகை, பென்ஸில், குச்சி பலகை துடைக்க 'ஸ்பாஞ்ச்'—இவ்வளவையும் போட ஒரு பை எனப் பல உருப்படிகளையும் திரட்ட வேண்டும். இவற்றில் ஒன்று குறைந்தாலும் 'இளவரசன்' பள்ளிக்குப்போக மறுத்து விடுவான்! மூலைக்கொன்றாகச் சிதறிக் கிடக்கும் அவற்றை ஒன்று சேர்க்க எவ்வளவோ பொறுமை வேண்டும். குமார் பள்ளிக்கூடம் போகத் தொடங்கியதிலிருந்து தினசரி இந்த வேலையைச் செய்து வருகிறேன்.

இதற்குள் குப்பாயி உள்ளே வந்துவிட்டாள், "குமார்! ஓடி வா!" என்று கூறிக்கொண்டே. அவன் சார்பில் அவளைச் சற்றுப் பொறுக்கும்படி சொல்லிவிட்டு, மறுபடியும் தேடு படலத்தைத் தொடர்ந்தேன்.

இவ்வளவு நடந்து கொண்டிருந்தபோது என் தம்பி ஏதோ பத்திரிகை படித்துக் கொண்டிருந்தது என் கோபத்தைக் கிளறியது. "டேய் கிட்டு! பத்திரிகையை அப்புறம் படிக்கலாம்...குமாருடைய செருப்பைக் கொஞ்சம் தேடி எடு" என்று கூவினேன்.

கையிலிருந்த பத்திரிகையை வீசி எறிந்து விட்டு, "பெரிய கல்லூரிப் படிப்பு! இவனைத் தயார் பண்ண அரை டஜன் ஆட்கள் வேண்டும்" என்று உரக்க முணுமுணுத்துக் கொண்டே, செருப்பைத் தேடுவதற்குத் தொடங்கினான் கிட்டு. உள்ளேயிருந்து குமாரின் குரல் கேட்டது. "ஏய் சித்தப்பா! என் செருப்பு இங்கே இருக்கு. நீ ஒன்றும் தேட வேண்டாம்!" என்று

"சமையல் அறையில் எப்படிடா செருப்பு போயிற்று?" என்று கேட்டுக் கொண்டே, அங்கே போய்ப் பார்த்தவன், "ஆமாம்! உனக்குச் செருப்பு வைக்க நல்ல இடம் கரிப் பெட்டிதான்!" என்று சொல்லி விட்டு, மறுபடியும் பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டான் கிட்டு.

அவனைப் பின் தொடர்ந்து குமாரும், அவன் தாயாரும் வந்தார்கள். நான் இன்னும் புத்தகம் முதலியவைகளைத் தேடிக் கொண்டிருந்ததைப் பார்த்த சரஸ்வதி, "இன்னுமா தேடி முடியவில்லை? எந்த நோட்டு அகப்படவில்லை?" என்று கேட்டாள்.

"ஒன்றாக இருந்தால் தானே! பொது அறிவு நோட்டு இல்லை. குச்சி கிடையாது. பென்ஸிலுக்குக் கூடும் இல்லை" என்று அடுக்கினேன்.

"நேற்று இரவே சொல்ல வேண்டுமென்றிருந்தேன். அவன் பொது அறிவு நோட்டை அவன் வகுப்புப் பையன் யாரோ கிழித்துப் போட்டு விட்டானாம். வாத்தியாரிடம் சொன்னால் அடிப்பேன் என்று பயமுறுத்தவே, இவன் சும்மா வந்து விட்டானாம். இப்படியும் ஒரு அக்கிரமம் இருக்குமோ? நீங்கள் தான் போய் விசாரிக்க வேண்டும்" என்றாள்.

"இவன் என்ன செய்தான் என்று கேட்டாயா?" என்றேன்.

"ஆமாம்! உங்களுக்கு உங்கள் பிள்ளை பேரில்தான் குற்றம் சொல்லத் தெரியும்!" என்று முகவாய்க்கட்டையைத் தோள் மேல் இடித்து விட்டு, "முதலில் அவன் பள்ளிக்கூடம் போகும் வழியைப் பாருங்கள். அப்புறம் மற்ற விஷயத்தைப் பார்க்கலாம்" என்றாள் சரஸ்வதி.

மேஜை டிராயரைத் திறந்து ஒரு புது நோட்டும், குச்சியும் எடுத்துக் குமாரிடம் கொடுத்து விட்டு, "ஏண்டா, நேற்று கொண்டு போனவற்றை என்ன செய்தாய்?" என்று கேட்டேன்.

"எங்கேயோ தொலைந்துவிட்டது அப்பா!" என்றான் அவன், சாதுவாக.

"எல்லாம் யாராவது பையன்களுடைய விஷமத்தனமாகத் தான் இருக்கும். இந்தப் பயந்தாங்கொள்ளி சும்மா வந்திருப்பான்; குச்சி, பென்ஸில் தொலையாத நாள் கிடையாது. பள்ளிக்கூடத்துக்குப் போய் விசாரிக்க உங்களுக்குத் துப்பு எங்கே?" என்று என்மீது எரிந்து விழுந்தாள் என் மனைவி.

"இதோ பார். சும்மா சத்தம் போடாதே. இன்று எனக்கு ஆபீஸ் கிடையாது. போய்,

பள்ளிக்கூடத்தை ஒரு கலக்குக் கலக்கி விட்டு வருகிறேன்'' என்றேன்.

''நீங்கள் ஒன்றையும் கலக்க வேண்டாம். இவன் கொண்டு போகிற குச்சி, பென்ஸில் எல்லாம் எங்கே போகின்றன என்று தெரிந்து கொண்டு வந்தால் போதும்'' என்றாள்.

அதற்குள் குமார், ''அப்பா அப்பா! நான் உன்னோடேயே பள்ளிக்கூடம் வரேன், அப்பா!'' என்று கெஞ்சினான்.

''சரிதான், போடா! எனக்கு இன்னும் எவ்வளவோ வேலை இருக்கிறது. நான் அப்புறம் வருகிறேன். நீ குப்பாயியோடு போ. அவள் காத்துக் கொண்டிருக்கிறாள்'' என்று அவன் மேல் சீறி விழுந்தேன்.

குப்பாயி அவன் பையை வாங்கிக்கொண்டு அவனை அழைத்துச் சென்றாள். சரஸ்வதி சமையல் அறைக்குச் சென்றாள். 'அப்பா!' என்று பெருமூச்சு விட்டு விட்டு, என் முக க்ஷவர வேலையைத் தொடர்ந்தேன்.

சாப்பிட்டு விட்டு, பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டேன். வழியில் என் நண்பர் சுவாமிநாதனைச் சந்தித்தேன். அவரும் பள்ளிக்கூடத்துக்குத்தான் வருவதாகச் சொன்னார்.

''என்ன ஸார், செய்கிறது! தினந்தோறும் என்பையன் எதையாவது தொலைத்து விட்டு வருகிறான். புத்தகம், நோட்டுகளைக் கிழித்துக் கொண்டு வருகிறான். யார் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. கேட்டால் பயமாயிருக்கிறது என்கிறான்'' என்றார்.

''என்ன பள்ளிக்கூடம், ஸார்! பையன்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கூடவா கவனிக்க மாட்டார்கள்? கேள்வி முறையே இல்லை போலிருக்கிறது. இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளத்தான் நானும் புறப்பட்டேன்'' என்று அவருக்கு ஒத்துப் பாடினேன்!

''நம்முடைய பையன்களுக்காவது தைரியம் இருக்க வேண்டும்! அதுதான் இல்லை. பண்டத்தைப் பாழாக்கிக்கொண்டு வருகிறார்களே தவிர, குற்றவாளியைக் காட்டமாட்டேன் என்கிறார்கள். நமக்கோ நஷ்டத்துக்கு மேல் நஷ்டம். வீட்டிலும் பேச்சு கேட்கவேண்டியிருக்கிறது. ஓர் ஒழுங்கு முறை இல்லாமல் என்ன பள்ளிக்கூடம் வேண்டியிருக்கிறது!'' என்று என் நண்பர் முடிப்பதற்குமுன் பள்ளிக்கூடம் வந்து விட்டது.


தலைமை ஆசிரியரின் அறைக்குச் சென்று அவரிடம் விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னோம். ''இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும், ஸார்! வீட்டில் நிம்மதியே இல்லை'' என்று கூறினோம்.

''பேஷாகச் செய்கிறேன்'' என்று கூறி விட்டு, மூன்றும் வகுப்பு உபாத்தியாயருக்குச் சொல்லியனுப்பினார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த ஆசிரியர் வந்து சேர்ந்தார். தலைமை ஆசிரியர் அவரிடம், ''இவர்தான் உங்கள் வகுப்பில் வாசிக்கும் குமாரின் தந்தை. அவர் பத்மநாபனின் தந்தை'' என்று எங்களை அறிமுகப் படுத்தி வைத்தார்.

''அப்படியா! உங்கள் இருவரையும் நானே வந்து பார்க்க வேண்டும் என்றிருந்தேன். நீங்கள் வந்தது நல்லதாய்ப்போயிற்று. என்ன விஷயம்?'' என்று கேட்டார் அவர்.

''நாங்கள் வந்த விஷயம் இருக்கட்டும். நீங்கள் எதற்காக எங்களைப் பார்க்க வேண்டுமென்று நினைத்தீர்கள்?'' என்று கேட்டேன்.



''சொல்வதற்கே கஷ்டமாயிருக்கிறது. உங்கள் பையன்கள் இருவரும் செய்து வரும் துஷ்டத்தனம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. மற்றப் பையன்களுடைய நோட்டைக் கிழிப்பது, சிலேட்டுக் குச்சியை உடைப்பது என்று அவர்களுடைய விஷமம் நாளுக்கு நாள் அதிகமாகி விட்டது. எத்தனையோ பேர்கள் புகார் செய்து விட்டார்கள். எங்களால் ஆன மட்டும் நல்ல முறையில் அவர்களுக்குச் சொல்லிப் பார்த்தாகி விட்டது. நீங்கள் தான் உங்கள் பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டும். அவர்களால் பள்ளியின் பெயர் கெடுவதை நாங்கள் விரும்பவில்லை. அடுத்த வருஷம் அவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வது பற்றியும் நாங்கள் யோசிக்க வேண்டியிருக்கும்'' என்று கூறி முடித்தார் அந்த ஆசிரியர்.

நானும் சுவாமிநாதனும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தோம். தலைமை ஆசிரியர் எங்களைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். ''விஷயம் எப்படியிருக்கிறது பார்த்தீரா? மற்றப் பையன்களுடைய சாமான்களைப் பாழ் செய்வதுடன், தங்களுடைய நோட்டு, புத்தகங்களையும் கிழித்துக்

சொல்கிருர்கள் போலிருக்கிறது!'' என்ருர்.

"அதோடில்லே. வகுப்புக்கு வரும்போதே குச்சி பென்சிலே வேண்டுமென்றே எங்கேயாவது போட்டு விட்டு வருகிருர்கள். ஒன்றையும் எழுதுவதில்லே...'' என்று கூறினுர் மூன்ரும் வகுப்பு ஆசிரியர்.

"நாங்கள் அவர்களேக் கண்டிக்கிறேம். நீங்களும் அவர்களே நேர் பார்வையில் வைத்துப் பார்த்துக் கொண்டால் நல்லது'' என்று சொல்லி விட்டு வந்தோம்.

* * *

நடந்ததை மனேவியிடம் சொன்னேன். அவள் எல்லாவற்றையும் கேட்டு விட்டு, "அவர்கள் கூறினதைக் கேட்டுக் கொண்டு வந்து விட்டீர்களல்லவா?... ரொம்பச் சமர்த்துதான்!... நீங்கள் ஆயிரம் சொல்லுங்கள். நம் குமார் சாது சாது தான்! உங்கள் நண்பர் பிள்ளேபத்மநாபனே, என்னமோ சொன்னீர்களே, அதுதான் இவ்வளவு பொல்லாத்தனத்தையும் செய்து விட்டு, இவன் மேல் பழியைப் போட்டிருக்கும். உண்மையைக் கண்டு பிடிக்காமல் பள்ளிக்கூடத்தில் இரண்டு பேர்கள் மேலும் தப்பு சொல்கிருர்கள். பேசாமல் வேறு பள்ளிக்கூடம் பாருங்கள். இவர்கள் வேண்டி அழைத்தாலும் என் பிள்ளேயை இந்தப் பள்ளிக்கூடத்துக்கு இனி அனுப்பக் கூடாது'' என்று சொல்லி விட்டு, உள்ளே போய் விட்டாள்.


இதற்கு என்ன சொல்கிறீர்கள்? அநேகமாய் என் நண்பரின் மனேவியும் என் மனேவியைப் போல்தான் தன் பிள்ளேயைத் தாங்கிப் பேசி யிருப்பாள் என்று நினேக்கிறேன்.

எந்த ஸ்திரீ தன் பிள்ளே துஷ்டன் அல்லது பொல்லாதவன் என்பதை ஒப்புக் கொள்வாள்?

தெரியுமா உங்களுக்கு?

வைரக் கற்களால் என்ன பலன் என்று கேட்டால் அவற்ருல் கண்களேப் பறிக்கும் ஒளி மிக்க வைர நகைகள் செய்யலாம் என்றுதான் பலரும் விடை அளிப்பார்கள். ஆனல், உலகில் வைர நகைகளில் உள்ள மோகம் அறவே மறைந்து விட்டால்கூட, வைரங்களுக்கு மிகுந்த கிராக்கி இருந்து கொண்டுதான் இருக்கும். ஏனெனில் இன்றைய நவீன இயந்திரங்களேச் சிருஷ்டிப்பதற்கு வைரங்கள் இன்றியமையாதவையாக இருக்கின்றன. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வைரம் மனிதரைக் கவர்ந்து வந்திருக்கிறது. இனி எக்காலத்திலும் அதன் ஆதிக்கம் குறையாதென்றே விஞ்ஞானிகள் கருதுகின்றனர். தென்னுப்பிரிக்கா, பிரேஸில், பிரிட்டிஷ் கயானு, ஆஸ்திரேலியா, இந்தியா முதலிய பல நாடுகளிலும் உள்ள வைரச் சுரங்கங்களிலும் வைரங்கள் உற்பத்தியாகின்றன. ஆனல் ஒவ்வொரு சுரங்கத்திலும் உற்பத்தியாகும் வைரங்கள் ஒரு தனிச் சிறப்புடன், ஒரு தனி வண்ணத்துடன் விளங்குகின்றன.

வருஷந்தோறும் உலகம் முழுதும் சராசரி மூன்றரை டன் எடையுள்ள வைரங்கள் உற்பத்தியாகின்றன.



மூன்றரை டன் என்பது சுமார் ஒன்றரைக் கோடி 'காரட்' வைரங்களாகும். வைரங்களின் விலே மிகவும் அதிகமாக இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. ஒரு பவுண்டு, அதாவது 2,272 காரட் வைரங்களே எடுப்பதற்குச் சுமார் ஒன்பது கோடி பவுண்டு பாறையைத் தோண்ட வேண்டி யிருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிருர்கள்! உலகில் உற்பத்தியாகும் வைரங்களில் 20 சத விகிதம் தான் நகைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றன. மீதி 80 சத விகிதம் யந்திரக் கருவிகளாக உபயோகிக்கப்படுகின்றன. வைரம் மிகவும் உறுதியான உலோகமாதலால், யந்திரங்களே உருவாக்குவதற்கு வைரத்தினுலான கருவிகள் மிகவும் உபயோகமாக இருக்கின்றன. யந்திரங்களின் பல்வேறு பாகங்கள், பளிங்குக் கற்கள் போன்ற கட்டட வேலேக் கற்கள் முதலியவற்றைச் சிறிதும் தவருமல் வெட்டுவதற்கும் கூரிய வைரக் கற்கள் பதித்த ரம்பங்களேக் காட்டிலும் சிறந்த கருவி வேறு எதுவுமே இல்லே! மற்றும் கம்பிகள் இழுப்பதற்கும் யந்திரங்களில் நுண்ணிய துவாரங்கள் போடுவதற்கும் வைரத்தினுலான சாதனங்களே தேவையாக இருக்கின்றன. கடிகாரங்கள், மின்சார சாதனங்கள், விமானங்களின் பாகங்கள் செய்வதற்கும் வைரக் கற்கள் பதித்த கருவிகளேயே உபயோகிக்கிருர்கள். கண்ணுடிகளே வைர ஊசிகளால் வெட்டுவதைப் பலரும் பார்த்திருக்கலாம். ஏன், நவரத்தினங்களே அழகான முறையில் பட்டை தேய்த்து உருவாக்குவதற்குக்கூட வைரங்கள்தான் தேவையாக இருக்கின்றன.



(சென்ற வாரத் தொடர்ச்சி)

செ ன்னை ராஜ்யத்தில் காரியங்கள் மந்த கதியில் நடைபெறுகின்றன என்பது என் கேரள நண்பரின் அபிப்பிராயம். சூரியன்கூட முதலில் மேற்கில் இருக்கும் திருவாங்கூரில் உதித்துவிட்டுத்தான் சென்னையில் உதிப்பதாக அபிப்பிராயம்! இந்தக் கம்யூனிஸ்ட் மந்திரிகள் செய்யும் காரியங்களின் வேகம் இப்படி அவர் மூளையைக் குழப்பிவிட்டிருக்கிறது.

இது எனக்கு எப்படித் தெரிந்தது, தெரியுமா? 'காலை ஒன்பதரை மணிதானே! மந்திரிகள் சர்க்கார் காரியாலயங்களுக்கு எங்கே வந்திருக்கப் போகிறார்கள்?' என்ற சந்தேகத்தைத் தெரிவித்த போதுதான்.

என் கேரள நண்பர் சென்னையை ஒரு மாதிரி குறிப்பிட்டாலும் கேரளத்தின் நிலைமையை வெகு தெளிவாக விளக்கி விட்டார். ''இங்கு முதன் மந்திரியிலிருந்து எல்லா மந்திரிகளும் காலை ஒன்பதரைக்கே காரியாலயத்துக்கு வந்து விடுகிறார்கள். இரவு ஒன்பது மணிவரை கூடச் சில சமயங்களில் வேலை செய்கிறார்கள். மேலும் எல்லா மந்திரிகளும் செக்ரடேரியட்டில் மூலைக்கு ஒருவராக இராமல் பக்கத்து பக்கத்து அறையில் வரிசையாக இருக்கிறார்கள். அவர்கள் அறைமுன் அவர்கள் பெயர், இலாக்கா முதலியவை குறித்த பலகைகூட இருக்கிறது. அதனால் செகரடேரியட்டுக்கு யார் வந்தாலும் மந்திரிகளைச் சுலபமாகப் பார்த்து விடலாம். ஆம், பொது மக்கள் வந்து பார்த்துப் பேசச் சில மணி நேரங்களை ஒவ்வொரு மந்திரியும் ஒதுக்கி வைத்திருக்கிறார். ஒரு தபால் சர்க்காருக்கு வந்தால் அதற்கு ஒரு பதில் இருபத்திநான்கு மணி நேரத்தில் அனுப்பி வைப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள். சர்க்கார் நிர்வாக சாஸ்திரத்தில் இதுவரை காணாத பல அதிசயங்கள் இங்கு இப்போது நடைபெற்று வருகின்றன'' என்று பெருமிதத்தோடு கூறினார்.

இதற்குள் நாங்கள் முதன் மந்திரியின் அறைக்கு வந்து விட்டோம். கேரளத்தின் முதன் மந்திரி திரு ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு அவர்களிடம் கேரளத்தில் எல்லாக் கட்சி மக்களும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றனர். அவர் 1930ம் ஆண்டில் காங்கிரஸ்காரராக இருந்து ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து சிறை சென்றவர். சிறையில் ராஜாஜியுடன் இருந்ததாகப் பெருமையுடன் சொல்லிக் கொண்டார். நமது சென்னை சட்ட சபையிலும் பணியாற்றியிருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியில்சேர்ந்து கேரளத்தில் கம்யூனிஸ்ட் தலைவராகவும் அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந் தலைவர்களில் ஒருவராகவும் இருந்து வருகிறார். இவருடைய இனிய சுபாவமும், யாருக்கும் உதவ வேண்டும் என்ற அவருடைய ஆர்வமுமே அவருக்கு இவ்வளவு செல்வாக்கைத் தேடித் தந்திருக்கின்றன என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

* *

இதோ ஒருவர் தள்ளாடித் தள்ளாடி வருகிறாரே: இவர் நடையைப்பார்த்தால் தோழர் ராமமூர்த்தி நினைவு வருகிறது. இவர் யார்?

மராமத்து இலாக்கா மந்திரி திரு மதீத்.

''மராமத்து இலாக்காதான் என் இரண்டாவது எதிரி என்று ராஜாஜி சொன்னார். உங்களுக்குத்தெரியுமா?'' என்று அருகிலிருந்த நண்பர் மந்திரியைக் கேட்டார்.

''நாங்கள் அந்த இலாக்காவை எங்கள் உற்ற நண்பனுக்கிக் கொள்ளப் போகிறோம்!''

''எப்படி?''

''நிறைய வேலை கொடுத்துத்தான். பாலங்கள் கட்டுவது முதலிய வேலைகளைத் தனி நபர்கள் கண்டிராக்ட்டுக்கு விடாமல் சர்க்கார் மராமத்து இலாக்காவே எடுத்து வேலை செய்யத் திட்டமிட்டு வருகிறோம். எங்களிடம் திறமையான இன்ஜினீயர்கள் இருக்கிறார்கள்.''

உணவு மந்திரி திரு கே. ஸி. ஜார்ஜ் அவர்களைச் சந்தித்த போதுதான் எனக்குப் பெருவியப்பாக இருந்தது. கேரள ராஜ்யத்தின் உணவு நிலைமையை அவர் மிக விரிவாக விளக்க ஆரம்பித்தார். முழுதும் கேட்டுவிட்டு, ''இந்தக் கஷ்டமான நிலைமையைச் சமாளிக்க நீங்கள் மத்திய சர்க்காரிடம் சண்டை போட்டு அரிசி வாங்க வேண்டும் அல்லவா?'' என்று கேட்டேன்.

''மத்திய சர்க்காரிடமிருந்துதான் அரிசி வாங்கியாக வேண்டும். ஆனால் சண்டை போட்டு வாங்கவேண்டியிருக்கும் என்று நான் சொல்ல மாட்டேன். எங்கள் நிலைமையை அவர்களும் உணர்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களும் கஷ்டமான நிலையில் தான் இருக்கிறார்கள். கோதாவரி வெள்ளத்தினால் ஆந்திராவில் பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் எதிர்பார்த்த அளவு தான்யம் அவர்களுக்கும் கிடைக்காது. கொஞ்சம் கஷ்டமான நிலைமைதான். அவர்கள்தான் என்ன செய்வார்கள் பாவம்!'' என்றார்.

மத்திய சர்க்கார் எங்கள் நிலைமையை உணருவதில்லை என்று குற்றம் சாட்டுவாரோ என்று நான் எதிர்பார்த்தேன். அதற்கு நேர் மாறாக மத்திய சர்க்காருடன் மிகுந்த அனுதாபத்தோடு அவர் பேசியதைக்கேட்டவுடன் எனக்கு ஒரு விஷயம் புரிந்தது. மத்திய சர்க்காருடன் ஒத்துப் போய்க் கேரள மக்களுக்கு நல்லது செய்யவே கேரள கம்யூனிஸ்ட் மந்திரிகள் விழைகிறார்கள்!

சற்று இப்படி வருகிறீர்களா, கல்வி மந்திரியைப் பார்ப்போம். கேரள நாட்டு கல்வி மந்திரி பேராசிரியர் ஜோஸப் முண்டசேரி அவர்கள். இவர் அறைக்குள் நுழைந்த போது சற்றுச் சந்தேகத்துடன் என்னைப் பார்த்தார். ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று நுழைந்ததும் நுழையாததுமாகக் கேட்கத் தொடங்கினார்.

''உங்கள் ராஜ்யத்தில் ஏற்கனவே படித்தவர்கள் அதிகம். ஆகவே இன்னும் பழைய முறையில்கல்வி புகட்டிவந்தால், குழந்தைகள் தங்கள் முன்னோர் தொழிலைமறந்து படித்து வேலையில்லாமல் திண்டாடும் கூட்டத்தினரின் தொகையைத் தானே பெருக்குவார்கள்? இந்தப் பிரச்னையைச் சமாளிக்க நீங்கள் என்ன யோசனை கண்டு பிடித்து வைத்திருக்கிறீர்கள்? அல்லது 'அரை நாள் பள்ளிக்கூடம்; அரை நாள் வீட்டு வேலை' என்று ராஜாஜி கொண்டு வந்தாற் போன்றதோர் கல்வித் திட்டத்தை அமுலாக்கப் பார்ப்பீர்களா?'' என்று கேட்டேன்.

அவ்வளவுதான். கல்விமந்திரி அசல் பேராசிரியராகி விட்டார்!

''ராஜாஜியின் கல்வித் திட்டத்தின் நோக்கமே வேறு. சர்க்கார் கஜானாவில் கல்விக்காகக் கிடைக்கும் சொற்ப பணத்தைக் கொண்டு, பத்து வருஷங்களுக்குள் எல்லோருக்கும் எழுத்து வாசனை எப்படி உண்டாக்குவது என்று அந்தத் திட்டத்தை வகுத்தார். இருக்கிற பள்ளிக்கூடங்களை வைத்து இரண்டு பங்கு பிள்ளைகளுக்கு எழுத்தறிவிக்க அவர் முயன்றார். ஆனால் இங்கு நிலைமையே வேறு. ஏற்கெனவே இங்கு கிராமத்துக் கொரு பள்ளிக்கூடம் தாலுக்காவுக்கு ஒரு கல்லூரி என்றிருக்கிறது. படிப்பதற்கான வசதிகள் இங்கு ஏராளமாக இருக்கின்றன. அதனால் தான் இங்கு 90 சதவிகிதம் பேர்கள் படித்தவர்கள் இருக்கிறார்கள். சென்னை ராஜ்யத்திலிருந்து எங்கள் ராஜ்யத்தில் புதிதாகச் சேர்ந்துள்ள பாலக்காடு பகுதியில்தான் போதிய பள்ளிக்கூடம் இல்லை. அப் பகுதியில் அடுத்த ஆண்டுக்குள் ஐம்பது பள்ளிக்கூடங்கள் திறக்கத் திட்டமிட்டுள்ளோம்! ஆனால் இங்கு பிரச்னையே வேறு. சர்க்கார் நடத்தும் கல்லூரிகளில் ஆசிரியர்களின் சம்பளம் அளவுக்கு மிஞ்சியிருக்கிறது. ஆனால் தனி நபர்களும் ஸ்தாபனங்களும் நடத்தும் கல்லூரிகளில் ஆசிரியர்களின் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. பல கல்லூரிகளின் பொருளாதாரம் மிக நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. இவை எல்லாவற்றையும் சமாளிப்பதுதான் இப்பொழுது எங்கள் முதற் பிரச்னையாக இருக்கிறது. உடனடியாக, சென்னை சர்வகலாசாலையோடு இணைந்திருந்த சில கல்லூரிகளைத் திருவனந்தபுரம் சர்வகலாசாலையோடு இணைத்து, கேரள பல்கலைக் கழகமாக்கப் போகிறோம்!'' என்றார்.

* * *

பல வேலை நிறுத்தங்கள், தொழிலாளர் இயக்கங்கள் முதலியவை நடத்திப் பண்பட்ட திரு டி.வி. தாமஸ் கேரளத்தில் தொழிலாளர் மந்திரியாக இருக்கிறார்.


அவரைப் பார்த்தவுடனேயே, ''பல தொழிலாளர் இயக்கங்கள் நடத்திய நீங்கள் இப்பொழுது தொழிலாளர் மந்திரியாக இருக்கிறீர்களே?'' என்று கேட்டேன்.

''அதை ஏன் கேட்கிறீர்கள். நான் பதவிக்கு வந்து இருபது நாட்கள் ஆகவில்லை. அதற்குள் உண்ணாவிரதம் ஆரம்பமாகி விட்டது. இன்னும் பதினைந்து நிமிஷங்களில் உண்ணாவிரதம் இருப்பவரிடம் ஓடிப் போய் அவர் குறைகளைக் கேட்டு அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி கேட்டுக் கொள்ளப் போகிறேன். கவர்னர் பிரசங்கத்துக்குக்கூட நான் இன்று இருப்பதற்கில்லை!'' என்றார்.

''உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறீர்களா?'' என்று கேட்டேன்.

''ஓ, நிச்சயம் வெற்றி கிட்டும்.''

சர்க்கார் காரியாலயத்தில் கேரள மந்திரிகள் வரிசையாக உட்கார்ந்திருக்கும் அறைகள். ஒவ்வொரு மந்திரியின் அறையின் முன் அவர் பெயரும், நிர்வகிக்கும் இலாக்கா பெயரும் எழுதியபலகைகளைப் பார்க்கலாம்!



"எப்படி நம்புகிறீர்கள்? ஒருவேளை உண்ணுவிரதம் இருப்பவரும் கம்யூனிஸ்டோ?"

"இல்லை; அவர் பி. சோ. கட்சியைச் சேர்ந்தவர்" என்றார் சிரித்துக்கொண்டே.

பிறகு அவர் தொடர்ந்து கூறினார்: "பல தொழிற் கூடங்கள் ஏற்படுத்த முயன்று வருகிறோம். அவற்றின் நிர்வாகப் பொறுப்பில் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். கேரள நாட்டு மக்களின் முக்கியமான தொழில் நார். அது 1951—52 ஆண்டுகளில் மூன்று கோடி ரூபாய் வரை வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்து வந்தோம். அது வர வரக் குறைந்து விட்டது. மீண்டும் அதற்கு மார்க்கெட் கண்டுபிடிக்க முயன்று வருகிறோம்!"

"எங்கெல்லாம் ஏற்றுமதி செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்!"

"அமெரிக்கா, பிரிட்டன்...."

"நீங்கள் கம்யூனிஸ்டுகள் பதவிக்கு வந்திருப்பதால் ருஷ்யாவில் உங்களுக்கு நல்ல மார்க்கெட் கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே!"

"கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு வர்த்தகத் தூதுகோஷ்டி போகப் போகிறது! அவர்கள் ஏதாகிலும் மார்க்கெட் கண்டுபிடிக்கலாம். ருஷ்யாவுக்கும் நமக்கும் ஏற்கனவே வர்த்தகத் தொடர்பு இருப்பதால், அவர்கள் எங்கள் கேரள நாரை வாங்கலாம்!" என்று ராஜதந்திரமாகப் பதில் சொல்லிவிட்டார்.

உண்ணுவிரதம் இருப்பவரைத் தடுத்து நிறுத்த ஓடும் மந்திரியை இன்னும் தாமதிக்கச் செய்வது தவறு என்று அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தேன்; மறு நாள், உண்ணுவிரதம் இருந்தவர் தமது விரதத்தை நிறுத்தி ஆரஞ்சுப் பழ ரஸத்தைச் சாப்பிட்டதாகப் பத்திரிகையில் படித்துத் தெரிந்து கொண்டேன்.

பழைய சென்னை சட்டசபையில் எதிர்க் கட்சி அங்கத்தினராக இருந்த திரு வி. ஆர். கிருஷ்ணய்யர் இப்பொழுது கேரள ராஜ்யத்தில் சட்ட மந்திரியாக இருக்கிறார். இவர் சுயேச்சை அங்கத்தினராகக் கேரள சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

திரு வி. ஆர். கிருஷ்ணய்யர் மந்திரியாக நியமிக்கப்பட்டதும் கேரள ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு ஜெயிலுக்கும் போய் வர ஆரம்பித்தார். அதிலிருந்தே சிறைச் சட்டங்களைச் சீர்திருத்தப் போகிறார் என்பது தெளிவாயிற்று. அதையே நேரில் பார்த்தபோதும் சொன்னார். அதைவிட அவர் முக்கியமாகக் கருதுவது, "நிலச் சட்டச் சீர்திருத்தம்" என்பது பேச்சிலிருந்து தெரிந்தது.

"நில சம்பந்தமான சட்டங்கள் பாலக்காட்டில் ஒரு மாதிரி யிருக்கின்றன; கொச்சியில் வேறொரு மாதிரி; திருவாங்கூரில் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றன. ஆகவே கேரள ராஜ்யம் முழுமைக்கும் ஒரே மாதிரியான நிலச் சட்டத்தைக்கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியம். அதில்தான் நான் ஈடுபட்டிருக்கிறேன்" என்றார்.

• • •

கடைசியாக, சென்னைப் பத்திரிகை நிருபர்களைப் பற்றியும் மிகவும் பாராட்டி நாலு வார்த்தைகள் சொன்னார். அதைக் கேட்டு யார்தான் சந்தோஷப்படாமலிருக்க முடியும்?

கேரள மந்திரிகளுக்குள் வயதிலும் அநுபவத்திலும் தோற்றத்திலும் தாத்தாவாக விளங்குபவர் சுகாதார மந்திரி டாக்டர் ஏ. ஆர். மேனன் அவர்கள். ஆனால் வயதில் மூத்தவரே யொழியப் பண்பில் குழந்தையைவிட எளிமையாகப் பழகுகிறார்.

டாக்டர் ஏ. ஆர். மேனன் பழைய காங்கிரஸ்காரர். காங்கிரஸில் மலிந்து விட்ட ஊழலைக் கண்டு பொறுக்காது சுயேச்சை அங்கத்தினராகத் தேர்தலில் நின்று கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் வெற்றி பெற்றவர். பிரசித்தி பெற்ற டாக்டர். இவரது செயல் திறமையையும் நேர்மையையும்பற்றிப் பொதுவாக மலையாளிகள் மிகப் புகழ்ந்து பேசுகிறார்கள். இவர் இலாக்கா எப்படி வேலை செய்கிறது என்பது அன்று திருவாங்கூரிலிருந்து சென்னைக்குத் திரும்பும்போது என்னுடன் வந்த ஒரு சகப்பிரயாணி கூறியதிலிருந்து வெகு தெளிவாகத் தெரிந்தது.

முன்பெல்லாம் சர்க்கார் ஆஸ்பத்திரி யென்றால் லஞ்சம் கொடுத்தால்தான் நல்ல மருந்து கொடுப்பார்களாம். சர்க்கார் டாக்டரை ஆஸ்பத்திரியில் பார்த்தால் வீட்டுக்கு வரச் சொல்வார்களாம். வீட்டுக்கு வரச்சொன்னால் காணிக்கை வேண்டும் என்று பொருளாம். இந்த நிலை அடியோடு மாறிவிட்டதாம்.

மக்கள் விரும்பும் நல்ல ஆட்சி கேரளத்தில் நடைபெறுகிறது என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

மேலே குறிப்பிட்டுள்ள மந்திரிகளைத் தவிர ரெவின்யூ மந்திரி ஸ்ரீமதி கௌரி அவர்களையும், நிதிமந்திரி திரு அச்சுதமேனன் அவர்களையும் பார்த்தேன். அவர்களிடம் பேசியதை விவரிக்கத் தொடங்கினால் கட்டுரை இன்னும் நீளும். நிலத்தில் சாகுபடி செய்பவனுக்கே நிலம் உரிமையானது என்ற கொள்கையைச் சட்டம் கொண்டு வந்து அமுலாக்கத் திட்டமிட்டு வருகிறார்கள். முதலில் சர்க்கார் நிலங்களில் சாகுபடி செய்பவர்களுக்கு நில உரிமை அளிக்கப் போகிறார்கள் என்று அறிகிறேன். தொழிலாளர்களுக்குத் தினம் ஒரு டம்ப்ளர் அளவு மீன் எண்ணெய் வழங்க உத்தரவு இட்டிருக்கிறார்கள். கிராம அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்தி யிருக்கிறார்கள்; தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கேரள ராஜ்யத்தின் கம்யூனிஸ்ட் மந்திரிகள் என்ன காரியம் செய்தால் பெருவாரியான மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்று சிந்தித்து வேலை செய்து வருகிறார்கள். பெருவாரியான மக்களின் கற்பனையை, நல்லெண்ணத்தைப் பெறக் கூடிய காரியங்கள் பல பதவிக்கு வந்த இருபது நாட்களிலேயே செய்து கேரள மக்களின் அன்புக்குப் பாத்திரராகி விட்டார்கள்.

ஏப்ரல் 27-ம் தேதி யன்று மாலை கேரள கவர்னர் திரு ராமகிருஷ்ணராவ் அவர்கள் தமது சர்க்கார் செய்யத் திட்டமிட்டுள்ள காரியங்களின் ஜாபிதாவையே கவர்னர் பிரசங்கம் என்ற பெயரில் நிகழ்த்தினார். அத்துடன் கேரள மந்திரிகளின் சுறுசுறுப்பையும் ஆர்வத்தையும் பார்க்கும்போது அவர்கள் திட்டமிட்டுள்ள காரியங்கள் யாவும் நிறைவேற்றியே தீருவார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

மாயா பஜார்

மாயாபஜார்கதைதெரிந்தவர்கள் இதற்கு விமரிசனம் ஒரு கேடா என்று ஒரே வார்த்தையில் அபிப்பிராயம் தெரிவித்து விடுவார்கள்.

மாயா பஜார் கதை புராணக் கதை; பாகவதர்கள் இதை ''வத்ஸலா கல்யாணம்'' என்ற பெயரில் காலட்சேபம் செய்வார்கள்.

''மாயா பஜார்'' படத்தில் நடிப்பு, பாட்டு, வசனம் முதலிய அம்சங்களைவிடப் படப் பிடிப்பைத்தான் (போட்டோகிராபி) பாராட்ட வேண்டும். ஏராளமான மந்திர தந்திரக் காட்சிகள் இந்தப் படத்தில் மலிந்து கிடக்கின்றன. இந்தக் காட்சிகள் சிரமப்பட்டுச் சிறந்த முறையில் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. அதற்கு அந்தப் போட்டோக் கலைஞரை அவசியம் பாராட்டியாக வேண்டும்.

மாயா பஜார் படத்தின் நடிகர்களில் சாவித்திரிக்குத்தான் முதல் ஸ்தானம், அவர் வத்ஸலாவாக மிகவும் கச்சிதமாக நடிக்கிறார். அதுவும் மாய வத்ஸலாவாக அவர் நடிக்கும் போது புது சாவித்திரியாகத் தோற்றம் அளிக்கிறார். ஆண்மை கலந்த திமிர் நடை, அட்டகாசச் சிரிப்பு, ஆரவாரப் பேச்சு எல்லாம் கடோத்கஜன்தான் மாய வேலையில் வத்ஸலாவாக உருவம் எடுத்திருக்கிறான் என்னும் கதையின் அடிப்படைக் கருத்தை வெகு அழகாக விளங்க வைக்கிறது.

நடிப்பில் சாவித்திரிக்கு அடுத்தபடியாகப் பாராட்டப் படவேண்டியவர் இந்தப் படத்தில் நம்பியார்தான்.

வஞ்சகச் சூதாட்டத்தினால் துரியோதனனுக்கு வெற்றி தேடித் தந்த சகுனி மாமாவாக நடிக்கிறார் நம்பியார். தாடியுடன் இருந்த அவர் முகத்திலிருந்து அவரை யார் என்று முதலில் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் இதுவரையில் நடித்திருக்கும் எந்தப் படத்திலும் இவ்வளவு பாவ பூர்வமாக நடித்ததில்லை என்றே சொல்லலாம்.

அடுத்தபடியாக, கடோத்கஜனாக நடிக்கும் எஸ். வி. ரங்காராவ் சக்கைப்போடு போட்டிருக்கிறார். கம்பீரமான அவரது தோற்றம் அந்தப் பாத்திரத்துக்கு மிகவும் உதவி செய்திருக்கிறது. லட்டு, ஜிலேபி, பேணி முதலிய தின்பண்டங்களை மடமட வென்று விழுங்கும் தந்திரக் காட்சியில் அவரைப் பார்த்த போது, 'நடிப்பிலும் யாரையும் இதே மாதிரி இவர் அநாயாசமாக விழுங்கிவிடக் கூடியவர்' என்று தீர்மானித்தேன்.

இந்தப் படத்தில் அதிகம் நடிக்காமல் தோற்றத்தினாலேயே யாவரையும் கவர்ந்திருப்பவர் என். டி. ராமராவ். ஸ்ரீ கிருஷ்ணர் வேஷம் தாங்கியிருக்கும் அவர் சாக்ஷாத் கிருஷ்ண பகவானாகவே காட்சியளிக்கிறார்.

கடோத்கஜனின் கொடிய ஆயுதங்களும் அபிமன்யுவின் அம்புகளும் 'வானவீதியில் நடத்தும் தீபாவளிப் போர் பிரமாதமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது.


வழக்கமான காதல் கட்டத்தைத் தவிர ஜெமினி கணேசன் கிடைத்த சில சந்தர்ப்பங்களிலும், 'மாமா கிருஷ்ணனும், அண்ணா கடோத்கஜனும் இருக்கும்போது நமக்கு என்ன கவலை' என்று சும்மா இருந்துவிட்டார்!

திரைக் கதையின் வில்லனாகவும் ஹாஸ்யப் பகுதியின் ஆதரவாளராகவும் இருப்பவர் தங்கவேலு. அவர் துரியோதனன் புதல்வன் இலக்கண குமாரனாக வருகிறார். அவர் சிரிப்பு மூட்ட முயன்றிருக்கிறார். ஆனால், பாவம்!

பாராட்ட வேண்டிய காட்சிகள்: துவாரகையில் இருந்த வண்ணம் கண்ணன் திரௌபதிக்கு வண்ணச் சேலைகளை வழங்கும் காட்சி; அபிமன்யுவும் வத்ஸலாவும் வெண்ணிலவில் படகில் சென்றதைக் கேள்வியுற்ற பலராமரும் ரேவதியும் கோபத்தோடு ஆற்றங் கரைக்கு வருகிறார்கள். கிருஷ்ணன், வத்ஸலாவையும் அபிமன்யுவையும் படகிலிருந்து அனுப்பி விட்டு ருக்மிணியுடன் படகில் செல்கிறார். கிருஷ்ணனையும் ருக்மிணியையும் 'இத்தனை வயதாகியும் ருக்மிணிக்கு இந்த விளையாட்டுக்களில் ஒன்றும் குறைவில்லை' என்று பரிகாசமாகப் பேசிவிட்டு, பலராமரும் ரேவதியும் படகில் செல்கிறார்கள். இந்தக் காட்சி மிகவும் ரஸிக்கத்தக்கதா யிருக்கிறது.

மாய வேலைகளில் செலுத்திய கவனத்தைச் சிறிது 'எடிட்டிங்'கிலும் செலுத்தி யிருந்தால் படம் பல இடங்களில் அலுப்புத் தட்டாமலிருந்திருக்கும்.

பாட்டு, வசனங்களைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிட எதுவும் இல்லை. நல்ல படப்பிடிப்புக்காகவும், காட்சிஜோடனைக்காகவும் போய்ப் பார்த்து ரஸிக்கக் கூடிய படம்தான் மாயா பஜார்! குழந்தைகளுக்குப் பிடித்த படம். —காந்தன்.




ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
ஆசைக் குழந்தைகளுக்கு
அருமைப் பவுடர்
Johnson's
BABY
POWDER
Johnson & Johnson
இலவச புத்தகம்: ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது தமிழ் பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிட்டு எழுதவும்.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 36-B பம்பாய்

சூடாகவோ, குளிர்ச்சியாகவோ இரண்டுமே நல்லதுதான்!

எந்தப் பருவங்களிலும் 'ஓவல்டின்'னின் தன்மைகள் உங்களுடையது. ஏனெனில், இந்த ருசிமிக்க ஆகார-பானத்தை சூடாகவோ அல்லது குளிர்ச்சியாகவோ சீதோஷ்ண நிலைக்கு தகுந்தவாறு அளிக்கலாம். உங்களுக்கு வெப்பமாயிருக்கும்போது 'சூடான 'ஓவல்டின்' புத்துணர்ச்சியளித்து குளிர்ச்சியை அளிக்கிறது.

இயற்கையின் மிகச்சிறந்த உணவுகளினின்றும் தயாரிக்கப்பெற்று அதிகப்படி வைடமின்களுடனும் கூடிய 'ஓவல்டின்' சூடாகவோ குளிர்ச்சியாகவோ உட்கொள்ளும்போது அதே நல்ல ஊட்டமளிக்கும் தன்மையுடனேயே விளங்குகிறது.



ரேடியோ சிலோனில் ஓவல்டின் அமெச்சூர் நேரங்களைக் கேளுங்கள்: (ஷார்ட் 41.72 மீட்டர்கள்) சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8.30 மணி வரை. (ஆல்வேவ் - 9520 கிலோ சைக்கிள்ஸ், 31 மீட்டர்கள்) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 மணிவரை.



பிரதியொரு டின்னும் ஆரோக்கிய மயமான

ஓ வ ல் டி ன்

விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

IV-502

மாதர்குல திலகங்கள்



சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மையார் அவர்கள், மாதர் குலத்துக்கு ஆற்றி வரும் தொண்டு பிரசித்தமான படியால், அவருடைய வாழ்க்கை வரலாறுகளை எடுத்தெழுதுவதைப் போன்ற கடினமான காரியம் வேறெதுவும் இருப்பதற்கில்லை. எல்லோருக்கும்தெரிந்த பிரக்யாதிபெற்ற சேவையாளர் அவர். அறிமுகம் செய்விக்க வேண்டிய அவசியமில்லாதவர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற ஒரே லட்சியத்துடன் சென்னையின் புகழ் மிக்க சாரதா வித்தியாலயம், அநாதை ஆசிரமம் இவற்றை ஸ்தாபித்து அவற்றைச் சிறப்பாக நடத்தி வருபவர். சாரதாவித்தியாலயம், அநாதைகள் இல்லம் இவற்றின் உதவி மூலம், ஆயிரக்கணக்கான பெண் குழந்தைகளும், ஸ்திரீகளும் கல்விப் பயன் பெற்று, வாழ்க்கை நடத்தும் வாய்ப்புகள் பெற்று நாட்டின் பல இடங்களிலும் பெரிய பதவிகள் வகித்து வருகிறார்கள்.

அம்மையார் வசம் ஒப்புவிக்கப்பட்ட பால் மணம்மாறாத திக்கற்ற பச்சிளம் பெண் குழந்தைகள் கல்வி கற்று, வளர்ந்து, பெருங் குணம்வாய்ந்த குடும்பத் தலைவிகளாகப்பரிணமித்து வருகிறார்கள். தாங்கள் எங்கிருந்தாலும் அவர்கள் எல்லோரும், குடும்ப சகிதமாகக் குழந்தை குட்டிகள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ பல முறையோ தங்களுடைய பிறந்தகத்துக்கு வருவதைப் போல், சாரதா வித்யாலயம் வருகிறார்கள். அங்கு தாய்மையே உருக்கொண்டு விளங்கும் சுப்புலக்ஷ்மி அம்மையார் அவர்களைச் சூழ அமர்ந்து உரையாடி ஆசிபெற்றுச் செல்கிறார்கள். இப்படி வந்து செல்லும் மக்களிடையே எல்லா வகுப்பாரையும் பார்க்கிறோம். இத்தகைய அற்புதமான குண விசேஷங்கள் வாய்க்கப் பெற்ற அம்மையார் அவர்களுக்குச் "சகோதரி சுப்புலக்ஷ்மி" என்ற பெயர் ஏற்பட்டு விட்டாலும், உண்மையில் அவர் "அன்னை சுப்புலக்ஷ்மி" என்ற பெயருக்கே மிகவும் பொருத்தமானவர். ஏனெனில் திக்கற்ற பெண்களுக்கும், ஏழை எளிய பெண்களுக்கும் அவர் அன்னையாகவே விளங்கி வருகிறார்.

சகோதரி சுப்புலக்ஷ்மி அவர்கள் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கமாக எழுதுவதென்பது அசாத்தியமான காரியமாகும். இந்தத் தவிப்புகளுக்கெல்லாம் இடமின்றி ராஜாஜி அவர்கள் ஒரு சில வார்த்தைகளிலேயே சகோதரி சுப்புலக்ஷ்மி அவர்களுடைய சரித்திரத்தை எடுத்துரைத்து விட்டார்கள். 1953-ம் ஆண்டு, நவம்பர் மாதம் 'சகோதரி' யாரின் உருவப்படத்தை வித்யாலயத்தில் திறந்து வைக்கும்போது, "சகோதரி சுப்புலக்ஷ்மி அவர்களுடைய சேவை மகத்தானது. இந்தியாவிலேயே வேறு யாரும் அவருக்கு இணையாக இவ்வாறு சேவை செய்தது கிடையாது. எத்தனையோ படத்திறப்பு விழாக்கள் நடத்தியிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு எனக்குக் கிடைத்த வாய்ப்புக்குச் சமமான பாக்கியம் வேறு எங்கும் கிடைத்ததில்லை. மதிப்பு மிக்க அம்மையார் அவர்கள் படத்தை நான் திறப்பதற்குப் பதிலாக அவர் என்னுடைய படத்தைத் திறந்து வைக்கக் கூடாதா என்று நான் நினைக்கிறேன். அம்மையார் அவர்களின் வாழ்க்கை தேசத்துக்கே பெருமை அளிப்பதாகும்" என்று கூறினார். அம்மையாரின் வாழ்க்கை வரலாறுகளை மேற்படி பொன்மொழிகளிலே விவரித்து விட்டார். அதைவிட விரிவான வரலாறு எதற்கு? சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மையார் அவர்கள் இந்த 71-வது பிராயத்திலும் சுறுசுறுப்புடன், எப்போதும் அன்பு ததும்பும் முகத்துடன், தெய்வபக்தியில் ஈடுபட்டவாறே சாரதா வித்தியாலயம், மயிலை சாரதா மாதர் சங்கம், மயிலை மாதர் சங்கம் முதலிய ஸ்தாபன வளர்ச்சியில் பாடுபட்டு, வருகிறார்கள். மாதர் குலத்துக்குச் சேவை செய்வதன் மூலம், உலகமாதாவின் அநுக்ரஹத்துக்குப் பாத்திரமாகிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை, "சகோதரி" அவர்கள் முகத்தில் பொலிவு பெற்று விளங்குவதைக் காணலாம்.

கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ்

2

சர்வ சமய சமத்துவ நெறியை நமக்குக் காந்தி யடிகள் காட்டினார். அதற்காகவே தம் உயிரையும் அர்ப்பணம் செய்து விட்டார். அவர் தந்த அந்த மாற்றறியாத பசும் பொன்னைக் காத்து உய்வோமாக.

எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும் எந்த மதத்தினரிலும் சில ஜீவன் முக்தர்கள் தோன்றி விளக்கு அணையாமல் காத்து வந்திருக்கிறார்கள்.

லாரென்ஸ் என்ற கிறிஸ்துவத் துறவி இன்றைக்கு முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். பூரண ஞானம் பெற்ற முனிவராகச் சாதாரண மனிதனுடைய வடிவத்தில் விளங்கினார். அவருடைய குணாதிசயங்களையும் உபதேசங்களையும் நம்முடைய நாட்டுப் பரம்பரை மார்க்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் படித்து அறிவது மிக நன்மை தரும்.

லாரென்ஸ் துறவியின் காலத்தில் கத்தோலிக் என்றும் நவீன மார்க்கம் என்றும் கிறிஸ்தவர்களில் பேதமில்லை. எல்லாரும் கத்தோலிக்கர்களாகவே இருந்து வந்தனர். கார்மேல் துறவி மடத்தில் லாரென்ஸ் என்பவர் தீட்சை பெற்ற துறவிகளுக்குப் பரிசாரகம் செய்து வந்தார். இந்தப் பரிசாரகனுடைய குணமும் ஞானமும் பக்தியும் மிகப் புகழ் பெற்றுப் பரவிற்று. பல பெரியோர்கள் அவரைக் கண்டு பேசியும் உபதேசம் பெற்றும் வந்தனர். அப்படி உறவாடிய சிலர் எழுதி வைத்த குறிப்புக்களிலிருந்தும், லாரென்ஸ் எழுதிய நான்கைந்து கடிதங்களிலிருந்துமே துறவி லாரென்ஸைப் பற்றி நமக்குத் தெரிய வருவதெல்லாம்.

இவர் பிறந்த வருஷம் சரியாகத் தெரியவில்லை. கி. பி. 1611ம் ஆண்டாக இருக்கலாம் என்று மட்டும் தெரிய வருகிறது.



பிரான்ஸ் தேசத்தில் லொரேயின் என்கிற பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் தெய்வ பக்தியோடு வாழ்ந்த ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். இவருடைய பெயர் நிக்கோலொஸ் ஹெர்மன். கார்மேல் ஆசிரமத்தில் சேர்ந்த போது அவருக்கு அங்கே லாரென்ஸ் என்கிற பெயர் தந்தார்கள். பதினெட்டாவது வயதில் சிப்பாயாக ராணுவத்தில் சேர்ந்து காயமடைந்தபடியால் அந்த உத்தியோகத்தை விட்டு விட்டு பிரெஞ்சு ராஜ்ய கஜானு அதிகாரி வீட்டில் சாதாரண குற்றேவல் புரியும் சேவக வேலை பார்த்து வந்தார்.

'' ஒரு நாள் கடும் பனிக்காலத்தில் மரங்கள் எல்லாம் கருகிப் போய் இலையுதிர்ந்து நிற்பதைப் பார்த்தேன். பனியில் கருகிப்போன இந்தத் தாவரங்கள் எல்லாம் பிறகு புத்துயிர் அடைந்து துளிர்த்து, பூவும் காயுமாகப் பொலிவு அடையப்போவதை எண்ணித் திடீர் என்று பராசக்தியைப் பற்றி அறிவும் உணர்ச்சியும் அடைந்தேன். அது முதற் கொண்டு என் உள்ளம் கடவுளைத் தொடர்ந்து சென்றது'' என்று தம்மைப் பற்றி ஒரு சமயம் சொல்லியிருக்கிறார்.


எல்லாருக்குமே ஞானோதயம் ஏற்படுவதற்கு ஏதேனும் ஒரு நிகழ்ச்சியோ, காட்சியோ இந்த விதமாக நிமித்த காரணம் ஆகிறது. அதுவும் ஆண்டவன் அருளே.

ஐரோப்பாவில் கிறிஸ்துவ மக்களுக்கு லாரென்ஸ் துறவி போதித்த நெறியும் பகவத் கீதை உபதேசத்தில் கண்ணன் காட்டிய வழியும் ஒன்றே என்பதைப் பார்த்து நாம் வியப்பும் பெருமையும் நிச்சய புத்தியையும் அடையலாம்.

உளன் கண்டாய் நன்னெஞ்சே
உத்தமன் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார்
உள்ளத்து உளன்கண்டாய்
வெள்ளத்தின் உள்ளானும்
வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்என் றோர்!

இப்படி முதலாழ்வார் உபதேசித்த நெறியே கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் போதித்ததும்.

'' பகவான் நெருங்கி நிற்கிறான். அவனைப் பக்கத்தில் நிறுத்திக் கொண்டு அந்தரங்கத் தோழனுக்கிக் கொள். எந்தச் சமயத்திலும் அவனை உன் கண்ணுக்கு முன் வைத்துக் கொண்டு செய்யும் எல்லாக் காரியங்களையும், எண்ணும் எல்லா எண்ணங்களையும் அவனைத் துணைவனாக வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துவதைத் தினசரிவழக்கப்படுத்திக் கொள் '' என்று ஒரு கடவுள் கூட்டுறவு யோக மார்க்கத்தை லாரென்ஸ் உபதேசித்தார்.



ாலவல்லியின் தியாகம்

கி.ரா.கோபாலன்

அத்தியாயம் 21

இதென்ன விரதம்?



சோழ இளவரசி அருந்திகைப் பிராட்டி பிக்ஷுணிக் கோலத்திலிருந்த திருபுவனியைக் கண்டு திகைப்படைந்ததையும், திருபுவனியும் அருந்திகையைக் கண்டு திகைப்படைந்தவள் போல் காணப்பட்டதையும் இடங்காக்கப் பிறந்தார் ஒரு விதமாகப் புரிந்து கொண்டார். அருந்திகையின் முகத்தைப் பார்த்தபோது அவரை அவ்விடத்திலிருந்து வெளியே செல்லும்படி அவள் சமிக்ஞை காட்டினாள். இடங் காக்கப் பிறந்தாரும் அதை அறிந்து கொண்டவராக, ''நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கள். எனக்குத்! கொஞ்சம் வேலையிருக்கிறது. உத்தரவு கொடுங்கள்'' என்று அருந்திகையை நோக்கிக் கேட்கவும், அவளும் தலையசைத்தாள். இடங்காக்கப் பிறந்தார் அந்த இடத்தை விட்டு அகன்றார்.

அவர் சென்றபின் அருந்திகைப் பிராட்டி சாளரத்துக்குச் சமீபமாக நின்று கொண்டிருந்த திருபுவனியை நெருங்கி அவளுடைய மெல்லிய தோள் மீது அன்போடு தொட்டு, ''உன்னை எங்கோ பார்த்த நினைவாக இருக்கிறது. ஆனால் எங்கே பார்த்தோம் என்றுதான் தெரியவில்லை'' என்றாள்.

''எனக்கும் உங்களை எங்கோ பார்த்த நினைவாகத்தான் இருக்கிறது. உங்களைப் போல் எனக்கும் உங்களை எங்கு பார்த்தோம் என்பதுதான் புரியாமலிருந்தது. அப்புறம் புரிந்து விட்டது!'' என்



றான் திருபுவனி அன்போடு. அருந்திகை சிரித்துக் கொண்டே, ''நாம் ஏதாவது கனவில் சந்தித்திருப் போமோ?'' என்று கேட்டாள்.

''இருக்கலாம். நான் வேண்டுமானால் உங்களைக் கனவில் சந்தித்திருக்கலாம். ஆனால் நீங்கள் என்னைச் சந்தித்திருக்க நியாயமில்லையே?'' என்றாள் திருபுவனி.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.

''ஏன் அப்படிச் சொல்கிறேனா? நான் ஒரு சாதாரணப் பெண். என்னைப் பற்றி உங்களைப் போன்றவர்கள் நினைப்பதற்கு நியாயமில்லை. ஆனால் நீங்கள் ஒரு அரசகுமாரி. அதிலும் புகழ்பெற்ற சோழ பரம்பரையைச் சேர்ந்தவர்கள். உங்களைப் பற்றி இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் நினைப்பது சகஜம்தானே? உங்களைப் பற்றியும், பெருமை மிகுந்த உங்கள் குலத்தைப் பற்றியும் எத்தனையோ தடவைகள் நான் நினைத்திருக்கிறேன். அந்த நினைவின் காரணமாக எவ்வளவோ தடவைகள் கனவு கண்டிருக்கிறேன். அந்தக் கனவுகளில் நீங்கள் வந்திருக்கலாமல்லவா?''

அருந்திகை ஒரு பெருமூச்சு விட்டாள். பிரகாசம் நிறைந்த அவளுடைய முகம் சிறிது வாட்டமடைந்தது. ''எங்கள் குலத்தைப் பற்றியும் எங்களைப் பற்றியும் நினைப்பவர்களும் இன்னும் உலகத்தில் இருக்கிறார்களா? இமயம் போல் தலை நிமிர்ந்து நின்ற சாம்ராஜ்யமே அழிந்து அந்த இடத்தில் சிறிய மணற் குன்று போல், பழையாறை நகர்ச் சோழர்களென்று பெயர் சொல்லிக் கொண்டு நாங்கள் இருந்து வருகிறோம். இந்தச் சிறு மணற்குவியலையும் நாற்புறமும் வெள்ளம் போல் வந்து அழித்துவிட எத்தனையோ பேர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் தஞ்சையிலிருந்து வந்த புலிப்பள்ளி கொண்டார் உங்கள் குலத்தின் சம்பந்தத்தை விரும்புவதும் எங்களுக்கு ஆதரவாக இருக்கும் சிறு சந்ததியையும் அழித்துவிடச் செய்யும் முயற்சியாகத்தான் நான் நினைக்கிறேன்'' என்றாள்.

இதைக் கேட்டதும் திருபுவனியின் முகத்திலும் ஒருவாட்டம் ஏற்பட்டது. அவள் அருந்திகையைச் சமாதானம் செய்கிறவள் போல் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, ''உங்களைச் சூழ்ந்த ஆபத்துக்களை நீங்கள் சொல்வதிலிருந்து நான் ஒருவாறு உணர்ந்து கொண்டேன். ஆனால் உங்களை நாடு மறந்து விட்டதாக நீங்கள் நினைத்து ஆயாசம் அடைய வேண்டாம். உங்களுக்கு எதிரிடையாக யார் யார் சூழ்ச்சி செய்கிறார்களோ,




அதைப் போல உங்களுக்கு ஆதரவாக எதிரிகளின் சூழ்ச்சிகளைக் கவிழ்க்கவும் சிலர் சூழ்ச்சி செய்து கொண்டுதான் இருப்பார்கள் என்பதைத் தாங்கள் மறக்க வேண்டாம். இன்று இச்சோழ நாடு எப்படியிருக்கிறதென்று நினைத்துப் பாருங்கள். மிகுந்த கலக்கத்துக்கு உள்ளாகியிருக்கிறது. சரியான அரசர்கள் இல்லை. சிறு சிறு அரசர்களாக இருப்பவர்களும் பெருத்த படை பலம் கொண்ட பல்லவர்களுக்கும், பாண்டியர்களுக்கும் அடங்கியவர்களாக இருக்கிறார்கள். பாண்டியர்களும் பல்லவர்களும் பகை கொண்டு ஒருவருக்கொருவர் ஈடு இணையின்றி உலகெங்குமே தங்களுடைய அரசாட்சியை நிலை நிறுத்திவிட மாட்டோமா என்ற ஆணவத்தில் இருக்கிறார்கள். இதனால் எந்த நேரத்திலும் போர்முழக்க எச்சரிக்கையாகவே இருக்கிறது. பாண்டிய நாட்டுக்கும் பல்லவ நாட்டுக்கும் இடையே உள்ள பொன் கொழிக்கும் இந்தப் பூமியில்தான் பிணங்களைக் குவிக்கிறார்கள். சோழ வளநாடு ஆக்கிரமிப்பு வெறி கொண்ட மன்னர்கள் மோதிக் கொள்வதற்குரிய சரியான போர்க்களமாகி விட்டது. ஊருக்கு ஊர் தனித்தனியாக இருந்து ஆளும் மன்னர்கள் எல்லாம் சமயம் பார்த்து வலுத்த கையோடு சேர்ந்து போராடித் தங்கள் சிறு நலனைப் பாதுகாத்துக் கொள்ள நினைக்கிறார்களே தவிர, மக்களைப் பற்றி நினைப்பதில்லை. இந்த நிலையில் மக்கள் என்ன



கோடக் பிலிம்கள் உபயோகித்தால்
வர்ணப் படங்கள் எடுப்பது

எந்தக் காமிராவானாலும் சரி, கோடக் வர்ண பிலிம் கொண்டு, சாதாரண படங்கள் எடுப்பதுபோல், கவர்ச்சிகரமான வர்ணப் படங்களை சுலபமாக எடுக்கலாம். பல வருஷ அனுபவத்தின் பலனாகத் தயாரான 'கோடக்ரோம்' பிலிம் மினியேச்சர் காமிராக்கள் மற்றும் ஹோம் மூவிகளுக்கும், புதிய, அற்புதமான வேகமுள்ள 'எக்டாக்ரோம்' பிலிம் ஸ்டாண்டர்ட் ஸைஸ் காமிராக்களுக்கும் ஏற்றது.

அடுத்த தடவை கோடக் வர்ண பிலிம்களை உபயோகித்து, அற்புதமான படங்கள் எடுத்து மகிழுங்கள்!



'எக்டாக்ரோம்' பிலிம்
சாதாரண பிலிம் ஸைஸ்களான, 135, 120 மற்றும் 620 ஸைஸ் சுருள்களாக கிடைக்கும். மற்றும் கட் பிலிம் ஸைஸ்களிலும் கூட கிடைக்கும்

'கோடக்ரோம்' பிலிம்
மினியேச்சர் காமிராக்களுக்கு ஏற்ற 135 ஸைஸிலும், ஹோம் மூவிகளுக்கு 8 மில்லி மீட்டர் மற்றும் 16 மில்லி மீட்டர் ஸைஸ்களிலும் கிடைக்கும்

கோடக் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது. கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதும்)

பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

நம்பகமான 'கோடக்' காமிரா மூலம் நீங்கள் எப்



கவர்ச்சிகரமான
மிகவும் எளிது!
"கோடஸ்லைட்" பாக்கெட் வியூவர்
35 மில்லி மீட்டர் டிரான்ஸ்பேரென்
ஸிகளை 4 மடங்கு பெரிதாக்கிக் காண்
பிக்கும். உங்கள் பாக்கெட்டில் வைப்ப
தற்கேற்றவாறு இதை தட்டையாக
மடக்க முடியும். ... ... ரூ. 14/-
"கோடஸ்லைட்" மெரிட் புரொஜெக்டர்
35 மில்லி மீட்டர் டிரான்ஸ்பேரென்
ஸிகளை முழு அளவிற்குப் பெரியதாக
காண்பிக்கும்! ... ... ரூ. 240/-
விலைகளில் விற்பனைவரி அடங்கவில்லை
பொழுதும் நேர்த்தியான படங்களை எடுக்க முடியும்


நிலையில் இருக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கத்தானே வேண்டும்? வறுமையும் துயரும் ஏற்படும் போதுதான் சீரும் சிறப்புமாக இருந்த அக்காலத்தை எண்ணிப் பார்க்கத்தோன்றும். மகோன்னத நிலையில் இச்சோழ மண்டலத்தை ஆண்ட கரிகாலன் மரபினரைப் பற்றி இவர்கள் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தம் உள்ளத்தில் மறுபடியும் இந்நாட்டில் சோழ சாம்ராஜ்யம் ஏற்பட்டுச் செல்வமும் சிறப்பும் கொண்டதாகாதா என்றுதான் நினைக்கின்றனர். இதை எண்ணித்தான் மன ஆறுதல் அடைய வேண்டும். தஞ்சை அமைச்சர் உங்களுக்குச் சிறு ஆதரவாக இருக்கும் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொண்டால் உங்களுக்குள்ள சிறு ஆதரவை அழித்துவிடலாம் என்று நினைத்திருக்கலாம். ஆனால் அவருடைய குமாரரை நான் விவாகம் செய்து கொள்ளச் சம்மதித்தால் அல்லவா அம்மாதிரி நிகழும் என்று எண்ணுவதற்கு? துறவறத்தில் நாட்டம் கொண்ட என்னை அவர் மகனுக்கு மணவாட்டியாக்க நினைப்பது வீண் பிரயாசையாகத்தான் முடியும்!'' என்றாள்.

''திருபுவனி! உனக்குத் துறவறத்தில் தீவிரமாகப் பற்று இல்லை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். உன்னைப் போன்ற இளம் வயதுடைய பெண்கள் உலக இன்ப சுக, மாயைகளிடமிருந்து விலகித் துறவறம் கொள்வது என்பது முடியாத காரியம். அப்படித் துறவறம் பூணுவதும் நியாயமாகாது. உன்னுடைய மனம் தீவிரமாகத் துறவறத்தைப் பற்றிக் கொண்டு நிற்கவில்லை என்பதை இன்று சீவர ஆடைகளையெல்லாம் களைந்து பட்டாடை ஆபரணங்களை அணிந்து கொண்டதிலிருந்து பிறர் அறிந்து கொண்டிருக்க மாட்டார்களா?'' என்றாள் அருந்திகை.

திருபுவனி ஏளனமாகச் சிரித்தாள். ''சீவர ஆடையை விட்டுச் சில நிமிட நேரங்கள் பட்டாடையும், பூஷணங்களும் அணிந்து கொண்டதினால் என் மனதை மாற்றி.விட்டதாகச் சொல்ல முடியுமா? அவைகளை ஏதோ காரணத்துக்காக அணிந்து கொண்டேன். தஞ்சை அமைச்சர் தன் மகன் கோளாந்தகனுக்கு மணம் முடிக்க ஆசை வைத்ததும், மறுபடியும் சீவர ஆடையை அணிந்து கொள்வதுதான் நல்லதென்று பட்டது. அவைகளை அணிந்து கொண்டேன். உடலை மறைக்கும் ஆடைகளைக் கொண்டு உள்ளத்தின் நிலையைத் தீர்மானம் செய்வது மடமையாகும்'' என்றாள் உறுதியான குரலில்.

அருந்திகை சிரித்துக் கொண்டே, ''உண்மை. நீ இப்பொழுது சீவர ஆடையைச் சுற்றிக்கொண்டிருக்கிறாய். இதை வைத்துக் கொண்டு உன் உள்ளத்தின் நிலையை நான் நிர்ணயித்துவிட மாட்டேன். இந்த வேஷத்துக்கும் உன் உள்ளத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்று நான் கருதிவிட மாட்டேன்'' என்றாள்.

''நீங்கள் என்னை எப்படிக் கருதினாலும் சரியே. ஒவ்வொருவரும் நடந்து கொள்வது அவரவர்கள் மனத்தில் கொண்ட லட்சியத்தைப் பொறுத்தது தான். என்னுடைய நிலையைப் பற்றி அதிகமாக என்னைக் கிளறிக் கேட்காதீர்கள். நீங்கள் எனக்கு ஏதேனும் உபகாரம் செய்யநினைத்தால் என் தகப்பனாரிடம் சென்று, 'உங்களுடைய குமாரிக்குத் தஞ்சை அமைச்சரின் மகன் கோளாந்தகனை விவாகம் செய்துவைக்க முயலாதீர்கள்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டுப் போங்கள்!'' என்றாள்.




அருந்திகை சிரித்துக் கொண்டே, ''நிச்சயம் செய்கிறேன். ஆனால் உன்னை வேறு யாருக்குக் கல்யாணம் செய்து வைப்பது என்று கேட்டால் அதற்கும் நான் யோசனை சொல்லத்தானே வேண்டும்?'' என்றாள்.

''சொல்லுகிறேன். 'உங்கள் மகள் புத்த பெருமானின் அறவழிகளில் சென்று கொண்டிருக்கிறாள். அவளை அவ்வழியிலிருந்து தாங்கள் திருப்ப முடியாது. ததாகதரின் பேரொளியில் கலந்துவிட்ட அவளை மறுபடியும் வாழ்க்கையின் மாய இருளில் சிக்க வைப்பது மிகவும் கடினம்' என்று சொல்லுங்கள்'' என்றாள் திருபுவனி.

விளையாட்டாகப் பேசிக் கொண்டு வந்த அருந்திகை அப்பொழுது திருபுவனி சொன்ன வார்த்தைகளை விளையாட்டாகவே எடுத்துக் கொள்ள முற்படவில்லை. உண்மையாகவே அவளுக்குத் துறவறத்தில் தீவிரப் பற்று தான் இருந்தது என்பது நன்கு விளங்கியது. அவளுக்குத் துறவறத்தில் இத்தகைய பக்குவம் எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி நினைக்க அருந்திகைக்குச் சிறிது ஆச்சரியம்தான் ஏற்பட்டது. ''உன் வார்த்தைகள் எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றன. துறவறத்தை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு உனக்கு என்ன நேர்ந்தது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. உன்னைப் போன்ற இவ்வளவு அழகான இளம் வயதுடைய பெண்களையெல்லாம் துறவு மார்க்கத்தில் இழுக்கும் பௌத்த சங்கத்தைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. இது என்ன ஆடை? இது என்ன வேஷம்? இவ்வித ஆடைகளை அணிந்து கொண்டு தலையைச் சடையாக்கிக் கொண்டை போட்டுக் ண்டால உன் யௌவன அழகு குறைந்துவிடுமா? உன்னைப் பார்த்தவர்கள் பக்தியும் அடக்கமும் காட்டுவதை விட உன்னிடம் மோகமும் தாபமும்தான் அதிகமாகக் காட்டுவார்கள். எவரும் இந்தப் பருவத்தில் உன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டதாகக் கருதுவார்களே தவிர, நேராக்கிக்கொண்டதாகக் கருத மாட்டார்கள். உள்ளம் தூய்மையாக இருந்தாலும் உடலழகு உள்ளத் தூய்மையையும் பாழாக்க வழி வகுத்து விடும் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். திருபுவனி! உனக்கு நான் உற்ற தோழியாகி விட்டேன். உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய நான் என்றும் சித்தமாக இருக்கிறேன். என்னிடம் உன் அந்தரங்கத்தைச் சொல்வதில் பிசகு ஒன்றும் இல்லை. உன்னிடமிருந்து விவரமாக எல்லாம் அறிந்து கொள்ளப் பிரியப்படுகிறேன். உனக்கு விருப்பம்இருந்தால் சொல்லு!'' என்றாள்.

திருபுவனி அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே ஒரு பெருமூச்சு விட்டாள். ''என்னுடைய கதையை அறிந்து கொள்ளுவதினால் உங்களுக்கு எவ்விதமான பலனுமில்லை. அவைகளையெல்லாம் உங்களிடம் சொல்ல நான் பிரியப்படவில்லை. அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் எனக்கு உற்ற தோழியாகி விட்டதாக உங்கள் திருவாக்கிலிருந்தே வெளியாகி விட்டது. அப்படியே எனக்கு உற்ற தோழியாகத் தாங்கள் இருப்பதை நான் விரும்புகிறேன். என் தகப்பனார் இடங்காக்கப் பிறந்தார் என்பதைத் தவிர வேறு அதிக விவரம் உங்களுக்கு வேண்டாம். பதினைந்து வருடங்களுக்கு முன்னால் நான் குழந்தையாக இருந்த போது கள்வர்களால் அபகரிக்கப்பட்டேன். பதினைந்து வருடங்களுக்குப்




கல்கெமிகோவின்
காந்தரிடைன்
கூந்தல் தைலம்
மிகவும் சுத்தமான ஆலிவ் ஆயிலும் மற்ற தாவர எண்ணெய்களும் செறிந்த தரமான காந்தரிடைனுடன் விஞ்ஞானமுறையில் கலக்கப்படுகின்றன. இத்தைலம் வழுக்கையை நீக்கி முடி வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது.
இதன் நறுமணம் அலாதியானது. மிகச் சிறந்தது.
5 அவுன்ஸ் அழகான சீசா
கல்கத்தா கெமிகல் கோ. லிட்.,
கல்கத்தா - 29.
தென் இந்திய ஆபீஸ்: 6/149, பிராட்வே, சென்னை-1


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்

பிறகு நான் இந்தக் குடும்பத்துக்கு வந்திருக்கிறேன். இதற்குள் எத்தனை மாறுதல்கள் ஏற்பட்டன? எப்படி எப்படி மாறின என்பவையெல்லாம் விவரிக்க எனக்கு விருப்பமில்லை. நீங்கள் எனக்காக ஏதேனும் இப்பொழுது உதவி செய்ய நினைத்தால், அது என் தகப்பனாரிடம் எனக்கு மணம் முடிக்காமலிருக்கும்படி செய்வதுதான். அதைத்தான் எனக்கு நீங்கள் செய்த பேருதவியாக நினைப்பேன். அத்துடன் துறவு வாழ்க்கையில் உள்ள நான் குடும்பச் சூழ்நிலையில் இருக்கப் பிரியப்படவில்லை. எப்பொழுது நினைக்கிறேனோ அப்பொழுது இங்கிருந்து போய் விடுவேன் என்பதையும் தெளிவாகச் சொல்லுங்கள். என்னைச் சிறையில் அடைப்பது போல் இந்த மாளிகையில் அடைத்திருக்கிறார்கள். அவ்வளவுதானே தவிர, நான் குடும்பத்தாரோடு எவ்வித ஒட்டுதலும் கொள்ளவில்லை. தன்னிச்சையாகப் பறக்கும் என் மனம் எந்தக் கூண்டிலும் அடைபட்டு விடவில்லை. அவர்கள் என் வாழ்க்கை நலனுக்காக ஏதேதோ திட்டம் வகுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் நானும் எனக்காக ஏதேதோ திட்டம் வகுக்கத் தொடங்கியிருக்கிறேன் என்பது பற்றி அவர்களுக்குத் தெரியாது....'' என்றாள்.

அருந்திகை சில நிமிட நேரம் பேசாமல் இருந்துவிட்டு, ''உன் மனத்தை என்னால் திருப்ப முடியாது. ஒரு நாள் என் வார்த்தையைக் கேட்டு நடப்பாய் என்றே நம்புகிறேன். இப்பொழுது நான் உன்னிடம் சொல்லியபடியே உன் தகப்பனாரிடம் சொல்லி விட்டுப் போகிறேன். ஆனால் அவருடைய அபிப்பிராயம் எப்படியோ? எனக்கும் தஞ்சை அமைச்சரின் மகனுக்கு நீ வாழ்க்கைப்படுவதில் சம்மதமில்லை. ஆனால் விவாகமே செய்துகொள்ளாமல் இப்படி பிக்ஷுணியாகவே இருப்பதிலும் பிரியமில்லை. இதை நன்றாக யோசித்து ஒரு முடிவு செய்ய வேண்டியது உன்னுடைய பொறுப்பு'' என்றாள்.

திருபுவனி சிரித்தாள். ''ஆகட்டும்! நான் கடைசியாக உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன். இந்த நாட்டில் என்னுடைய விவாகப் பருவம் கடப்பதற்கு முன் சோழ சாம்ராஜ்யம் ஏற்படுமானால் ஒரு வேளை நான் விவாகம் செய்து கொள்ளலாம்!'' என்றாள்.

அருந்திகைப் பிராட்டி திகைப்பும் வியப்பும் அடைந்தாள். பிறகு, ''நீ அதற்காகத்தான் இந்த பிக்ஷுணிக் கோலம் பூண்டிருக்கிறாயா? இது என்ன கனவு? இது என்ன விரதம்? வேடிக்கையாக இருக்கிறது. இன்று உள்ள நிலையில் உன் விருப்பம் நிறைவேறுமா? இதற்காக நீ ஏன் வாழ்க்கையைப் பாழ்பண்ணிக் கொள்கிறாய்?'' என்றாள்.

''என்னைப் போன்ற இரண்டொருவருடைய வாழ்வு பாழானால் பாதகமில்லை. அதன் மூலமாக இந்தச் சோழ வள நாடு நன்மையடையுமானால் அதைவிட உயர்ந்தது வேறு எதுவுமில்லை!'' என்றாள் திருபுவனி.

அருந்திகை திருபுவனியின் லட்சியத்தையும் தியாக உணர்ச்சியையும் எண்ணி வியந்தாள். தங்கள் குலத்தினர் நாட்டைப் பெருமையுற ஆட்சி செய்ய வேண்டுமென்பதற்காகத் திருபுவனி போன்ற இளம் பெண்கள் வாழ்வைத் துச்சமாக மதிப்பதையெண்ணி அவள் மனம் நெகிழ்ந்தது. திருபுவனி போன்றவர்களின் தியாகத்துக்காக எப்படி நன்றி செலுத்துவது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை. அவள் திருபுவனிக்கு எவ்வித பதிலும் சொல்லாமல் அவளை ஆர்வத்தோடு அணைத்துக் கொண்டு, ''உன்னைப்

உலகில் முதல் ஸ்தானம்

உலக நாடுகளில் உள்ள எல்லா நதிகளையும் விடப் பெரியது அமெரிக்காவில் உள்ள மிஸிஸிபி என்ற அதிசய ஆறுதான். 4300 மைல் நீளமுள்ள மிஸிஸிபியில் நூற்றுக்கணக்கான உபநதிகள் வந்து சேருகின்றன. திடீர் திடீரென்று திசை மாறும் மிஸிஸிபியின் விசித்திரக்கதையைக் கேட்போர் ஆச்சரியத்தில் மூழ்கிவிடுவார்கள்.



அவ்விதம் அந்த ஆறு திசை மாறியதால் அமெரிக்காவில் உள்ள பல மாகாணங்களின் எல்லைகளே மாறிவிட்டன! மிஸிஸிபிநதி சென்ற 1300மைல் தூரம் இன்று சாதாரண பூமியாகக் காட்சியளிக்கிறதென்றால், அந்த நதியின் ஏதேச்சாதிகாரத் தன்மையை உணர்ந்து கொள்ளலாம்! மிஸிஸிபி நதியைப் பின்னணியாகக் கொண்டு புகழ் பெற்ற அமெரிக்க நூலாசிரியர்கள் பல அற்புதமான நாவல்கள் எழுதியுள்ளனர்.

போன்ற தோழி எனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம்தான். இருளடைந்த சோழ பாரம்பரியத்தை மறுபடியும் பிரகாசிக்க வைக்க முயலும் உன்னைப் போன்றவர்களுக்கு நான் எந்த வகையில் நன்றி தெரிவித்தாலும் போதாது. சரி, நான் வருகிறேன். எப்பொழுதும் உன்னுடைய நலனைப் பாதுகாப்பதற்காக நான் எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன் என்பதை நீ நிச்சயம் நம்பலாம். நான் அடிக்கடி உன்னை வந்து சந்திக்காமல் இருக்க மாட்டேன். என்னால் உனக்கு ஏதேனும் காரியமாக வேண்டுமானால் தாராளமாகக் கேட்கலாம். நான் சென்று வருகிறேன்!'' என்று விடைபெற்று வெளியே வந்தாள்.

தம் மகள் திருபுவனியோடு பேசிக் கொண்டிருந்த அருந்திகைப் பிராட்டியின் வரவை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருந்தார் பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தார். அவருடைய மகன் பொற்கோமனும் அங்கே நின்றான்.

அருந்திகை முகத்தில் வருத்தக் குறியுடன் வந்து, ''திருபுவனியுடன் இவ்வளவுநேரம் பேசியும் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. அவளைப் புரிந்துகொள்வதே கடினமாக இருக்கிறது. அவளுக்கு ஏன் துறவறத்தில் இவ்வளவு பற்றுதல் ஏற்பட்டதோ தெரியவில்லை. இவ்வளவு காலமாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்ததால் அவள் மிகவும் அல்லல்பட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் இந்த வயதில் துறவறத்தில் இவ்வளவு பற்றுதல் ஏற்படக் காரணமில்லை. அவளுக்கு விவாகத்தில் பிரியமே இல்லை. குடும்ப மார்க்கத்தில் பற்றுதலே இல்லை. ஒரளவு உங்களுக்காக—உங்கள் மனச் சாந்திக்காகச் சீவர ஆடைகளைக் களைந்து நல்லாடைகளையும் ஆபரணங்களையும் பூட்டிக் கொண்டாள். தஞ்சை அமைச்சரின் புதல்வருக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுத்துவிடப் போவதாகத் தாங்கள் தீர்மானித்திருப்பதை யறிந்ததும், மறுபடியும் துவராடையை யணிந்து கொண்டு விட்டாள். உங்களுடைய பிரயாசை யெல்லாம் வீணானதென்றே நினைக்கிறேன். அவள் நெடு நாட்கள் வரையில் இந்தக் குடும்பத்தில் தரித்திருக்க மாட்டாளென்று தான் தோன்றுகிறது'' என்றாள்.

இதைக் கேட்டதும் பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தாரின் முகம் சுருங்கியது. அவர் மனம் மிகவும் இடிந்தவராக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே, ''இவ்வளவு நாட்களுக்குப் பின்னும் எவ்வளவோ சிரமத்தின் பேரில் என் அருமை மகளைத் தேடிக் கண்டு பிடித்தேன். ஆனால் அவள் சித்தம் இப்படி இருக்குமென்று நான் நினைக்கவில்லை. இதுவும் என் துரதிர்ஷ்டம்தான். அவள் மனநிலையை மாற்ற என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி இனி தீவிரமாக யோசிக்க வேண்டியது தான். நான் புலிப்பள்ளிகொண்டாருக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆவது? அவர் எவ்வளவு ஆவலாக இருக்கிறார் தெரியுமா? அவருடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாமா? அது எவ்வளவு ஆபத்தானது?....'' என்றார்.

''அவள் அபிப்பிராயப்படியே நடந்தால் விபரீதமாகத்தான் முடியும். எப்படியாவது நாம் இந்தக் கலியாணத்தை முடித்துவிட வேண்டியதுதான். அவள் பிக்ஷுணிக் கோலத்துடனேயே இருந்தாலும் பாதகமில்லை. பலாத்காரமாகவாவது அவளுக்கு மணம் முடித்துவிட வேண்டும். கலியாணத்தைச் செய்துவிட்டால் அப்புறம் அவள் மன நிலை தானே திரும்பிவிடும். அவளைப் புலிப்பள்ளியாரின் மகன் கோளாந்தகனுக்குத்தான் மணம் செய்து வைக்க வேண்டும்'' என்றான் பொற்கோமன்.

''இவ்வளவு பிடிவாதத்தோடு அவளுக்கு மணம் முடிப்பது பிசகு. பொதுவாக அவள் தஞ்சை அமைச்சரின் புத்திரரை விவாகம் செய்து கொள்ள விரும்பவில்லை. இதை முக்கியமாக நீங்கள் கவனிக்க வேண்டும். ஒருவேளை அவளுக்கு வேறு யாரையேனும் கலியாணம் செய்து வைக்க நீங்கள் முயன்று பார்த்தால் அவள் மனம் மாறினாலும் மாறலாம்'' என்றாள் அருந்திகை.

பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தார் மௌனமாக நின்று கொண்டிருந்தார்.

''இவ் விவாக விஷயத்தில் இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல முடியாதவளாக இருக்கிறேன். அவளுக்கு விருப்பம் இல்லாத ஒருவருக்கு அவசர விவாகம் செய்து வைப்பது முறையாகாது என்பது தான் என் அபிப்பிராயம், அப்புறம் உங்கள் விருப்பம்'' என்று சொல்லி விட்டு விடைபெற்றுக் கொண்டு பல்லக்கில் சென்று அமர்ந்தாள் அருந்திகை. பரிவாரங்கள் சூழப் பல்லக்கும் புறப்பட்டது.

அருந்திகையின் பல்லக்கும் பரிவாரங்களும் கண் மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பொற்கோமன் இடங்காக்கப் பிறந்தார் சிறிது ஆத்திரமும் கோபமும் கொண்டவனாகத் தன் தகப்பனாரைப் பார்த்து, ''அருந்திகைப் பிராட்டிக்கு நாம் தஞ்சை அமைச்சரோடு பெண் கொடுத்து உறவு கொள்வதில் பொறாமை. இவளே திருபுவனியின் மனத்தைக் கலைத்திருப்பாள்'' என்று கூறினான். (தொடரும்)

இலக்கியச் செல்வம் - 28.

ஒன்றே தமிழகம்

பேராசிரியர் அ. சீநிவாச ராகவன்

'இந்த உலகந்தான் எவ்வளவு அழகுடையது! இதில் வாழும் மக்கள் உள்ளத்தில் தான் எத்தனை விதமான உணர்ச்சிகள் பூத்துப் பூத்து மறைகின்றன! இளங்கோவடிகள் என்ற துறவி இப்படி எண்ணுகிறார்' என்பதை அவருடைய காவியமாகிய 'சிலப்பதிகாரம்' காட்டுகிறது. இதை, கடந்த இரண்டு வாரமாகச் சிறிது கண்டோம்.

எல்லாவற்றையும் துறந்து இருப்பதல்லவா துறவியின் நிலே? ஒன்றும்இல்லாமல் இருப்பதல்லவா துறவியின் செல்வம்? அழகை எண்ணி உலகப் பொருள்களோடும், மனித உள்ளத்தின் விசித்திரத்தை எண்ணி மனித வாழ்க்கையோடும் தொடர்பு கொண்டு விட்டால், பிறகு துறவு ஏது?

இருங்கள். இன்னும் சிறிது இளங்கோ அடிகள் என்ற இந்தத் துறவியோடு பழகிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவோம்.

இளங்கோ அடிகள் சேரனுடைய தம்பி. அவர் காலத்தில், தமிழ்நாட்டு மூவேந்தர்களான சேரனும், சோழனும், பாண்டியனும் மூன்று தனி அரசுகளின் தலைவர்களாக இருந்தார்கள். இவர்களுக்குள்ளே ஓயாத பூசல், ஒழியாத போட்டி. இதனால் போரும், வீரமும் தமிழ் வாழ்க்கையில் பெரும் பகுதியாக விளைந்தன. என்றாலும், தமிழ் இனத்தின் ஒற்றுமை குலேந்தது; தமிழ் மக்களுடைய வளர்ச்சியும் தடைப்பட்டது. சோழனுடைய புலிக் கொடியின் கீழ் போரிட்ட வீரன், வேறு தமிழ்க் கொடிகளைப் பகைவருடைய சின்னங்களாகவே எண்ணினான். பாண்டி நாட்டு மறவன், மீன்கொடியைத் தவிர, வேறு எந்தக் கொடிக்கும் வணக்கம் செலுத்துவதை முறையற்ற செயலாகக் கருதி ஒதுக்கினான். சேரன் படைகளோ மக்களோ வில்கொடியே கொடி என்று மார் தட்டினார்கள். 'என் அரசே அரசு' என்றான் சோழன். 'என் கொற்றமே கொற்றம்' என்றான் பாண்டியன். 'என் நாடே நாடு' என்றான்சேரன்.

இதற்கு விதி விலக்காக, அங்கங்கே, சிற்சில காலங்களில்







சிலர் இருந்தார்கள். என்றாலும், பொதுவாக இருந்த நிலை இதுதான்.

'இந்த நிலை மாறாதா? மூவேந்தர்களுடைய பெருமையையும் ஒன்றாக எண்ணி, ஏன் தமிழ் மக்கள் ஒற்றுமையை வளர்த்து, வளரக் கூடாது?' என்று இளங்கோவடிகள் எண்ணி இருக்க வேண்டும். அவர் சேர அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்; சேரனுடைய நாட்டின் மேன்மையை நன்றாக அறிந்தவர்; அந்த மேன்மையை மனமாரப் பாடியவர். எப்படிப் பாடுகிறார், கேட்போம்.

சந்து உரல் பெய்து, தகைசால் அணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே, வான் கோட்டால்,
கடந்து அடுதார்ச் சேரன் கடம்பு எறிந்த
வார்த்தை
படர்ந்து நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோடு உளங்கவரும் பாடலே பாடல்

[சந்து-சந்தனம்; தகைசால்-தகுதி உடைய; அணி-அழகிய; முத்தம்-முத்து; வஞ்சி மகளிர்-சேர நாட்டுப் பெண்கள்; குறுவரே - குத்துவார்கள்; வான் கோட்டால் - பெரிய யானைத் தந்தத்தால்; தார்ச்சேரன் - மாலை அணிந்த சேரன்; பனந்தோடு - பனை ஓலை, சேரன் அணிவது.]

'சேரநாட்டுப் பெண்கள் சந்தன மரத்தால் செய்த உரலில் முத்தை இட்டு, யானைத் தந்த உலக்கையால் குத்துகிறார்களாம்! நாட்டிலே அவ்வளவு செல்வம். வீரத்துக்கும் குறைவில்லை. தன் நாட்டைக் கடந்து வெளியே சென்று போர் புரிந்து பகைவர்களை ஒடுக்கும் சேரனுடைய வீரமும், புகழும், பரந்த சேர நிலம் முழுவதையும் போர்த்து நிற்கின்றன. இதையும், சேரனுடைய மாலையையும் பாடாத பாட்டும் ஒரு பாட்டா?' என்று கேட்கிறார் இளங்கோ அடிகள்.

சேர நாட்டு உழவர்கள், சேரன் செங்குட்டுவன் வெற்றியோடு ஊருக்குத் திரும்புவதைப் பாடுகிறார்கள். உழவர்களோடு உழவராய், தாமும் நின்று இளங்கோவடிகள் பாடுகிறார்: 'வடதிசை அரசர்களுடைய கோட்டைகளை எல்லாம் தரைமட்டமாக்கினான் செங்குட்டுவன், விதை விதைப்பதற்கு முன் வயலைச் சமதளம் ஆக்க வேண்டாமா, அப்படி. பிறகு, கோட்டைகள் இருந்த இடத்தை, கழுதை பூட்டிய ஏரால் உழுதான். உழுது வரகு விதைத்தான். இப்படி, பகைவர் இருந்த இடத்தை உருத் தெரியாமல் அடித்து விட்டு, வெற்றியோடு திரும்பினான்.

வடதிசை மன்னர் மன்எயில் முருக்கி
கவடி வித்திய கழுதை ஏர் உழவன்
குடவர் கோமான் வந்தான்.

[மன் - நிலைத்த; எயில் - கோட்டை; முருக்கி - அழித்து; கவடி - வெள்வரகு; வித்திய - விதைத்த; குடவர் கோமான் - மேற்கு நாட்டு மக்களுக்கு அரசனாகிய சேரன்.]

இப்படிப் பல இடங்களில் சேர நாட்டின் பெருமையைப்பாடுகிறார் இளங்கோ அடிகள். 'தம்முடைய நாடு, ஆகவே பாடுகிறார்; இதில் என்ன அதிசயம்!' என்று எண்ண இடமில்லை. ஏன் தெரியுமா? சோழ நாட்டையும், பாண்டி நாட்டையும் அதே பெருமையோடு பாராட்டுகிறார். சிலப்பதிகாரம் என்ற காவியம் சோழனுடைய சிறப்போடு தொடங்குகிறது. 'சந்திரனைப் போற்றுவோம், சந்திரனைப் போற்றிப் புகழ்வோம். சோழனுடைய வெண் கொற்றக் குடையைப்போல் அல்லவா, இந்த உலகத்தை அவன் காப்பாற்றுகிறான்!


திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்
வெண்குடை போன்றுஇவ்
அம் கண் உலகு அளித்தலான்.

[திங்கள் - சந்திரன்; போற்றுதும்-போற்றுவோம்; கொங்கு - வாசனை; தார் - மாலை; சென்னி - சோழன்; அம் கண் உலகு-அழகிய இடம் கொண்ட உலகம்; அளித்தலான் - காப்பாற்றுவதால்.]

பார்த்தீர்கள் அல்லவா? சந்திரனுடைய பெருமை அவன் சோழனுடைய குடையைப்போல் இருப்பதாலாம். இந்தச் செய்தியோடு காவியத்தைத் தொடங்குகிறார் இளங்கோ அடிகள். இடையிலே, பல இடங்களில், சோழன் தலைநகரான புகாரையும், அவனுடைய அரசியல் மேன்மையையும், நாட்டு வளத்தையும், அவன் வீரத்தையும் அறத்தையும் மனமாரப் புகழ்ந்து பாடுகிறார். அவனைப் பாடும் பாட்டே பாட்டு என்று பேசுகிறார்:

ஆழிக்கொடித் திண்தேர்ச் செம்பியன்
வம்பு அலர்தார்ப்
பாழித் தடவரைத் தோள் பாடலே பாடல்

[செம்பியன் - சோழன்; வம்பு - வாசனை; பாழி - வலிமை உடைய; தடவரை - விசாலமான மலை போன்ற.]



இந்த வருஷம் கர்நாடக சங்கீதக் கலையின் ஜனாதிபதி பரிசு பெற்ற ஸ்ரீ முசிரி சுப்பிரமணிய அய்யரைத் திருவனந்தபுரம் சுவாதித் திருநாள் சங்கீத கலாசாலையினரும், திருப்புணித் துறை ராதாலக்ஷ்மி சங்கீத கலாசாலையினரும் சேர்ந்து ஏப்ரல் 28ந் தேதியன்று பாராட்டிக் கௌரவித்தனர். திருவனந்தபுரம் கல்வி இலாகா டைரக்டர் திரு வி. என். வெங்கடேச வரன் அவர்கள் இந்த வைபவத்துக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தார். இந்த விழாவில் பங்கெடுத்துக் கொண்டவர்களையும் முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்களையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

இதுபோலவே பாண்டியனையும் அவனுடைய மரபையும் மிகவும் புகழ்ந்து பேசுகிறார். பாண்டியன் தவறு செய்தான்; தீர விசாரியாமல், கோவலனைக் கொல்லும்படி கட்டளை இட்டான்; இதனால், பெரிய அநீதி நேர்ந்தது. சேர வமிசத்தவரான இளங்கோ அடிகள் 'அந்தமட்டில் பாண்டியன் பெருமை அழிந்தது. போட்டியாக இருந்த அரசொன்று குலைந்தது' என்று களிப்படையவில்லை. மதுரைக்கும், பாண்டியனுக்கும் ஏற்பட்ட பரிபவத்தை எண்ணி வருந்துகிறார்; தவறு தவறுதான்; அரசியலில் தவறு செய்தவர்களுக்கு தருமதேவதையே யமனாக வரும் என்பதை வற்புறுத்துகிறார்; ஆனால் அதே சமயத்தில் தவறு நேர்ந்துவிட்டதே என்று எண்ணி, அந்தக் கணமே உயிர்விட்ட பாண்டியனுடைய நேர்மையை, நினைந்து நினைந்து பாராட்டுகிறார்.

'செங்கோல் வளைய உயிர் வாழார் பாண்டியர்' என்று உள்ளம் பூரிக்கிறார். பத்தினித் தெய்வமான கண்ணகியின் வாக்கினால் பாண்டியனுக்குப் பெருமை தருகிறார். 'பாண்டியன் தீமையற்றவன்; இந்திர உலகத்தில் அவனுக்கு இடம் கிடைத்து விட்டது. இந்திரன் விருந்தினனாக அங்கே இருக்கிறான். நான் அவன் மகள்' என்று கண்ணகியே பேசுகிறாள்:

தென்னவன் தீது இலன்: தேவர்கோன்—
தன்கோயில்
நல் விருந்து ஆயினன்: நான் அவன்—
தன் மகள்

[தென்னவன் - பாண்டியன்; தேவர்கோன்- தேவர்களுக்கு அரசனான இந்திரன்.]

கடைசியில், சேரனையும், சோழனையும் பாடியது போலவே,

வானவர்கோன் ஆரம் வயங்கிய தோள்
பஞ்சவன்—தன்
மீனக்கொடி பாடும் பாடலே பாடல்

[ஆரம் - மாலை; வயங்கிய - விளங்கிய; பஞ்சவன் தன் - பாண்டியனுடைய.]

என்று பாண்டியனையும் பாடுகிறார்.

இளங்கோ அடிகள் சேர நாட்டைச் சேர்ந்தவர். அந்த நாட்டு அரச குடும்பத்தில் பிறந்தவர். என்றாலும், சிறிதும் பொறாமை இல்லாமல், சோழன், பாண்டியன், இவர்களுடைய உயர்வையும், சேரனுடைய உயர்வைப் போலவே தமது உயர்வாகக் கருதிப் பாடுகிறார். சேர நாட்டவர்தான்; ஆனாலும் அவர் உள்ளம் தமிழ்நாடு முழுவதையும் தம்முடையது என்று அணைக்கின்ற புலவனுடைய உள்ளம். இது போலவே, மனித குலத்தைத் தம்முடையதாகக் கருதும் பாங்கினையும் அவரிடம் காண முடியும். கண்டால், அவர் உண்மையான துறவியாய் இருந்தார் என்ற உண்மையைக் கண்டுவிடுவோம். **(தொடரும்)**



ஏப்ரல் மாதப் போட்டியில்
நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

ஆக்கப் பொறுத்தவள்....!

ஸ்ரீப்ரியா

"பத்து நாட்கள் லீவு கிடைத்துவிட்டது. ஞாயிறன்று புறப்பட்டு அங்கு வருகிறேன்" என்று மகனிடமிருந்து கடிதம் வந்தது முதல் காவேரி இந்த உலகிலேயே இல்லை. அவளுக்கு மகனைக் காணப் போகிறோம் என்ற ஆனந்தம் கரை புரண்டோடியது. "சுமாரான ஒரு வீடும் கிடைத்து விட்டதால் என்னுடன் புறப்படத் தயாராயிருங்கள்-சுந்தரம்." கடிதம் அவளுக்குப் பாடமாகி விட்டது.

அவள் பெண் மனத்தில் இன்றுதான் ஒளி பிறந்தது. பிறந்தது முதல் ஊரார் ஏச்சினிடையே குன்றி வளர்ந்தவள். உலகில் எந்தப் பெருமையும் பதவியும் பெற்று அறியாதவள். இன்று தன் உத்தியோகம் பார்க்கும் மகனுடன் எல்லாத் தாய்களையும் போல் தலை நிமிர்ந்து வாழப் போகிறாள். அப்பா, அந்தத் தாய்மைதான் எத்தகையதொரு எதிர்பாராத பேறு அவளுக்கு! அது மட்டும் கிட்டி யிராவிட்டால் காவேரி இருந்த இடம் என்றோ மண்மேடிட்டிருக்கும். அவள் துயரம் மிகுந்த வாழ்க்கையில் அவனது அன்பு ஒன்றே உயிரூட்டும் மருந்தாக, ஊன்றுகோலாக இருந்தது. அவனைப் பாதுகாத்து வளர்ப்பதிலே அவள் தன் துயரத்தை மறக்க முயன்றாள்.

அவன் வாழ்வின் ஒளியே அவன்தான். ஆம், மனிதவாழ்க்கையே 'நம்பிக்கை,' எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் என்ற ஒளியை நம்பித்தானே வளர்கிறது! காவேரிக்கு அத்தகைய ஒரு ஒளியாக விளங்கினான் சுந்தரம்.

மகனுக்குப் பிடித்தமான மைசூர்ப் பாகைத் தட்டில் கொட்டிச் சற்று ஆறவிட்டு வாயிற் புறம் வந்தாள் காவேரி. அவள் மனம் முழுவதும் சுந்தரத்தின் நினைவுகள்தாம். ஆயிற்று. அவனும் கல்கத்தா போய் ஒரு வருடமாகி விட்டது. இப்போது இன்னும்கூட வளர்ந்திருப்பான். தன் அப்பாவின் தோற்றத்தை அப்படியே உரித்து வைத்திருந்தான் அவன்.

காவேரியின் கண்கள் அவளை யறியாமல் சுவரை நோக்கின. அதில் காவேரி இருபது வயதுக் குமரியாக இருந்தாள். அவள் அருகே ஒரு வாலிபன். அவர்கள் திருமணப் படம்தான். 'அவர்' தோற்றம்தான் சுந்தரம். அவர்? அந்த 'அவரின்' ஒரே சின்னம்தான் அவன். ஆம், அதுகூட இல்லாவிடில் அந்தப் பேதைக்குக் கணவன் முகம்கூட இது நாள் மறந்து போயிருக்கும். காவேரியின் உடல் ஒருமுறை பழைய ஒரு காட்சியின் நினைவில் சிலிர்த்தது. அதை மறக்க நினைந்து மறுபடியும் சமையலறைக்குள் புகுந்தாள் காவேரி.

பளபளத்த கத்தி மைசூர்ப்பாகைத் துண்டாடிய நேரத்தில் அவள் மனம் மட்டும் கீறல் விழுந்த இசைத் தட்டைப்போல் ஏனோ பழைய சம்பவத்திலேயே சுழன்று நின்றது. மைசூர்ப்பாகு கீறல் சிறு துண்டுகளாக்கி ருசித்துச் சாப்பிட ஓர் வசதி. ஆனால் விதி அவளது வாழ்வைக் கூறு கூறாக்கி ஒவ்வொரு பருவத்தையும் பயங்கரத் துண்டுகளாக்கியது. அதற்கு அவை விளையாட்டு. ஆனால் அந்த இளம் நெஞ்சுக்குக் கடும் சோதனை. தெய்வத்திடம் கூட நம்பிக்கை இழக்கச் செய்த கொடுமை அது. ஆசை காட்டி மோசம் செய்தது தெய்வம். காவேரி தன்னைத் தனியவளாகக் கதறியபோது ஒரு சிறு ஒளிக்கீற்று—நம்பிக்கையின் வித்து சுந்தரம்.

*   *   *

காவேரி பிறக்கும்போதே தாயை இழந்ததைவிட விஜயம் அவளுக்கு மாற்றுத்தாயாக வாய்த்தது பெரும் துரதிர்ஷ்டம். அன்று முதல் அவள் தந்தை இருந்தும் அவளைப் பொறுத்த வரை இறந்தவராகவே ஆனார். அவ வளாத்த பெண்களொடியாடிக் குதியாக விளையாடிக் கல்வி கற்ற காலங்களில்காவேரி புகையும் அடுப்புடனும், பிடிவாதக்காரக் குழந்தைகளுடனும், சித்தியின் வற்றாத வசைமாரியுடனும் பொறுமை என்னும் கல்வி பயின்றாள்.

அவ்வீட்டில் அவளுக்குப் பிடித்த இடம் பூஜை அறைதான். அங்கு அபயஹஸ்தம் காட்டி முறுவல் பூத்து நின்ற முருகன்தான் அவளுக்குத் தோழன். அக்கம்பக்கத்துப் பெண்கள் கூறியதுபோல் 'இந்தப் பெண்ணுக்கு நல்ல கணவன் கிடைத்தாவது விடியவேணும்' என்ற ஆசிகளை நம்பி 'அவன்' மேல் பாரத்தைப் போட்டு வளைய வந்தாள் காவேரி. 'கணவன்' என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாத நாளிலே அவள் நெஞ்சிலே அது எதிர்காலத்தில் நல்வழி தோற்றுவிக்கும் ஒரு பரம்பொருளாக வளர்ந்தது. கண்களில் வழியும் நீர் சரப்புடவையின் ஜலத்தோடு சொட்ட அவள் குளத்தங்கரை கந்தசாமி கோயிலைச் சுற்றி வந்தபோது, தன் வேண்டுகோளுக்கு அவன் நிச்சயம் செவி சாய்ப்பான் என்று பூர்ண நம்பிக்கை இருந்தது அவளுக்கு.

அவள் நினைத்தது தவறில்லை. ஒரு நாள்... வெய்யில் காலமாதலால் இருள் பிரிவதற்கு முன்பே ஸ்நானம் செய்யக் குளத்துக்குச் சென்றிருந்தாள் காவேரி. அன்று கோயில் சுற்றி அவள் வெளியே வரும்போது உலகில் இருள் விலகி ஒளி பரவிற்று. எதிரே கையில் சூட்கேசுடன் ஒரு இளைஞன் வருவது கண்டு காவேரி ஒதுங்கும்போது சுந்தரமய்யர் வீடெது என்ற கேள்வி அவளைத் தடுத்து நிறுத்தியது.


'எங்கள் வீடுதான். வாருங்கள்' என்று பதில் அளிப்பதற்குள் அந்த ஈர உடம்பிலும் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது.

"நீங்கள்தான் காவேரியா? எங்கள் அத்தையின் மூத்தாள் பெண்...!" விவரம் தெரிந்த அவன் அவ்வாறு கேட்ட போது, மாற்றுத் தாயின் உறவினர் என்ற எண்ணம் ஏனோ அவளுக்கு வருத்தம் அளித்தது.

அவன் வந்து இரண்டு நாட்களாயின. ஒரு நாள் அவன் 'காவேரி! உன்னைப்பற்றி அத்தை கூறியதற்கும் உண்மைக்கும் சம்பந்தமே யில்லையே!" என்று அவன் கனிவுடன் கூறியபோது இது விஜயத்தின் காதில் விழுந்துவிடக் கூடாதே என்றுதான் காவேரி நடுநடுங்கினாள்.

அன்று வீட்டில் ஒரே ரகளை. ஒரு காடு முழுவதும் வீட்டில் புகுந்து அத்தனை மிருகங்களும் ஒல மிடுவது போல் ஒரு பேரிரைச்சல். ராஜு துணிந்து தான் காவேரியின் கரம் பற்றப் போவதைத் தன் அத்தையிடம் கூறி விட்டான். காவேரியின் மனம் இன்பத்துக்கும் துன்பத்துக்குமாக ஊஞ்சலாடியது. வீட்டைப் புறக்கணித்து அவனுடன் புறப்படுவது நம்பகமான செயலா, நிரந்தர விடுதலையா என்ற தயக்கம் ஒரு புறமும், இப்படியாவது தனக்கும் நல்ல காலம் வந்ததே என்ற மகிழ்ச்சி ஒரு பக்கமுமாக மாறி மாறி அவள் மனத்தில் குமிழியிட்டன.

கடைசியில் துணிந்து ஒரு நாள் ராஜு தன் சக்திக்கேற்றபடி தயாரித்த மாங்கல்யத்துடன்



கந்தசாமி கோவிலில் ஒரு மஞ்சள் கயிற்றைக் காவேரியின் கழுத்தில் இரகசியமாகக் கட்டி அவளை வீட்டுக்கு அழைத்து வந்தபோது அதைக் கண் திறந்துகூடக் காணமுடியாதபடி விஜயத்துக்குத் தலைவலி வந்துவிட்டது. சுந்தரமய்யருக்கு இத்தனை சுலபமாக, கண் நிறைந்த மாப்பிள்ளை கிடைத்ததில் உள்ளூற மகிழ்ச்சியே. ஆனாலும் மனைவியை எண்ணித் தன் உணர்ச்சியை யெல்லாம் உறையிலிட்டுக் கூடியவரை கோபத்தின் சாயலை முகத்தில் படரவிட்டுக் கொண்டிருந்தார்.

இத்தகைய ஒரு செயல் அந்தக் கிராமத்தையே கலக்கி அவர்கள் மூக்கில் வைத்த விரலை எடுக்குமுன் காவேரியை அழைத்துக் கொண்டு தன்னுடைய சொந்த ஊருக்கு ராஜு புறப்பட்டு விட்டான். முதல் நாள் அருகிலிருந்த நகருக்குச் சென்று அவன் எடுத்து வந்து கொடுத்த தம்பதிகளின் புகைப்படம் மட்டும் சுந்தரமய்யரிடம் ரகசியப் பொக்கிஷமாக இல்லாவிட்டால் அவர் இந்தத் திருமணத்தை ஒரு 'நல்ல கனவு' என்ற ரீதியிலேயே மதித்திருப்பார்.

புகை வண்டி 'புஸ்'ஸென்று மூச்சுடன் கிளம்பிய ஒலி கேட்டபோது ஒரு பாரம் விட்ட நிம்மதியில் பெருமூச்சு விட்டார் சுந்தரமய்யர். அது இன்பத் திணறல் என்று இளம் தம்பதிகள் எண்ணினர். முதன் முதலாகத் தன் வாழ்வில் அமைதியாக உறங்கலானாள் காவேரி. அவள் தலையைத் தன் மடியில் தாங்கியும் தாங்காத சங்கோஜ நிலையில் இருந்தான் ராஜு.

'என்ன கனவோ!' பலவிதமாக மாறும் காவேரியின் முக பாவத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான் ராஜு.

புரண்டு படுத்தாள் காவேரி. ஒரு சிறு அறை. அதில் வழக்கம்போல் அவளைச் சுற்றிச் சுற்றி விரட்டி அடிக்கிறாள் விஜயம். தன் மகள் சொன்ன ஏதோ ஒரு காரியத்தைக் காவேரி சரியாகச் செய்யவில்லை என்று அவளுக்குக் கோபம். காவேரி கதறினாள். உதவிக்கு யார் வருவார்கள்? ஜன்னலுக்கு வெளியே தந்தையின் முகம் தெரிந்தது. ஆனால், தம் கையாலாகாத்தனத்தைக் காட்டுவது போல் உதட்டைப் பிதுக்கினார் அவர். 'முருகா' என்று அலறினாள் நங்கை. 'ஆ, இதென்ன? முருகன் இத்தனை சீக்கிரம் பிரத்தியட்சமாகிவிட்டானா? இல்லை, உதவிக்கு வந்தவன் ஓர் இளைஞன், ராஜு! தனக்கு ஒரு புது எதிரி வந்த கோபத்தில் விஜயம் இன்னும் ஆக்ரோஷத்துடன் பாய்ந்தாள். "என்னை மீறி எங்கே போவாய்...நான்தான் உனக்குக் கடைசிவரை......இந்த நேற்றைப் பயலல்ல..." ராஜுவை ஒரு புறமாகத் தள்ளிய விஜயம் காவேரியின் கரங்களை இறுகப் பற்றினாள். நற நற வென்று நொறுங்கிய வளையல்கள் அந்த புலியின் கைகளைக் கீறின. "ஐயோ!" துடித்து அலறினாள் காவேரி!

'ஐயோ!'-திடுக்கிட்டு விழித்தாள் காவேரி. இதென்ன ஒரே இருள்? எங்கே யிருக்கிறாள் அவள்? உடம்பெல்லாம் அசைக்க முடியாத வலி ஏன்? 'அம்மா' என்று இதயத்திலிருந்து எழுந்த முனகலைத் தவிர வேறொன்றையும் செய்ய முடியவில்லையே அவளால்?

அருகே எங்கிருந்தோ 'காவேரி, என் கண்ணு' என்று ஒரு குரல் மங்கலாக ஒலித்தது. அவ்வளவுதான் காவேரி; மறுபடியும் அயர்ந்து தன் கண்ணை மூடினாள்.

மீண்டும் அவள் கண் விழித்தபோது பொழுது புலர்ந்து விட்டது. அவள் கண்ட காட்சி? எங்கும் ஒரே ஓலம் பிணக்காடு! தாயிழந்த குழந்தைகள்; குழந்தைகளைப் பறி கொடுத்த பெற்றோர்கள்! கை, கால் இழந்து இனி பிறர் கை நோக்கியேனும் வாழ்வதா என்று ஏங்கிய உயிர்கள்; ஒருவரை ஒருவர் பிரிந்து துடிக்கும் ஜோடிகள்! இடையே உதவிக்கென நடமாடும் தொண்டர்கள்!! ஆனால், "அவர் எங்கே?" காவேரியின் கண்கள் சுழன்று தேடின.

"ஐயோ! இதென்ன...யார் அங்கே கிடப்பது?—" அங்கு சற்று முன் அவளைப் பற்றி இருந்த கரங்கள் துவண்டு கிடந்தன. அவள் அணைத்து மகிழ்ந்த உடல் மரத்துக் கிடந்தது. சுருண்டு தொங்கிய கேசங்கள் இரத்த வெள்ளத்தில் சடைப்பிடித்திருந்தன. பத்து நாட்களுக்கு முன்வரையில் முகம் தெரியாதவன், மூன்று நாட்களாக முறை கொண்டாடியவன், எங்கிருந்தோ வந்தது போல் எட்டா உலகுக்குச் சென்று விட்டான்.

இதற்குள் காவேரியின் அசைவைக் கண்டு உதவிக்கு ஓடிவந்தான் ஒரு தொண்டன்.

காவேரி அழவில்லை. அவளது உணர்ச்சி கல்லாய்ச் சமைந்து நின்றது. இன்ன இடத்தில் இன்ன நிலையில் இருக்கிறோம் என்றே அறியாத மயக்கம் அவள் அறிவைப் போர்த்தியது. வருங்காலம், நிகழ்காலம் எல்லாம் அவளைப் பொறுத்தவரையில் சூன்யமாயிருந்தன.

'அய்யனூர்' ரயில் விபத்தைப் பற்றி அறிந்த சுந்தரமய்யர் பதறினார். பெற்ற மனம் அல்லவா? தானாடா விட்டாலும் சதையாடியது. விஜயமோ உள்ளூற மகிழ்ந்தாள். சித்த சுவாதீனம் இழந்த நிலையில் மகளைத் தேடிப்பிடித்து இழுத்து வந்தபோது ஐயருக்குக் கிடைத்த சாதகமான செய்தியெல்லாம், கடைசியாக ராஜு தன்னருகே இருந்த போலீஸ் அதிகாரியிடம் காவேரியைச் சுட்டிக்காட்டித் தனக்கு சுயார்ஜிதமான சொத்து, ரொக்கம் அத்தனையும் அவளுக்குச் சேரச்செய்ய வேண்டிக் கொண்டான் என்பதுதான். அதிகாரியின் செல்வாக்கு காவேரிக்குச் சொத்தை மீட்டுக் கொடுத்தது. ஆனால், விதி அவளிடமிருந்து தட்டிப் பறித்துச் சென்ற பொக்கிஷத்தை எந்த விதத்தில் யாரால் ஈடு செய்ய முடியும்? ஆனால், ஊரே அவளது அவல நிலைக்குக் கண்ணீர் விட்டபோது இதையெல்லாம் கடந்த நிலையில் இருந்தாள். அவள் மூளை மரத்து விட்டது!

ஆனால்? விபத்து நடந்து மூன்று மாதங்களாகி விட்டன. சுந்தரமய்யரைத் தவிர வேறு அனுதாபிகள் இன்றிக் காவேரி சிந்துவாரற்றுக் கிடந்தபோது...இதே ஏக்கத்தால் ஐயரும் மரணப் படுக்கையில் வீழ்ந்து, "இனி இந்தப் பெண்ணின் கதி என்ன?" என்று எல்லோரும் திகைத்து நின்றபோது...காவேரியின் உணர்வு அசைந்து கொடுத்தது. அவள் செவிகளில் ஒரு ரகசியக் குரல் கேட்டது.

"அம்மா, நான் இருக்கிறேன்!"



தளதளக்கும் ஈனோ வயிற்றுக் கோளாறுகளிலிருந்து எட்டே விநாடிகளில் நிவாரணமளிக்கிறது!


அஜீர்ணம், நெஞ்செரிச்சல், அல்லது வாயுப் பொருமல் இவைகளில் எதையும் ஈனோ நிவர்த்திக்கிறது!

ஒரு கிளாஸ் தளதளக்கும் ஈனோ ப்ரூட் ஸால்ட் சாப்பிட்டால் எட்டே விநாடிகளில் வயிற்றுக் கோளாறுகள் சீராகின்றன. மிதமாக பேதி ஏற்படவிரும்பினால் வெறும் வயிற்றில் சிறிது பெரிய 'டோஸ்' ஈனோ அருந்தினால் போதும். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் ஈனோ வைத்திருங்கள்.

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

அமித அமிலங்களை அடக்கும் தளதளக்கும் பானம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்



ஈனோ
இந்த சீதோஷ்ண ஸ்திதிக்கு விசேஷமாக ஏற்றது
(2 அளவுகளில் கிடைக்கும்)

இடையென்று காவேரியிடம் ஒருதெளிவு பிறந்தது. கணவனை இழந்தோம் என்று அவள் மனப்பூர்வமாக உணர்ந்து அதற்கேற்பத் தன் நிலையைச் சீர்செய்துகொள்ள நினைத்தபோதே தந்தையையும் இழந்தாலும் காவேரி குன்றவில்லை. அவளுக்கு ஒரு துணிவு பிறந்தது! ராஜு ரகசியத் தாலி கட்டிய தினத்தை விட அதிகத் தெம்படைந்தாள் அவள். அதற்குக் காரணம் அந்தக் குரல்.

"அம்மா, என்னை உருவாக்கி விடு...உனக்கு நான் இருக்கிறேன்..."

காவேரி தன் சொத்துக்களுடன் தனித்து வாழலானாள். யுவதி தனித்திருப்பதை ஏசினர் பலர். அனுதாபத்துடன் ஆமோதித்தனர் சிலர். அவள் வயிற்றில் மாணிக்கமாய் வளர்ந்த அபூர்வ ஜோதியை ஏற்றனர் சிலர்; தூற்றினர் பலர். ஆனால் விஜயத்திடம் கொடுமைப்பட்ட போதும், விதியினால் வஞ்சிக்கப்பட்டபோதும் உதவிக்கு வராத உலகத்தை உதறி எறிந்தாள் காவேரி.

சுந்தரம் பிறந்தான். கண்ணின் மணியாய் வளர்ந்தான். தோழர்கள் அவன் தந்தையைப் பற்றி ஏசுவதைக்கூட எதிர்க்கும் அளவுக்கு உரம் படைத்த நெஞ்சினனாக அவனைக் காவேரி வளர்த்தாள். அவனும் தாயின் துயர் அறிந்து அவள் மனம்கலங்காது நடந்து கொண்டான். இன்று கல்கத்தாவில் ஏதோ ஒரு கம்பெனியில் 'தட்டெழுத்துக்'காரன் அவன். காவேரிக்கு இருக்கும் ஆசையில் அவனைக் கலெக்டருக்குக் கூடப் படிக்க வைத்திருப்பாள். ஆனால், கணவன் வைத்த சொத்து அவன் கணக்காக வாழ்ந்தது போலவே, மகன் மூன்னுக்கு வந்ததும் 'கரெக்டா'கத் தீர்ந்து போய் விட்டது.

நாளை விடிந்தால் அருமை மகன் வருவான்.

காவேரி தன்னையறியாது வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். மகிழ வேண்டிய நேரத்தில் மனம் ஏன் இப்படிக் கலங்குகிறது? அன்று கூட அழாதவள் இன்று அந்த நிலையில் ஏன் உருகவேண்டும்? எங்கோ மணி ஒன்பதடித்தது. தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் இத்தனை நேரம் சென்னையை விட்டுப் புறப்பட்டிருக்கும். சிறிய மைசூர்ப்பாகுத் துண்டங்களை டப்பாவில் எடுத்து அடுக்கினாள் காவேரி. கடைசியில் மாதிரி பார்க்கவில்லையே என்ற நினைவு வரவே ஒரு கட்டியை வாயில் இடப் போனாள். ஆனால் அதன் பெரும்பாகம் தவறிக் கீழே விழுந்து சிதறியது. கைக் கெட்டியது வாய்க்கெட்டாமல் போனதைக் கூட லட்சியம் செய்யாது மறுநாள் விருந்துக்கான திட்டம் தயாரிப்பதில் மும்முரமாக மூழ்ந்தாள் காவேரி.

அன்று இரவு அவள் எப்போது கண்ணயர்ந்தாளோ, தெரியாது. ஆனால் விடியற்காலம் ஏதோ பயங்கரக் கனவு. காவேரி திடுக்கிட்டுக் கண் விழித்தாள். மணி ஐந்தரை என்றறிந்தவள் பரபரப்புடன் எழுந்து காப்பி தயாரிப்பதில் மூழ்ந்தாள். இன்னும் அரை மணியில் வண்டி வந்துவிடுமே! ஸ்டேஷனுக்குச் செல்லக் கூட அவளுக்கு ஆசைதான். ஆனால் கார்த்திகை மாதக் குளிரும், விடி இருளும், யாரையாவது துணைக்கு அழைக்க சங்கோஜமும் அந்தத் தாய்ப் பாசத்துக்கு அணை போட்டு விட்டன. உள்ளுக்கும் வாசலுக்குமாகத் தவித்தாள் அன்னை!

மணி ஓடிற்று. ஆறு...ஏழு...எட்டு. காவேரியின் மனம் தவித்தது. இந்தப் பாழாய்ப் போன வண்டி என்றுதான் காலத்தில் வந்தது? மணி ஒன்பதும் ஆயிற்று. இனி காவேரி பொறுக்க மாட்டாள். எதிர் வீட்டுப் பையனைக் கூப்பிட்டு வண்டி எத்தனை நேரம் 'லேட்' என்று பார்த்துவர அனுப்பினாள்.

இதற்குள் தான் இன்னும் தனது ஜபங்களை முடிக்காதது அப்போதுதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது. பூஜை யறைக்குள் நுழைந்த காவேரி ஒரு கணம் தயங்கினாள். காலையில் 'பளிச்' என்று தேய்த்து ஏற்றி வைத்த விளக்கு தரையில் உருண்டு கிடந்தது. இதைக் கண்டு 'துணுக்'குற்ற மனம் கணத்தில் சமாதானம் அடைந்து விட்டது. 'இந்த எலிகள் உபத்திரவம் சகிக்கவில்லையே?' என்றபடி மறுபடியும் அதை ஏற்றினாள் அவள்.

முருகன் படம் அவளைப் பார்த்து முறுவலித்தது. "நம்பினோர்க்குப், பயமில்லை" என்று அருளினான் அவன்.



"மாமி, ஐயோ மாமி..." எதிர் வீட்டுப் பையனின் குரல் தியானத்திலிருந்த காவேரியின் காதில் நாராசமாக ஒலித்தது.

"மாமி, தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் அரியலூர் கிட்டே மருதையாறு பாலத்திலே....வந்து... கவிழ்ந்துட்டுதாம் மாமி...ஏகப்பட்ட சேதமாம்...ஸ்டேஷன்லேயிருந்து போலீஸ் பறக்கிறது. மூன்றும் வகுப்பு வண்டிகள்தான் அப்படியே தலைகுப்புறக் கவிழ்ந்துட்டுதாம்..."

"என்னடா அம்பீ! என்ன சொல்றே?" விஷயத்தைக் கிரஹித்து ஜீரணிக்க முடியாதவளாகத் திணறினாள் காவேரி. வெளிறிய அவளது முகத்தைக் கண்டு தயங்கியபடி "நிஜம்தான் மாமி...வண்டி வந்து..."என்று தொடங்கினான்.

ஆனால், அவன் வார்த்தையை முடிக்கும் வரையில் காவேரி காத்திருக்கவில்லை. ஒரு கணம் அவள் முன் உலகமே சுழன்றது. கண் முன்பு கண்ட ராஜுவின் உடலுக்குப் பதில் ஒரு கணம் சுந்தரத்தின் உடல் தென்பட்டது. அவ்வளவுதான்; 'ஐயோ' என்றுஅலறி விழுந்தாள் காவேரி. அந்த வேகத்தில் முருகன் படம் அறுந்து வீழ்ந்து கண்ணாடி உள்ளெல்லாம் சிதறியது.

டாக்டர், ஏற்கனவே பலவீனப்பட்ட உடம்பில், ஏற்பட்ட அதிர்ச்சி அந்தப் பஞ்சை இதயத்தைக் கொன்று விட்டதாகத் தீர்ப்பு வழங்கினார்.

காவேரியின் சோக வாழ்வு எல்லோர் இதயத்திலும் இரக்கத்தை உண்டாக்கியது. ஒரே மாதிரியான இரண்டு விபத்துக்கள், ஆனால் இருபது வருட வித்தியாசத்தில் நடந்தன. அதில் துயருக்கு ஆளானவள் ஒரு பெண். ஆனால் அன்று அந்த விபத்து ரயிலில் இருந்தும் அவளுக்கு மரணம் கிட்டவில்லை. இன்றோ வெறும் விபத்துச் செய்தியே அவள் உயிரைக் குடித்து விட்டது.

ஒரு பெண் முதலில் தாயை, பின் கணவனை, கடைசியில் தன் மகனை ஆதரவாக நம்புகிறாள். ஆனால் அந்தக் கடைசி ஆதரவும் பறிபோகும் நிலையில் அவள் அனாதையாகிச் சோர்வடைகிறாள். காவேரியும் பெண்தானே. பெண் கொடி ஏதோ ஒரு பற்றில்லாமல் வாழ்வதற்கு முடியுமா?

அந்திமச் சடங்குகளுக்கு விஜயத்தை எதிர்பார்த்து யாவரும் காத்திருந்தபோது அவர்களுக்கு ஆச்சரியமூட்டும் வகையில் வந்து நின்றது ஒரு டாக்ஸி. வந்தவரை யாரென்று அறிய எல்லோரும் ஒரு முகமாகக் காரை நோக்கி ஓடியபோது அவர்களைத் திகைப்பிலும் வாயடைக்கச் செய்யும் வகையில் அதனின்று இறங்கினான் இளைஞன் ஒருவன்.

சுந்தரம்தான்!

'காவேரி, நீ இத்தனை துர்ப்பாக்கியவதியா? ஆக்கப் பொறுத்தவள் ஆறப் பொறுக்கவில்லையே!''என்று கதறுதவர்கள் கிடையாது.

சுந்தரம் பிரமித்து நின்றான். ''நாற்பது வருடகாலம் ஆயுளைக் கஷ்ட நஷ்டங்களிலெல்லாம் பொறுமையாகக் கழித்தவளுக்கு ஒரு தினம் காத்திருக்க நிதானம் இல்லையா, அம்மா!'' என்று அன்பும் பாசமும் அடிவயிற்றிலிருந்து பீறிட அவன் தாயின் உடல் மீது கவிழ்ந்து கண்ணீர் விட்டபோது அங்கு கலங்காத மனம் இல்லை.

விபத்துக்கு முந்திய ஸ்டேஷனில், விடியற்காலை குளிரை எதிர்க்க சிகரெட் வாங்க வண்டியை விட்டு இறங்கிய சுந்தரம், தூங்கி வழியும் கடைக்காரனை எழுப்பி ஐந்து ரூபாய் நோட்டுக்குச் சில்லறை தேடி வாங்கிக் கொண்டு வண்டிக்குத் திரும்புமுன் கார்டின் விசிலுடன், ஆடிய பச்சை விளக்கு அவன் பார்வையை நிறைத்தது. ஓடும் ரயிலில் ஏறப் போனவனை ஸ்டேஷன்மாஸ்டரின் முரட்டுக் கரங்கள் தடுத்து விட்டன.

ஆனால், பின்புறத்து சிவப்பு வெளிச்சத்தை வாரி வீசிவிட்டு, நடுங்கும் குளிரில் கல்லுல் வேளையில் ஸ்டேஷனில் சுந்தரத்தை ஏமாற விட்டுச் சென்ற வண்டி அடுத்த அரை மணிக்குள் தனது பயங்கரமுடிவைக் கண்டு விட்டது.

அந்தச் செய்தியை ஸ்டேஷன் மாஸ்டருடன் தானும் செவிசாய்த்தபோது சுந்தரம் ஒரு கணம் தெய்வத்தை மனதாரப் பிரார்த்தித்தான். ரயில்வே ஊழியர்களுடன் அவனும் ஓடிச் சென்று விபத்துக் களத்தில் புகுந்து வேண்டிய முதல் உதவிகள் செய்த நேரத்திலே தாயையும், தாய்க்குத்தான் பிழைத்த செய்தி யனுப்ப வேண்டிய கடமையையும் மறந்து விட்டான். இறுதியில் போதுமான ஆள் பலம் வந்த பின் தன் பெட்டியைத் தேடிக் கண்டு பிடித்து, அதிகாரிகளது அனுமதியையும் பெற்று வருவதற்குள் காலம் கடந்து விட்டது. பிரயாணிகளது எத்தனையோ உயிர்களைக் குடித்தும் திருப்தி அடையாத கூற்றுவன் அவனது அருமைத் தாயின் உயிரையும் எடுத்துச் சென்று விட்டான்.

பெட்டி நிறையப் பரிசுகள். தாய்க்குத் தனது சம்பளத்தில் முதன் முதலாகச் சுந்தரம் ஆசையுடன் வாங்கிய நார்மடிப் பட்டுப் புடவை, பூஜைக்குக் காவேரி விரும்பிக் கேட்டிருந்த கங்கை நீர்க் கலசங்கள், பொற்பூண் அணிந்த ருத்ராட்சமாலை...இவை சுந்தரத்தைப் பார்த்துச் சிரித்தன.

தன் கண்ணீருடன் கங்கை நீரைக் கலந்து தாயுடலைக் கழுவி நார்ப்பட்டுப் புடவையைப் போர்த்தியபோது அவன் இதயம் துக்கத்தால் வெடித்து விடும் போலிருந்தது. 'காவேரி கொடுத்து வைத்தவள், சமயத்துக்குப் பிள்ளை கங்கையையே அவளைக் கரையேற்றக்கொண்டு வந்து விட்டானே' என்ற ஊரார் சொல், ''அம்மா, இதற்குத்தானா அருமையாக ஒரு மகனைப் பெற்றாய். உன் வாழ்வின் ஒளி என்று போற்றி வளர்த்தாய். இதத்துக்கும் பரத்துக்கும் இதனால் உனக்கு சாந்தி கிட்டுமா?'' என்று சுந்தரத்தைப் புலம்பச் செய்தது.

கூட்டத்தில் ஒரு பெரியவர் சுந்தரத்தைத் தேற்ற முன் வந்தார். ''அவள் உடல் அழிந்தாலும், உள்ளத்தில் உன்னைப் பற்றிக் கொள்ளை ஆசை வைத்திருந்த காவேரியின் ஆத்மா தெய்வமாக இருந்து உன்னைக் காக்கும்'' என்றார்.


ஆம், ஆக்கப் பொறுத்தும் ஆறப் பொறுக்க அவள் வாழ்க்கை முடிவடைந்து விட்டதா? இல்லை, அவளைக் கூற்றுவனின் பாசம் அழித்து விடமுடியாது.

'சாக்காடு என்பது வாழ்வின் முற்றுப்புள்ளி அல்ல. வாழ்க்கையின் திருப்பம் தான். மரணம் என்னும் நிகழ்ச்சிக்கு இரு புறமும் வாழ்க்கை நீடிக்கிறது. சாவுக்குப் பின்னுள்ள வாழ்வின் தொடர்ச்சியில் அனுபவங்கள் மட்டுமே மாறுபட்டவை; அமரத்துவம் ஆரம்பமாகிறது'-இப்படி ஒரு ஞானி சொல்லி வைத்தான்.

கட்டிய கணவனின் மரணத்துக்குப் பின் அவள் வசித்த பிரகாசமற்ற கால் நூற்றாண்டு காலத்தை அவள் வாழ்வாகக் கருதவில்லை. மனத்தில் பொறிவிட்ட நம்பிக்கை ஜோதியாகி மகன் உத்தியோக புருஷனாகப் பெருமிதமான தாயுள்ளத்துடன் நடத்தப் போகும் காலம் மட்டும் தான் உண்மையாக வாழப் போகும் காலமாக எண்ணினாள். அந்தப் பருவத்தின் எல்லையிலே அம்முதாட்டியின் நடுங்கும் கால்கள் அடியெடுத்து வைத்த போது.... அவளது உடலெனும் மணல்வீடு சரிந்து விட்டது! அவள் உடல்தான் அழிந்து விட்டது. ஆனால் பெற்ற மகன் மீது அளவற்ற பாசம் வைத்து விட்ட அவள் என்றும் அவனுடன் தெய்வீக உறவுடன் வாழத்தான் போகிறாள்!

அந்த நம்பிக்கை அளித்த உரத்தில், சுந்தரம் கண்களிலே வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு உலகத்தை நிமிர்ந்து பார்த்தான்.

15. இரு கலைஞர்கள்



"வெற்றி! வெற்றி! வேந்தர்க்கு வெற்றி! வணக்கங்கள். வேந்தே!" என்றான் காவலனின் அவைக் கூடத்துக் காவற்காரன்.

"என்ன விசேஷம்?" என்று கேட்ட அரசன் தனது புருவங்களை நெரித்துக் கேள்வியின் பாவத்தை பரதத்தில் விளக்கினான்.

"யாரோ இருவர். கலைஞர்களாம். பார்ப்பதற்கு ஒருவர் காட்டெருமையைப் போலும் மற்றொருவர் காட்டுப் பன்றியைப் போலும் காட்சி யளிக்கின்றனர். கலைப்பித்தன்... கலைஞர் பங்காளன்...தங்களைக் காண வந்துள்ளார்!"

"வரட்டும்" என்று அனுமதி யளித்த அரசனின் முகத்தில் 'யாரா யிருக்கலாம் இக்கலைஞர்கள்? இவர்கள் கற்ற கலையும் யாதோ?' என அறியவேணு மென்ற ஆவலின் பாவம் மிளிர்ந்தது. இதற்குள் அழைத்து வரப்பட்ட அரசன் முன் இருவரும் காவற்காரன் சொன்ன உருவத்தினராக இருந்ததைக் கண்டு சபையிலிருந்தோருக்கு எழுந்த சிரிப்பை எப்படியோ அடக்கிக் கொண்டனர்.

"வணக்கங்கள் பல! வேந்தே!" என்று வணங்கினான் காட்டெருமையைப் போலிருந்தவன்.

அவனைத் தொடர்ந்து, "வணக்கங்கள் பற்பல! வேந்தே!" என்றான் காட்டுப் பன்றியைப் போலிருந்தவன்.

இவர்களைப் பார்த்து, "ஆய கலைகள் அறுபத்து நான்கினில் நீவிர் பயின்றவை யாவை?" என வினவினான் வேந்தன்.

"வேந்தர்க்கு எனது வணக்கங்கள் பல! யான் பயின்றது அறுபத்தைந்தாவது கலை!" என்றான் முதல் கலைஞன்.

அவனைத் தொடர்ந்து "வேந்தர்க்கு எனது வணக்கங்கள் மிக மிகப்பல! யான் பயின்றது அறுபத்தாறுவது கலை!" என்றான் இரண்டாவது கலைஞன்.

தமது சிரிப்பை அடக்கிக் கொள்ளும் முயற்சியில் சபையினர் தோல்வி கண்டனர். இதைக் கண்ட அரசன் முகத்தில் கடுகடுப்பு தோன்றலாயிற்று. மதிமந்திரி மட்டும் முதலிலிருந்தே மௌனம் சாதித்து வந்தார். கடைக்கண்ணால் அவ்வப்போது இதைக் கவனித்து வந்த அரசன் இதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமென்று ஊகித்து, "அந்தக் கலைகள் என்ன?" என்று வினவினான்.

"உண்ணும் கலையில் ஒப்புவமையற்ற தனிக் கலைஞன் யான்!" என்று கூறினான் முதல்வன்.

"உறங்கும் கலையில் எனக்கு நிகர் யானேதான்!" என்றான் இரண்டாவது கலைஞன் பெருமையோடு.

இனி இக்கலைஞர்களின் கதையை நான் சொல்லவேண்டியதில்லை. யாவரும் அறிவர். அறியாதவர் அறிந்தவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும். மொத்தத்தில் உண்பதை ஒரு கலையெனவே கற்றல் வேண்டும் — கற்பதையும் கசடறக் கற்க வேண்டும். பின் அதற்குத் தக்கபடி பழக்கத்தில் கொணர்ந்து நிற்றலும் வேண்டும்.

உற்ற காலத்தில் உண்பது இதமான ஆகாரம், மிதாகாரம் இவற்றை விளக்கியாயிற்று. இதில் சொல்வதற்கு வேறு என்ன இருக்க முடியும்? இதை ஒரு கலையென்று அழைக்க, கருத்துக்கும் ஆழ்ந்த சிந்தனைக்கும் உற்ற அடிப்படை தத்துவங்கள் அடங்கிய விஷயம் ஏதேனுமுண்டோ? என்ற கேள்விகளுக்கு விடையளித்தாக வேண்டும்.

ஏற்கெனவே தினசரியை அனுசரிக்கும் முறையில் ஸ்நானம் முடிந்திருந்தாலும் சாப்பிடச் செல்லுங்கால் கை, கால், முகம், வாய் முதலியவற்றை மற்றுமொருதடவை கழுவிச் சுத்தம் செய்து கொண்டு பிறகுதான் உண்ணச் செல்ல வேண்டும்.

ஒருவன் சாப்பிடச் செல்லும் முன்பு, தன்வீட்டிலுள்ளபெரியோர், சிறியோர், நோயுற்றவர், விருந்தாளிகள் முதலியவர்களுக்கெல்லாம் தக்க வகையில் ஆகாரங்கள் அளிக்கப்பட்டனவா எனத்

தெரிந்து கொண்ட பிறகுதான் தனது ஆகாரத்தை ஏற்க வேண்டும்.

வீட்டிலுள்ள மாடு கன்று முதலிய கால் நடைகள், நாய் பூனை போன்ற வளர்க்கப்படும் பிராணிகள், கோழி, புறாக்கள் என்ற இனத்தைச் சேர்ந்த தன்னை நம்பி வாழும் உயிர்ப் பிராணிகள் யாவும் ஆகாரமளிக்கப்பட்டுத் திருப்தி யடைந்துள்ளனவா என்று தெளிந்தபிறகுதான், தான் உண்ணச் செல்ல வேண்டும். ஏன்? அப்பொழுதுதான் அம்மனிதனுக்கு மனத்தில் ஒரு நிறைவும் நிம்மதியுமிருக்கும். மன நிம்மதியும் மனத்தில் களிப்பும் நிறைவும் இல்லாத நிலையில் உண்ணும் சோறு சரிவர ஜெரிக்காது. ஜெரித்தாலும் உடம்பில் ஒட்டாது.

கோபம், துக்கம் போன்ற மன நிலைகள் சாப்பிடும் நேரத்தில் இருக்கவே கூடாது. சாப்பிடும்போது சாப்பாட்டில் ஆழ்ந்த மனத்தினனாய், அதன் பாகத்தின் நேர்த்தி, ருசி, மணம் முதலியவற்றை மனமார அனுபவித்துக் கொண்டே சாப்பிட வேண்டும். அப்போது இடையிடையே பேச்சு அரட்டை முதலியவை யொன்றும் கூடவே கூடாது. ஆகாராதிகளில் இது உப்பு, இது கெட்டது, இதில் புளிப்பு அதிகம், இது காரம் என்பதுபோல் ஆகாராதிகளைப் பழிக்கக் கூடாது; குறை சொல்லக் கூடாது.

அவசரம் அவசரமாக ஒன்றுமிரண்டுமாய் அள்ளித் திணித்துக் கொண்டு மென்றதும் மெல்லாததுமாக விழுங்கக் கூடாது. வெகு நேரம் நீட்டி முழக்கிக் கொண்டும் இருக்கக் கூடாது.

சுத்தமான உடையும் உடலுமுள்ளவர்—நம்மால் கனிவும் நட்புமுள்ளவர்—அன்புடன் விளம்பிக் கொடுக்க, தனது இஷ்டர்களுடன் சமமான சுகாசனத்திலிருந்து சாப்பிடல் வேண்டும். 'அன்பில்லாரிட்ட அமுது' நமது எலும்புகளைப் போக்கக் கூடாதல்லவா?

மனத்துக்கும் சரீரத்துக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி முன் எழுதியுள்ள விஷயங்களை எண்ணி, போஜன விஷயத்தில் மேலே சொன்ன நியமங்களைப் பார்த்தால் அடிப்படையான தத்துவம் விளங்கும். உண்பதும் ஒரு கலைதான் எனத் தெளிவாகும்.

குடி நீரைப் பற்றியும் சொல்ல வேண்டிய சில விஷயங்களுண்டு.

மழை, அதன் மூலம் நதி, குளம், ஏரி கிணறுகளில் கிடைக்கும் நீர் என்பவை நமக்குத் தண்ணீர் கிடைக்கும் மூகாந்திரங்கள். ஊற்றுநீரும் இத்துடன்சேரும்.

முக்கியமாக மழை நீரே இவை யாவற்றுக்கும் காரணமாகும். மழை ஜலந்தான் குடிப்பதற்கு ஏற்றது. ஆனால், கோடையில் பெய்யும் மழையின் நீர் சுத்தமா யிருக்குமா? வெய்யிலும் காற்றுமாகச் சேர்ந்து எவ்வளவு மண்ணையும் புழுதியையும் வானத்தில் கிளப்பி விட்டிருக்கும்! கோடை மழை இம்மண் புழுதிகளையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டல்லவா வரும். ஆகவே அந்நீர் சுத்தமானதா யிராது. ஆகவே மழைக் (கார்) காலத்தில் பெய்யும் மழை நீரைத் தவிர்த்து மற்றையப் பருவங்களில் பெய்யும் மழையின் நீர் சுத்தமா யிராது; குடிப்பதற்கு அது ஏற்றதாகாது. மழைக் காலத்திலும் முதல் மழை இதே காரணத்தால் அசுத்தமானதெனத் தவிர்க்கத் தக்கதாகும்.

இயந்திரசாலைகள் பல உள்ளதொகு பிரதேசம், அங்கிருந்துவானத்தெழும்பிப் பரவிக் கிடக்கும் புகை மண்டலம், இவ்விடத்தில் பெய்யும் மழையில் இப்புகையும் கரிக்கணங்களும் நிரம்பிக் கிடக்கும். மழை நீரானாலும் இந்தப் பிரதேசங்களில் பெய்த மழையின் நீரைச் சுத்தமானதென்று ஏற்கலாமா? கூடாது. இடுகாடு முதலிய பிரதேசங்களில் பெய்த மழை ஒழுகி வந்து ஏரியில் நிரம்பிக் கிடக்கிறது. இதைக் குடிக்க ஏற்றல் தகாது.

சுத்தமான பரந்த பிரதேசம்; மணிக்கள் கல்லும், வெளுப்பும் கறுப்பும் கலந்த மணற் பிரதேசம். இங்கு பெய்த மழை நீர் தடாகமாக நிரம்பி நிற்கிறது. சதா வெய்யிலும் காற்றும் கொள்ளும் வாய்ப்பு பெற்றது. இந்நீரைத்தான் குற்றமற்ற மழை ஜலத்துக்கு அடுத்த தான சுத்த ஜலமென்று பானாதிகளுக்கு ஏற்றல் வேண்டும். (தொடரும்)


அருள்வாக்கு

கோயில்களுக்குப் போவது குறைந்துவிடவே, கோயில்கள் இடிந்து போகின்றன. சினிமாக்களும் கிளப்புகளும் பிரகாசிக்கின்றன. நாம் போகாததால்தான் கோயில்கள் சரியாக நடைபெறவில்லை. ஆயிரக்கணக்கான ஜனங்கள் கோயில்களுக்குப் போவது வழக்கமாகிவிடின் அர்ச்சகர்கள் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்வார்கள்; தர்மகர்த்தர்கள் பயந்து நடப்பார்கள். முற்காலத்தில் ஜனங்கள் கோயிலுக்குத்தான் போவார்கள். அப்பொழுது சினிமாக்களும் கிளப்புகளும் இருந்ததில்லை. ஆகையால் எண்ணிறந்த கோயில்கள் கட்டப்பட்டன. இப்பொழுது ஜனங்கள் போவதில்லையாகையால், கோயில்கள் அனாவசியமாகக் கட்டப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. எல்லோரும் தினந்தோறும் கோயிலுக்குப் போக வேண்டும். முடியாவிடில், விசேஷ தினங்களிலாவது போய்க் கொண்டிருந்தால் கோயில்கள் அனாவசியமாகக் கட்டப்பட்டிருப்பதாகத் தோன்றாது.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடிபீடம்.


வா, பசுவே!
மலை மேல் பசுமேய - என் கண்ணே
மகிழமணி ஓசையிட
செடிமேல் பசுமேய - என் கண்ணே
செல்லமணி ஓசையிட
அந்திபட்டால் வா பசுவே! - என்
அருமை மகன் பால் குடிக்க
பொழுதுபட்டால் வா பசுவே! - என்
பொன்னு மகன் பால் குடிக்க
காடெல்லாம் தேடிக்
காராம் பசுவோட்டி,
ஓட்டி வந்த பாற்பசுக்கு
உடம்பெல்லாம் பொன்னிறமாம்
கொண்டு வந்த பாற்பசுக்குக்
கொம்பெல்லாம் பொன்னிறமாம்!
—நாடோடிப் பாடல்

மனப்புயல் சித்திரத் தொடர் கதை




என்ன
ஹேமாவுக்கு?..
இவளையும் முரளியையும்
சம்பந்தப் படுத்திச்
சுவரில் அவதூறாக
எழுதியிருந்தது.
அதைக் கண்டு மூர்ச்சை
யடைந்து விட்டாள்
ஹேமா!
அப்படியா?
நாம் இருக்கும் நிலைக்குப்
படிப்பு எதற்கு என்று
முட்டிக் கொண்டேன்.
அவள் கேட்டால் தானே?..
அதைப்பற்றி
இப்பொழுது என்ன?
உடனே டாக்டரை
வரவழையுங்கள்!
ஒன்றும் பயம்
இல்லை! இந்த மருந்தைக்
கொடுங்கள்!
தொடரும்

தைரியசாலி



ஜகா

"டேய், பாச்சு! நான் எவ்வளவு சொல்லியும் நீ கேட்க மாட்டேனென்கிறாய்! இரவில் பயங்கரக் கதைகளைப் படித்தால் பிறகு இரவெல்லாம் பயந்து நடுங்கும்படி நேரிடும். குழந்தைகள் எதைப் படிப்பது என்பதே கிடையாதா? எழுந்திருடா, போய்த் தூங்கு" என்றார் பாச்சுவின் சித்தப்பா!

பாச்சுவுக்குச் சித்தப்பாவின் புத்திமதி காதிலேயே ஏறவில்லை. அவ்வளவு சுவாரஸ்யமாக அந்தப் பயங்கரக் கதையைப் படித்துக் கொண்டிருந்தான். அது ஒரு பிசாசுக் கதை. அதன் ஆசிரியரும் பயப்படாமல் தைரியமாக அதை எழுதி இருந்தார்! பாச்சுவும் மிகுந்த தைரியத்துடன் அதைப் படித்துக் கொண்டிருந்தான்.

சித்தப்பா பாச்சுவின் பின்னால் வந்து கவனித்தார். கதையையும் இலேசாகப் படித்துக்கொண்டே வந்தார். அவருக்கே கொஞ்சம் வியர்த்து விட்டது. "டேய், பாச்சு! இந்தமாதிரி பிசாசுக் கதைகளைப் படித்தால் பயந்து உடம்பு இளைத்துப் போய் விடுவாய்! நிஜமான பிசாசுகளே உள்ளே வந்து நடமாட ஆரம்பித்து விடும்" என்றார் சித்தப்பா.

"கதையில் வரும் பிசாசுக்கே நான் பயப்படவில்லை. எது வேண்டுமானாலும் வரட்டும்" என்றான் பாச்சு தைரியமாக.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கதையின் சுவாரஸ்யம் அதிகமாகி விட்டது.. எங்கும் நிசப்தம் நிலவியது. சுவர்க்கோழி கத்தும் சத்தம் மட்டும் அந்தப் பயங்கரத்தை அதிகப்படுத்தியது.

'உம் ...... டும் .... உச் ... .. உச்!' என்று சத்தம் போட்டுக் கொண்டு வராந்தா வழியாக ஒரு உருவம் நகர்ந்து பாச்சுவை நெருங்கியது. துணி மூடிய உருவமாகத்தான் இருந்தது. மற்றப்படி மூக்கு, கண் ஒன்றுமே இல்லை. அந்த உருவம் நூதனமான சத்தம் போட்டுப் பயங்கரமாகச் சிரித்தது......பாச்சுவா பயப்படுவான்? குண்டாந்தடியை எடுத்து அந்த உருவத்தின் தலையில் ஓங்கி அடித்தான் ......!

அந்தப் பயங்கர உருவம் அலறிக் கொண்டு கீழே விழுந்தது. பிசாசு வந்த செய்தியைச் சித்தப்பாவிடம் சொன்னால் அவர் மயக்கம் போட்டு விழுந்து விடுவார் என்று, "சித்தப்பா! சித்தப்பா ஓடி வாருங்கள். ஒரு பிசாசை அடித்து வீழ்த்தி விட்டேன்!" என்று கத்தினான் பாச்சு.

வீட்டில் சித்தப்பாவைக் காணோம்! ஒரே ஆழ்ந்த நிசப்தம்தான் நிலவியது. கீழே விழுந்த உருவத்தினிடமிருந்து மாத்திரம் அடி விழுந்த வலியினால், 'அப்பா! அம்மா!' என்ற மெல்லிய குரல் வந்தது. 'இது என்ன பிசாசு? 'அப்பா! அம்மா!' என்று முனகுகிறதே? பிசாசுக்கு அப்பா, அம்மாகூட உண்டா, என்ன?' என்று எண்ணி வியந்தான் பாச்சு.

போர்வையை விலக்கிப் பார்த்தால் அதன் அடியில் சித்தப்பா தம் தலையைத் தடவிய வண்ணம் முனகியபடியே உட்கார்ந்திருந்தார். உடனே, பாச்சு பயந்து போய்ச் சித்தப்பாவினிடம் தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.




சித்தப்பாவும் கோபத்தைத் தணித்துக்கொண்டு பழைய நிலைமைக்கு வந்தார். 'சித்தப்பா! எனக்கு இந்தப் பிசாசுகள், பூச்சாண்டி இவைகளில் நம்பிக்கையே கிடையாது. ஏனென்றால் கடைசியில் அவை நம்முடைய நெருங்கிய பந்துக்களாகவே காட்சி அளிக்கின்றன!" என்று சொல்லி முடித்தான் போக்கிரி பாச்சு!

பூச்சிகள் உங்கள் வீட்டில்

உபத்திரவம்

செய்யவிடாதீர்கள்!



லின்டேன் கலந்த ப்ளிட் உபயோகித்து



அவைகளின் தொல்லையை ஒழியுங்கள்!



வீட்டில் நடமாடும் பூச்சிகள் ஒரு பெரிய தொல்லையாயிருப்பதோடு மட்டுமின்றி, பலவித வியாதிகளைப் பரப்பவும் செய்யலாம்! எப்பொழுதும் ஜாக்கிரதையாகவே இருங்கள். பூச்சிகளை அணைப்பொழுதில் சீக்கிரமாகக் கொல்லும் சக்தி வாய்ந்த லின்டேன் கலந்த ப்ளிட்டைத் தவறாமல் உபயோகியுங்கள்! முன்னைவிட தீவிர சக்தியாய்ந்த இந்த பூச்சி காரிணி அதிக துரிதமாக வேலை செய்கிறது. இதில் லின்டேனும், டி.டி.டி.யும் (D.D.T.) ஒருங்கே சேர்ந்துள்ளதால், இதன் பலன் அதிக காலம் நீடித்து நிற்கிறது. லின்டேன் கலந்த ப்ளிட் புகழ் பெற்ற சிவப்பு, வெள்ளை மற்றும் நீலத் டின்னில் கிடைக்கும்.

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது: கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

மாயப் பந்



7. மந்திரக் கிழவி!

கொஞ்ச தூரம் சென்றதும் மால்கோஷ், "கலா! அதோ தெரிகிறதே. அதுதான் பல்லாங்கு பட்டணம் போல் இருக்கிறது. சித்திரக் குள்ளர்கள் சொல்லியபடி ஒருபெரிய உயரமான குன்றின் மீது ஒரு வீடு இருக்கிறது. இதுதான் அந்த மந்திரக் கிழவியின் வீடாக இருக்க வேண்டும். இந்தச் செங்குத்தான குன்றின் மீது பெரிய ஏணியை வைத்துக்கூட ஏற முடியாது போல இருக்கிறதே. நீ ஜமக்காளத்தை எதற்கும் குன்றின் சமீபத்துக்கே கொண்டு போக வேண்டாம். கீழே ஒரு பெரிய ஆறு ஒன்று தெரிகிறது. அதில் தண்ணீரையும் காணவில்லை. நீ ஜாக்கிரதையாக அங்கே இறக்கு" என்றான்.

கலா தன் அண்ணனின் விருப்பப்படியே பல்லாங்கு பட்டணத்தின் சமீபத்தில் உள்ள ஒரு ஆற்றில் ஜமக்காளத்தை இறக்கினாள். வழக்கம் போல ஜமக்காளத்தை மடித்து முத்து மாலையுடன் பையில் போட்டுக் கொண்டாள். பையைத் தோளில் மாட்டியபடி மால்கோஷுடன் பல்லாங்கு பட்டணத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அதற்குள் ஆற்றங்கரையிலிருந்த ஜனங்கள் ஜமக்காளம் பறந்து வந்த அதிசயத்தைப் பார்த்துக் கூட்டமாக மால்கோஷையும், கலாவையும் சூழ்ந்து கொண்டார்கள். அந்தச் சமயத்தில் அங்கு சென்று கொண்டிருந்த அவ்வூர் போலீஸ் தலைமை அதிகாரி திடீரென்று 'என்ன கூட்டம்?' என்று பார்ப்பதற்காகக் கூட்டத்தை நெருங்கினார். விஷயத்தை அறிந்தவுடன் கூட்டத்தைக் கலைத்துவிட்டு மால்கோஷையும், கலாவையும் தம்முடன் அழைத்துச் சென்றார்.

பிறகு போலீஸ் அதிகாரி மால்கோஷையும், கலாவையும் பார்த்து, "நீங்கள் இவ்வூருக்குப் புதிதுபோல் இருக்கிறது. நான் கூட்டத்தைக் கண்டவுடன் இவ்வூரில் மந்திரக் கிழவி வழக்கமாகச் செய்யும் அட்டூழியங்கள் ஏதாவது இருக்கும் என்று ஓடோடியும் வந்தேன்" என்றார்.





உடனே மால்கோஷ் தன்னைப் பற்றியும் தன் தங்கையைப் பற்றியும் அதுவரையிலும் நடந்த விஷயங்களைப் பற்றியும் சொன்

னான். போலீஸ் அதிகாரி அதைக் கேட்டு வியப்படைந்தார். "நீங்கள் சொல்லுவதைக் கேட்க மிகவும் சந்தோஷம். இந்த மந்திரக் கிழவி செய்யும் திருட்டுத்தனங்களையும் மற்றைய கொடூரச் செயல்களையும் என்னால் எவ்வளவு முயன்றும் ஒன்றும் கண்டிக்கமுடியவில்லை. இதனால் எனக்கு மேல் உள்ள போலீஸ் அதிகாரிகள் என்னைக் கடிந்துரைக்கிறார்கள். உங்களிடத்தில் உள்ள மந்திர சக்தியைக் கொண்டு எப்படியாவது மந்திரக் கிழவிக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டுத்தான் போகவேண்டும். நீங்கள் அப்படிச் செய்தால் உங்கள் உதவியை நான் மட்டும் அல்ல, இந்தப் பட்டணத்துவாசிகள் ஒரு பொழுதும் மறக்கவே மாட்டார்கள். எல்லா விஷயங்களையும் நான் விவரமாகச் சொல்லுகிறேன். நீங்கள் இரண்டு பேரும் என் வீட்டிலேயே தங்குங்கள்" என்று தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

சாப்பாடு முடிந்தவுடன் மால்கோஷையும், கலாவையும் கூப்பிட்டுத் தமக்கு அருகில் உட்காரச் செய்தார். "நான் இந்த மந்திரக் கிழவியைப் பற்றிச் சுருக்கமாக எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று போலீஸ் அதிகாரி சொல்ல ஆரம்பித்தார்.

"நான் பல வருஷங்களாகச் சாதாரணப் போலீஸ் உத்தியோகத்திலிருந்து ஜில்லா அதிகாரியாக இந்தப் பட்டணத்திலேயே இருக்கிறேன். சில வருஷங்களாகத்தான் இந்த மந்திரக் கிழவி இவ்வூரிலுள்ள ஒரு செங்குத்தான குன்றின் மீது உள்ள ஒரு பழைய வீட்டைத் தனக்கு இருப்பிடமாக வைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் எந்த உருவத்தையும் நிமிஷமாக எடுத்துப் பிறரை ஏமாறச் செய்வாள். பிறரையும் வேறு எந்த உருவத்துக்காவது மாற்றி ஓயாத துன்பத்தைக் கொடுக்கும் சக்தி அவளிடம் பிரமாதமாக இருக்கிறது. பிறருடைய துன்பமே அவளுடைய இன்பம். அவளுக்குப் பொருள், நகை முதலியவைகளைக் கண்டால் மிகவும் ஆசை. ஆதலால் இப் பட்டணத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் தினந்தோறும் எந்த உருவத்திலேயாவது வந்து ஏதாவது விலை உயர்ந்த பொருள்களைத் திருடாமல் இருப்பதில்லை. சுற்றுப் பக்கங்களிலுள்ள பட்டணங்களிலும், அவள் சென்று திருடி வருவதாக வதந்தி. எங்களுக்குத் தெரிந்த வரையிலும் அவளுக்கு உற்றார் உறவினர்களும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் திருடிய பொருள்களைச் சேகரித்து அவைகளைப் பார்ப்பதிலேயே அவள் ஆனந்தமடைபவள் போலத் தோன்றுகிறது. ஆனால் அவள் திருடிய பொருள்களை





குழந்தைகளின் மழலை மொழிக்கு யாழும், குழலும் இணையாகாது என்கிறார் திருவள்ளுவர். அதிலும் அந்தக் குழந்தைச் செல்வங்களே நாடகம் நடித்தால் அந்த இனிமைக்கு ஈடு ஏது? இணை ஏது? சென்னை கஸ்தூரி பாதர் மாண்டிசோரி பள்ளியில் பெற்றோர் தினம் ஏப்ரல் 12ந் தேதியன்று பிரஸிடென்ஸி கல்லூரிப் பேராசிரியர் மேஜர் எஸ். பார்த்தசாரதி தலைமையில் வெகுவிமரிசையாக நடந்தேறியது. அந்த வைபவத்தின் போது, குழந்தைகள் நடித்த ஆங்கில நாடகத்தில் வரும் ஒரு காட்சியை மேலே படத்தில் காணலாம்.


எங்கே வைக்கிறன் தெரியுமா?'' என்று கேட்டார் போலீஸ் அதிகாரி. இச் சமயத்தில் கலா, ''எங்கே வைப்பான்? யாரும் ஏறிப் பார்க்க முடியாத அந்த மலையின் மீது உள்ள தன் வீட்டில் தான்'' என்று பதில் அளித்தாள்.

உடனே போலீஸ் அதிகாரி, ''அதுதான் இல்லை. அப்படி இருந்தால் சுலபமாக அவைகளை எப்படியாவது பார்த்து விடலாமே. இங்கிருந்து ஒரு மைலுக்கப்பால் ஒரு மைதானம் இருக்கிறது. அதில் அதிக ஜன நடமாட்டம் கிடையாது. அங்கே ஒரு குளம் இருக்கிறது. பழைய குளம்தான். நன்றாகப் பாசி பிடித்திருக்கும். தண்ணீர் மாத்திரம் அந்தக் குளத்தில் எப்பொழுதும் வற்றுவதில்லை. அந்தக் குளத்துக்கு அடியிலே ஒரு சுரங்கம் இருக்கிறதாம். இதைப் பற்றி எல்லோரும் சொல்லித்தான் கேள்வி. யாரும் போய்ப் பார்த்ததில்லை. பார்க்கவும் தைரியம் கிடையாது. அந்தக் குளத்தில் மூழ்கி ஏதோ மந்திரங்களை மூன்று முறை உச்சரித்தால் சுரங்கத்தில் இருக்கும் இரும்புக் கதவு படார் என்று திறக்குமாம். அந்த மந்திரத்தைத் தவிர தண்ணீரில் வேறு ஒரு மந்திரத்தையும் யாரும் உச்சரிக்க முடியாதாம். மந்திரக் கிழவி அடிக்கடி ஏதோ மூட்டை முடிச்சுகளுடன் அந்தக் குளத்துத் தண்ணீரில் மூழ்குவதையும் அவள் தண்ணீரில் மூழ்கியவுடன் மூன்று முறை குளத்துத் தண்ணீரில் நீர்க் குமிழிகள் வருவதையும் யாவரும் பார்ப்பதாகச் சொல்லுகிறார்கள். அதனால் அந்த மந்திரக் கிழவியும் அந்தச் சுரங்கக் கதவைத் திறப்பதற்கு மூன்று முறை மந்திரங்களை உச்சரிப்பதாகத்தான் தெரிகிறது. சமீபத்தில் வசித்து, யாவருக்கும் உபகாரம் செய்யும் ஏழு சித்திரக் குள்ளர்கள் கூட இங்கு வந்து ஒன்றும் செய்ய முடியாமல் தோல்வியுற்றுத் திரும்பிப் போய் விட்டார்கள். நீங்கள் இருவரும் யோசனை செய்து இனி மேல் மந்திரக் கிழவியின் சூழ்ச்சி இந்தப் பட்டணத்தில் பலிக்காமல் செய்து விட்டுப் போக முடியுமா என்று இன்று இரவு சிந்தனை செய்து பாருங்கள்'' என்றார். அவரது பேச்சிலே கவலை தொனித்தது.

இரவு முழுவதும் மால்கோஷுக்குத் தூக்கம் வரவில்லை. போலீஸ் அதிகாரி அந்த மந்திரத்தைத் தவிர வேறு ஒரு மந்திரத்தையும் யாரும் தண்ணீருக்குள் சொல்ல முடியாது என்று சொன்னாரே; அந்த மந்திரம் எதுவாக இருக்கலாம் என்று யோசித்தான். கடைசியில் அவன் யோசித்து, மந்திரம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்தான். 'எல்லோரும் ஏதோ பெரிய மந்திரமாக இருக்கும் என்று நினைத்துக் கொள்ளட்டும் என்று கிழவி செய்த சுலபமான சூழ்ச்சி தான் இது' என்று நினைத்தான்.

அங்கும் இங்குமாக மாறு உருவத்தில் அலைந்து திரியும் மந்திரக் கிழவிக்கு மால்கோஷும், கலாவும் அந்தப் பட்டணத்துக்கு வந்த சமாசாரம் தெரியாமலா இருக்கும்? ஆனால் அவள் வயது வந்த கிழவி ஆயிற்றே. அவளுக்கு யாரிடத்தில் பயம்? மால்கோஷையும் அவனது தங்கையையும் அவள் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. 'அந்தப் பொல்லாத ஏழு சித்திரக் குள்ளர்களையும் மரங்களாக மாற்றியதைத் திரும்பவும் இவர்கள் மந்திர பலத்தினால் உயிர் பெறச் செய்தோம் என்ற கர்வமா? அவர்கள் என் எதிரில் ஒரு கடுகைப் போலத்தான்!' என்று பெருமையாகத் தனக்குத் தானே பேசிக் கொண்டு மகிழ்ந்தாள். 'என் விஷயத்தில் அவர்கள் குறுக்கிடட்டும். அவர்களின் உயிருக்கே ஆபத்தை உண்டாக்குகிறேன்!'' என்று தனக்குத் தானே தீர்மானித்துக் கொண்டாள்.

(தொடரும்).



மலைச்சாரல் மாதவி

அத்தியாயம் 19

ஜயந்தியின் கோபம்

ஜயந்திக்கு எதை நினைத்தாலும் உடனே அதைச் செய்துவிட வேண்டும். அந்த வழக்கப்படி அவள் வீட்டுக்குப் போன உடனே தன் தந்தையைத் தேடிக் கொண்டு போனாள்.

அவருடைய அறையில் நுழைந்ததும் கோபமாக, "அப்பா! இந்த மானேஜர் ஏன் இப்படிக் கத்துகிறார். நன்றாகவே இல்லையே?" என்றாள்.

"என்னம்மா நடந்தது?" என்று கேட்டார் விஜயராகவன்.

"நான் என் தோழிகளை அழைத்துக் கொண்டு நமது தொழிற்சாலையைக் காட்டப் போனேன் அப்பா! அப்போது கருணாகரன் ஒரு ஆளிடம் இரைந்து கொண்டிருந்தார். என் தோழிகள் எல்லாம் சிரித்தார்கள். எனக்கு அவமானமாக இருந்தது. தொழிற்சாலையில் அப்படியா சத்தம் போடுவது? கொஞ்சங்கூட நன்றாக இல்லை. இதனால் தான் தொழிலாளர்களுக்கு முதலாளிகள்மீது ஆத்திரம் உண்டாகிறது!" என்றாள் ஜயந்தி.

"ஏனம்மா இப்படிப் பொரிந்து தள்ளுகிறாய்? கருணாகரன் கோபித்துக் கொண்டான் என்றால் அதற்குத் தகுந்த காரணம் இல்லாமல் இருக்காது. யாராவது தவறு செய்திருப்பார்கள்."

"என்னதான் தவறு செய்யட்டுமே. இப்படியா காட்டுமிராண்டித்தனமாகக் கத்துவது? கொஞ்சங்கூட நாகரிகம் தெரியாத மனிதர். அவரை நீங்கள் மானேஜராகவே ஆக்கியிருக்கக் கூடாது."

"ஜயந்தி! கொஞ்சம் நான் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள். கருணாகரன் ரொம்ப நல்லவன். வாய் அதிகம் தான். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் உண்மையானவன். அவனை நம்பி என்னால் ஆலையை விட்டுவிட முடிகிறது. வேறு யார் இருந்தாலும் என்னால் இவ்வளவு நிம்மதியாக இருக்க முடியாது. தவிர ரொம்பக் கெட்டிக்காரன்!"

"கெட்டிக்காரத்தனத்தை நீங்கள் தான் மெச்சிக் கொள்ள வேண்டும். ஆட்களுடன் சுமுகமாகப் பேசி வேலை வாங்கத் தெரியாதவர் கெட்டிக்காரரா? இன்னும் கொஞ்ச நாட்கள் இவர் மானேஜராக இருந்து ஆலையைக் கவனித்துக் கொண்டால் நிச்சயம் ஏதாவது பெரிய கஷ்டம் உண்டாகும். தொழிலாளர்கள் எல்லாரும் நம்மை வெறுக்கத் தொடங்கி விடுவார்கள்" என்றாள் ஜயந்தி.

"அப்படி ஒன்றும் நேராது, அம்மா! முன் கோபம்தான் அவனைப் பொல்லாதவன் போலக் காட்டுகிறது. அவன்



மானேஜர் ஆனபிறகு செய்திருக்கும் காரியங்கள் எல்லாம் அவனுடைய புத்தி சாலித் தனத்தைக் காட்டுகின்றன. தொழிலாளர்களுக்கு எத்தனையோ வசதிகள் செய்து கொடுத்திருக்கிறான். அவனும் ஏழைகளின் கஷ்டங்களை உணர்ந்தவன்தான் ஜயந்தி !''

ஜயந்திக்குத் தன் தகப்பனாரிடத்தில் மரியாதை உண்டு. அவர் கூறினால் சரியாகத்தான் இருக்குமென்று தோன்றியது. அன்று அதற்கு மேல் அவள் ஒன்றும் சொல்லவில்லை.

அன்றிரவு அவளுக்குக் கருணாகரனைப் பற்றிய நினைவாகவே இருந்தது. 'அவரைப்பார்த்து எப்படியாவது கோபத்தை விட்டு விடுங்கள் என்று சொல்ல வேண்டும். நான்சொன்னால் கேட்பார்' என்று எண்ணமிட்டாள். உடனே 'நான் சொல்லி அவர் ஏன் கேட்கப் போகிறார்?' என்று ஏமாற்றமும் உண்டாயிற்று.

ஒரு நாள் கருணாகரன் வீட்டுக்கு வந்து விஜயராகவனைப் பார்த்து விட்டுப் போனான். ஜயந்தி மாடிப்படியில் நின்று அவன் வருவதைப் பார்த்தாள். அவனோ அவளைப் பார்த்த மாதிரியே தோன்றவில்லை. திரும்ப அவன் அறையிலிருந்து வரும் வரை அங்கேயே நின்று கொண்டிருந்தாள். திரும்பிப் போகும் போதாவது ஒரு வார்த்தை பேச மாட்டானா என்று நினைத்துக் காத்துக் கொண்டிருந்தாள். அரை மணியில் அவன் வந்தான். ஆனால் என்ன ஏமாற்றம்? ஜயந்தியின் பக்கமே திரும்பாமல் போய்விட்டான்.

ஜயந்தி தன் தந்தையின் அறைக்குச் சென்றாள். அவர் ஏதோ காகிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

''அப்பா! உங்கள் மானேஜருக்கு மரியாதை தெரியவில்லையே?'' என்றாள்.

விஜயராகவன் தம் புருவங்களை மாத்திரம் கேள்விக் குறியாக உயர்த்தினார்.

''என்னைப் பார்த்துவிட்டு, 'சௌக்கியமா?' என்று கூடக் கேட்காமல் போய் விட்டார்'' என்றாள்.

விஜயராகவனுக்கு அவள் கூறுவது வேடிக்கையாக இருந்தது. ''உனக்குத் தான் கருணாகரனைப் பிடிக்கவில்லை என்று குற்றம் சொன்னாயே, இன்று பேசவில்லை என்று வருத்தப்படுகிறாயே!'' என்று கூறினார்.

''எனக்கொன்றும் வருத்தமில்லை. மரியாதை தெரியாதவராக இருக்கிறாரே என்று உங்களிடம் சொல்ல வந்தேன்.''

''அவன் உண்மையில் ரொம்ப நல்லவன், ஜயந்தி. உன்னிடம் உள்ள மரியாதையினாலேயே பேசாமல் போயிருக்கலாம் அல்லவா? பாவம்! தாய் தகப்பன் இல்லாதவன். நான் அவனைப் பற்றி என்னென்னவோ நினைத்துக் கொண்டிருந்தேன்.''

''என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

விஜயராகவன் உடனே பதில் சொல்லவில்லை. மேஜைமீதிருந்த காகிதங்களை ஒரு பக்கமாக நகர்த்தி அவற்றின் மீது ஒரு பாரத்தை எடுத்து வைத்தார். பிறகு எழுந்து நடக்க ஆரம்பித்தார். அவர் தீவிரமாகச் சிந்தனை செய்யும்போது தான் அப்படிக் குறுக்கும் நெடுக்குமாக நடப்பது வழக்கம். ஆகவே ஜயந்தி பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

ஐந்து நிமிஷம் நடந்தபின் அவர், ''ஜயந்தி! உன்னிடம் சொன்னால் தவறு இல்லை. கருணாகரன் ரொம்பக் கெட்டிக்காரன். அவனுக்கு உன்னை மணம் செய்து கொடுத்து விடலாம் என்று நான் ஆசைப்படுகிறேன். நமது தொழிற்சாலையை நிர்வகிக்கக் கூடிய திறமை அவனுக்குத்தான் இருக்கிறது. பணம், காசு படைத்தவர்களின் சம்பந்தம் நமக்கு எதற்கு? எனக்குப் பிறகு உன்னையும், தொழிற்சாலையையும் பார்த்துக் கொள்ள அவன் ஒருவனால்தான் முடியுமென்று தோன்றுகிறது. நீ யோசனை செய்து சொல்லு, அம்மா!'' என்றார்.

ஜயந்தி திகைத்துப் போனாள். இதை அவள் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. 'கருணாகரனை மணந்து கொள்வதா? அப்பாவா இப்படிச் சொல்கிறார்?' என்று அதிசயப் பட்டாள்.

அவள் பதில் சொல்லாமல் இருப்பதைப் பார்த்து விட்டு விஜயராகவன், ''நீ உடனே எதையும் நிச்சயம் செய்து கொள்ள வேண்டாம் அம்மா. யோசித்துச் சொல்லு. கருணாகரன் ரொம்ப நல்லவன் என்பதை நீ கொஞ்சம் பழகினால் தெரிந்து கொண்டு விடுவாய். ஆனால் உனக்கு விருப்பமில்லை என்றால் தைரியமாகச் சொல்லிவிடு. நான் வற்புறுத்தமாட்டேன்'' என்றார்.

அன்று முழுவதும் ஜயந்திக்கு வேறு எதுவும் ஓடவில்லை. தன் தகப்பனார் கூறியதையே நினைத்துக் கொண்டிருந்தாள். அதுவரை அவள் தன் திருமணத்தைப் பற்றி ஒரேவிதமான அபிப்பிராயம் தான் கொண்டிருந்தாள். ஜயந்தியின் தோழி ஒருத்தி மைசூரில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் தனக்கேற்றவனைத் தேர்ந்தெடுத்துப் பெற்றோரின் சம்மதமும் பெற்று மணம் செய்து கொண்டாள். இதை அறிந்தது முதல் ஜயந்திக்குத் தானும் காதல் மணம்தான் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசை ஏற்பட்டிருந்தது.



இப்போது தன் தந்தை இவ்வாறு கூறவே அவளுக்கு ஒரே திகைப்பாகப் போய் விட்டது. முதலில் இவரைக் கல்யாணம் செய்து கொள்ளவே கூடாது என்ற எண்ணம்தான் ஏற்பட்டது. சிறிது நேரம் யோசனை செய்து பார்த்த பிறகு, "அப்பா யோசனை சொன்னார் என்பதற்காக இவரை மறுக்கக் கூடாது. உண்மையிலேயே அவரைப் பிடிக்கா விட்டால் மணம் செய்து கொள்ள வேண்டாம். அப்பா சொல்லும் யோசனை தவறாக இருக்காது. மேலும் அவரை இரண்டு தடவைகள்தானே பார்த்திருக் கிறேன். அதற்குள் அவரைப் பற்றி என்ன தெரிந்துகொள்ள முடியும்?" என்றெல்லாம் யோசனை செய்தாள்.

தன்னுடைய தோழி ஒரு டாக்டரையே விரும்பி மணந்து கொண்ட போது தான் அதை ரொம்ப மெச்சியது அவளுக்கு ஞாபகம் வந்தது. இரண்டு பேருக்கும் வாழ்க்கையில் ஒரேவிதமான நோக்கங்களும், எண்ணங்களும் இருக்கும்; வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும் என்று அதைப் புகழ்ந்தாள்.

ஆகவே தொழிற்சாலையின் மானேஜரையே தானும் மணந்து கொண்டால் இருவருக்கும் நல்லது என்று நினைத்தாள் ஜயந்தி.

மற்ற எல்லாப் பொருத்தங்களும் சரியாகத்தான் இருக்கின்றன, மனம் தான் பொருந்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

அத்தியாயம் 20

அன்பு பிறந்தது

கருணாகரனைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருந்தபடியால் இரண்டு நாட்களுக்குப் பின் அவன் வீட்டுக்கு வந்தபோது ஜயந்தி, "வாருங்கள்" என்று கூறி வரவேற்றாள்.

"அப்பாவைப் பார்க்க வேண்டும்" என்றான் கருணாகரன்.

"யாரோ இரண்டு பேர்கள் வந்திருக் கிறார்கள். அப்பா அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள்" என்றாள் ஜயந்தி.

உடனே உட்கார்ந்தான் கருணாகரன்.

ஜயந்தியும் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"காப்பி சாப்பிடுகிறீர்களா?"

"வேண்டாம்" என்று மெதுவாகச் சொன்னான் கருணாகரன்.

"அன்று தொழிற்சாலை முழுவதும் உங்கள் குரல் கேட்டதே. இன்று குரலே கேட்கவில்லையே!" என்று வம்புத் தனமாகக் கூறினாள் ஜயந்தி.

அவள் அப்படிக் கூறியது கருணாகரனுக்குக் கூச்சமாக இருந்த போதிலும், அவள் அந்தச் சம்பவத்தை நினைவு வைத்துக் கொண்டிருப்பதே அவனுக்குப் பெருமையாக இருந்தது.

"உங்களைப் பார்த்தால் பேச்சு வர மாட்டேனென்கிறது" என்றான்.

ஜயந்தி அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள். "அப்பா சொன்னதெல்லாம் சரிதான்" என்றாள்.

"அப்பா எதைச் சொன்னாலும் சரியாகத்தான் இருக்கும். அவர் என்ன சொன்னார்?" என்று கேட்டான்.

"நீங்கள் ரொம்பக் கெட்டிக்காரர் என்று ஒரேயடியாகப் புகழ்ந்தார். அது உண்மைதான் என்று எனக்கும் தோன்று கிறது" என்றாள் ஜயந்தி.

கருணாகரனுக்குப் பெருமையாக இருந்தது. ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளாமல், "உங்களைப் பற்றிக்கூட அப்பா என்னிடம் கூறியிருக்கிறார். நீங்கள் ரொம்பப் பொல்லாதவராம்" என்றான்.

ஜயந்தி சிரித்துக் கொண்டே, "ஆமாம். நான் பொல்லாதவள்தான். இருந்தாலும் உங்களைப் போல் தொழிலாளிகளிடம் சத்தம் போட்டு ரகளை செய்ய மாட்டேன்" என்றாள்.

"பழுது நேர்ந்தால் அதைக் கவனிக்க வேண்டாமா? ஒரு சிறிய விஷயத்தைக் கவனிக்கவில்லையானால் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது. தொழிலாளிகள் யாராவது ஒருவன் தன் காரியத்தைச் சரியாகச் செய்யவில்லையானால் எனக்குத் தாங்க முடியாத கோபம்தான் வருகிறது" என்றான் கருணாகரன்.

"இருந்தாலும் நீங்கள் இவ்வளவு கோபித்துக் கொண்டால் தொழிலாளிகளின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். புது மானேஜர் ரொம்பக் கோபக்காரர் என்று எல்லாரும் பேசிக் கொள்வதாகக் கேள்விப் பட்டேன். நீங்கள் கோபத்தை விட்டு விடுங்கள்."

கருணாகரனுக்கு இப்போது உண்மையாகவே கோபம் வந்து விட்டது.

"இந்தத் தொழிற்சாலைக்கு நீங்கள் முதலாளியாகும் போது, நான் உங்களிடம் வேலை பார்த்தால் அப்போது புத்தி சொல்லுங்கள்" என்றான்.

அவனுக்குப் 'பட படா' வெடிப்பது போலக் கோபம் வருவதைக் கண்டு உள்ளுக்குள்ளே நகைத்தாள் ஜயந்தி.



பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர்.ஜே. போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப்படுகிறது. ரத்தக்கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸை கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி விடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப்படலாம்.
தன்த்வைதினல்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது

விவரிக்க முடியாத உவகை அவன் நெஞ்சில் எழுந்தது.

"தவருக எண்ணிக் கொள்ளாதீர்கள், மிஸ்டர் கருணாகரன்! நான் விளையாட்டாகச் சொன்னேன். புத்தி சொல்லவோ, அதிகாரம் செய்யவோ எனக்கு ஆசையில்லை. அளவில்லாத கோபத்துக்கு இடம் கொடுத்தால் உங்களுக்கே உடம்புக்கு ஆகாது. கோபம் அளவுக்கு மீறிப் போனால் இதயத்தைப் பாதிக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"என் இதயத்தைப் பற்றித் தாங்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வதற்கு மிகுந்த வந்தனம்" என்றான் கருணாகரன் விரைப்பாக.

ஜயந்தி அதை எப்படிப் பொருள் செய்து கொள்வதென்று விழித்தாள்.

"இதயம் என்பது ரொம்பப் பொல்லாத ஒரு வஸ்து. நம் இதயத்தை நம்மாலேயே கவனித்துக் கொள்ள முடிவதில்லை" என்றாள்.

இதற்கு என்ன அர்த்தம் என்று புரியாமல் கருணாகரன் விழித்தான்.

அந்தச் சமயத்தில் விஜயராகவன், தம் நண்பர்களை யெல்லாம் வழியனுப்ப வாசலுக்கு வந்தார்.

ஜயந்தி தணிந்த குரலில், "உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். இதயத்தில் கோளாறு ஏற்படும்படி செய்து கொள்ளாதீர்கள். தொழிற்சாலையைக் கவனித்துக் கொள்ளத் திறமை உள்ள ஒருவர் வேண்டும்" என்று கூறிவிட்டு உள்ளே ஓடிப் போனாள்.

விஜயராகவனின் அறையில் நுழையும் போது கருணாகரன் மனத்தில், 'என் இதயம் என்னிடம் இருந்தால் அல்லவா கோளாறு ஏற்படுவதற்கு?' என்ற எண்ணம் தோன்றியது. உடனே அவனுக்குப் பயமாகப் போய் விட்டது. தன் எண்ணத்தை அவரிடமிருந்து மறைக்க விரும்புவது போலக் கையிலிருந்த புத்தகத்தை மார்போடு அழுத்திப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்றான்.

அவருடன் பேசி விட்டு வெளியே சென்ற போது நான்கு பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தான். மாடி ஜன்னல் அருகில் ஜயந்தி நிற்பது தெரிந்தது. அவள் கையை ஆட்டி விடை கொடுத்தாள். விஜயராகவன் பார்த்து விடுவாரோ என்ற பயத்தால் பதிலுக்குக் கையை ஆட்டாமலேயே சைக்கிளில் ஏறிச் சென்றான் கருணாகரன்.

இப்படி ஆரம்பித்த ஜயந்தி, கருணாகரனின் அன்பு, விஜயராகவனுக்குத் திருப்தியளிக்கும் முறையில் வளர்ந்து வந்தது. எல்லாரிடமும் ஜயந்தியைக் கருணாகரனுக்கு விவாகம் செய்து கொடுக்கலாமென்று நினைத்துக் கொண்டிருப்பதாகக் கூறி வந்தார்.

அவருடைய மனைவிக்கு மாத்திரம் அவ்வளவு திருப்தி இல்லை. ஜயந்தி அவருடைய ஒரே பெண். மாற்றாந்தாயின் போதனையினால்தான் ஏழைப் பையனுக்குக் கொடுத்து விட்டார் என்று ஊரார் ஏசுவார்கள் என்று அந்த அம்மாள் பயந்தாள். அவளுக்கு ஜயந்தியிடம் ரொம்பப் பிரியம் உண்டு. ஆகவே அவளை நல்ல இடமாகப் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். இந்த அனாதைப் பையனுக்குக் கொடுப்பதாகத் தம் கணவர் கூறுவது அவளுக்குப் புரியவில்லை.



ஜயந்தியிடமும் தன் எண்ணங்களை அவ்வப்போது கூறுவாள். "உன்னைக் குழந்தை முதல் நான் வளர்த்தேன். எனக்குத் தெரியும். நான் சொல்வதைக் கேளு. இந்தப் பையனுக்கு ஒன்றுமே கிடையாது. ஊரெல்லாம் சண்டை. சித்தப்பனோடு சண்டை. இவனுடைய அக்காவுக்குப் பேரன் பேத்தி எடுக்கும் வயதாகி விட்டது. இன்னும் அவள் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அவனைக் கல்யாணம் செய்து கொண்டால் அவளை நீதான் கட்டிண்டு மாரடிக்கணும். ரொம்பப் பொல்லாதவள் என்று என் தம்பி முன்னேயே சொல்லியிருக்கிறான். வீட்டுக்குள்ளேயே வர விடமாட்டாளாம்" என்றாள்.

அருள் வாக்கு

சூரிய கிரணம் இருக்கிறது. ஒவ்வொரு கிரணமும் நெருப்பே. ஆனால் ஒரு துணியை வெய்யிலில் காட்டினால், அதில்தீப்பற்றிக் கொள்ளாது. லென்ஸ் என்ற பூதக் கண்ணாடியை வெய்யிலில் காட்டி அதன்கீழ் ஒரு துணியைப் பிடித்தால்அதில் தீப்பற்றிக் கொள்ளுகிறது. பூதக் கண்ணாடி அனேக கிரணங்களை ஒருமிக்கக் குவிக்கிறது. மின்சார சக்தி (எலெக்டிரிஸிடி) எங்கும் இருக்கிறது. அதை வெளிப்படுத்த ஒரு சக்தி ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படியே எங்கும் உள்ள ஈசுவரனுடைய அருள் நமக்குக் கிடைக்கும்படி செய்ய ஆலயம் அவசியமாக இருக்கிறது.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்.

''உங்க தம்பி சமாசாரம் நமக்குத் தெரியுமே. நான்கூட இங்கே வரவேண்டாம் என்று சொல்லி இருக்கிறேன்'' என்றாள் ஜயந்தி.

''அது சரி, அம்மா! என் தம்பி பொல்லாதவன். வராமலிருப்பதுதான் நல்லது. நீ படித்த பெண். உனக்கு நல்லது பொல்லாதது தெரியும். யோசனை செய்து பார். கருணாகரனைக் கல்யாணம் செய்து கொண்டால் நீ சந்தோஷமாக இருக்க மாட்டாய் என்று எனக்குத் தோன்றுகிறது. அதற்குப் பிறகு உன் இஷ்டம்'' என்று கூறினாள் சின்னம்மா.

''அப்பா ரொம்ப இஷ்டப்படுகிறாரே. அவர் தெரியாமல் சொல்வாரா?''

''உங்க அப்பாவுக்கு என்ன தெரியும்? நான் ஒருத்தி இங்கே இருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வதால் அவர் மில்லைப் பற்றியே நினைத்துக் கொண்டு பொழுது போக்குகிறார். பெண்ணை நல்ல இடமாகப் பார்த்துக் கௌரவமாகக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டுமென்று தோன்றவில்லையே. கடைசியில் எல்லாரும் இந்தச் சிறிய தாயார்தான் இப்படிச் செய்து விட்டாள் என்று என்னைத்தான் தூற்றுவார்கள்'' என்றாள்.

''நான் வேண்டுமானால் பத்திரிகையில் விளம்பரம் செய்து விடுகிறேன், சின்னம்மா! 'நானாக விரும்பித்தான் கருணாகரனைக் கல்யாணம் செய்து கொண்டேன்; என்னை யாரும் வற்புறுத்தவில்லை என்று பத்திரிகையில் பிரசுரிக்க ஏற்பாடு செய்துவிடலாம்!' '' என்று கூறிவிட்டு நகைத்தாள் ஜயந்தி.

''ஆமாம்! அந்த ஒரு அவமானம்தான் இன்னும் பாக்கி. அந்தப் பிள்ளை ஏற்கெனவேயே எல்லாரிடத்திலும் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக டமாரம் அடித்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய அழகிலும், சாமர்த்தியத்திலும் மயங்கிப் போய் நீ உன் அப்பாவிடம், 'இவனைத்தான் செய்து கொள்வேன். இல்லாவிட்டால் உயிரை விட்டு விடுவேன்' என்று பயமுறுத்தியதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறானும். எனக்கு மானம் போகிறது. உன் தாயார் இருந்தால் இப்படி நேர இடங்கொடுப்பாளா, என்று எல்லாரும் கூறி என்னை ஏசுகிறார்களாம்'' என்று சொல்லிக் கண்ணீர் உகுத்தாள்.

''என்ன சின்னம்மா அழுகிறே? ஊரில் யாராவது ஏதாவது சொன்னால் அதற்கு அழுதால் முடியுமா? அவர் ஒன்றும் எல்லாரிடமும் சொல்லவில்லை. அப்பா தான் 'ஜயந்திக்கும் பிடித்து விட்டது. எனக்கும் திருப்தியாக இருக்கிறது' என்று நண்பர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர்கள் எதிரே தலையை ஆட்டி சந்தோஷம் தெரிவித்து விட்டு வெளியே போய் இப்படியெல்லாம் கதை கட்டி விடுகிறார்கள். இதற்கெல்லாம் கவலைப் பட்டு ஒன்றும் ஆகப் போவதில்லை'' என்று தன் சிற்றன்னைக்கு ஆறுதல் கூறினாள் ஜயந்தி.

''அது போகட்டும். கல்யாணத்தைக் கோவிலில் பண்ணுவானேன்? எல்லாரையும் கூப்பிட்டு வீட்டில் திருமணத்தை நடத்தினால் என்ன?''

''அப்பா ஒரு காரணமாகத்தான் சொல்கிறார், சின்னம்மா. அவருக்கு எப்போதுமே ஆடம்பரம் பிடிக்காது. எனக்கும் பிடிக்காதென்று உனக்குத் தெரியும். நீயே சொன்னது போல, அந்தப் பெண்ணுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அவர்களுக்கும் அவர்களுடைய சித்தப்பாவுக்கும் விரோதம். ஊராரை அழைத்து விட்டு, அவரைக் கூப்பிடாவிட்டால் நன்றாக இருக்காது. அப்பாவுக்கோ முகுந்தனை நன்றாகத் தெரியும். கூப்பிட்டால் இவர்களுக்குப் பிடிக்காது. ஆகவே ஒரு கோவிலில் போய்க் கல்யாணத்தை நடத்தினால் யாரும் குறை சொல்வதற்கில்லை பார்!''

''ஆமாம்! உங்களை யாரும் ஒன்றும் சொல்லக் கூடாது. என்னை எல்லாரும் ஏசலாம். என்னமோ இந்தப் பிள்ளையை எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் சின்னம்மா.

ஜயந்திக்குத் தன் சின்னம்மாவின் மீது பரிதாபமும் ஏற்பட்டது. அதே சமயம் சொல்வதைப் புரிந்து கொள்ளமாட்டேனென்கிறாளே என்று கோபமும் வந்தது. அவளுக்குச் சமாதானம் சொல்லிச் சாத்தியப்படாது என்று நினைத்து எழுந்து சென்றாள். **(தொடரும்)**

பெண்கள் படிப்பு



தேவியின் கடிதம்

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

பெண்களும், பிள்ளைகளும் ஒன்றாகப் படிப்பது நன்மையாகுமா எனக் கேட்டிருக்கிறாய். நான் இதைப் பற்றி நிறைய சிந்தனை செய்திருக்கிறேன். வாழ்க்கையில் சில அநுபவங்களையும் பார்த்திருக்கிறேன்.

ஒரு அம்மாளுக்கு நான்கு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். ஒரு சமயம் அவர்கள் வீட்டுக்கு நான் போயிருந்த சமயம் பதினொன்று வயதுப் பெண் அண்ணன் தம்பிகளுடன் போட்டியிட்டுக் கொண்டு மாமரத்தில் ஏறினாள். அந்த அம்மாள் வெட்கப்பட்டுக் கொண்டு, "என்ன செய்வது? இந்தப் பெண் இவர்களுடன் சேர்ந்து விளையாடி, விளையாடி இவளுக்கும் இப்படி முரட்டு விளையாட்டு வருகிறது" என்றார். அந்தப் பெண்ணின் செய்கை விரும்பத் தக்கதல்ல. பெண்களின் அணிகலனாகப் போற்றி வரும் நாணத்தைக் காற்றிலே பறக்க விட்டால் அவளைப் பெண்ணென்று கூற முடியுமா?

மாணவர்களில் சிலர் இயற்கையில் துடிப்பாக இருக்கிறார்கள்; ஆசிரியர் பாடம் நடத்தும்போது சில பையன்கள் கேலியாகப் பேசுவது, மாணவிகளைக் கேலி செய்வது இவைகளெல்லாம் நடைபெறுகின்றன. பெண்களும் மனம் விட்டுப் படிக்க முடியாமல் கஷ்டப் படுகிறார்கள்.

தற்காலத்தில் பையன்களை விடப் பெண்கள் பொறுப்பாக நன்றாகப் படிக்கிறார்கள். ஆசிரியர் கேள்வி கேட்கிறார். ஒரு மாணவன் பதில் சொல்ல முடியாமல் விழிக்கும்போது ஒரு பெண் தகுந்த விடையைச் சொல்லி விட்டால் மாணவனுக்கு ஆத்திரம் உண்டாகிறது. ஒரு பெண்ணுக்கு முன்னால் தான் அவமானம் அடைந்ததாகக் குரோதம் ஏற்படுகிறது. வகுப்புக்கு வெளியே அந்தப் பெண் மனம் நோக நையாண்டி செய்கிறார்கள். தனக்குத் தெரியாததை மற்றொரு மாணவன் சொன்னானென்றால் அவ்வளவு ஆத்திரம் ஏற்படுவதில்லை. மாணவி சொன்னால்தான் பொறாமை. இது பள்ளிக்கூடங்களில் படித்தவர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. . . .

பெண் குழந்தைகள் மனோபாவம், ஆண் குழந்தைகள் மனோபாவம் இவைகளை நன்றாக ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்ற ஒரு அம்மாளைச் சில நாட்களுக்கு முன் சந்தித்தேன். கூட்டுக் கல்வியைப்பற்றி அவர்களிடம் கேட்டேன்.

அந்த அம்மாள், "கூட்டுக் கல்வித் திட்டத்தில் படிப்பு வருவது கால் பங்கு. தாழ்வு மனப்பான்மை, தானென்ற உயர்வு மனப்பான்மை, போட்டி, பொறாமை இவைகள் தான் முக்கால் பங்கு இடம் பெறுகின்றன" என்று கூறினார். இது எனக்கு உண்மையாகவே தோன்றியது.

முன்னேறிய நாடுகளில் கூட்டுக் கல்வி நன்மையா? தீமையா என்ற விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கக்கூட இல்லை. அவ்வளவு சகஜமாக அந்தக் கல்வித் திட்டம் பரவி இருக்கிறது. அநுபவப்பட்ட அந்த அம்மாள் போதனை முறையைப் பற்றியும் அநேக விஷயங்கள் சொன்னார். அவைகளில் முக்கியமாக ஒரு பெண்ணின் மனத்தைப் புரிந்து கொண்டு போதிக்க ஒரு பெண் ஆசிரியையால்தான் முடியும் என்றார். சில பாடங்கள் பரீட்சை முறைகள் பொதுவாக இருக்கலாம். ஆனால் பெண்கள் கற்று அறிய வேண்டிய தையல், வீட்டு நிர்வாகம், பிறருக்குத் தொண்டு செய்யும் திறன் இவைகள் கூட்டுக் கல்வியில் சரிவர இல்லை. அவற்றைப் போலவே ஆண்களுக்கும் தேகாப்பியாசம், சில விளையாட்டுகள் இவைகளைப் போன்றவைகள் பிரத்தியேகமாக இருக்க வேண்டி வருகிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும், கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் ஏறக்குறைய பதின்மூன்று வயதிலிருந்து இருபது வயதுவரை இருக்கும். அந்த வயது விவரம் தெரியாத காலம். எதிர்கால நன்மையைப் பற்றிப் புரியாத வயது. அந்த வயதில் ஒருவகைக் கட்டுப்பாடுடன் நல்ல வழக்கங்களுடன் இருப்பது அவசியமாகும். கூட்டுக் கல்வி ஒருவருடன் ஒருவர் நெருங்கிப் பழக நிறையச் சந்தர்ப்பங்களை அளிக்கிறது. பொறுப்புத் தெரியாத வயதில் இத்தகைய சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதுதான் சிறந்தது. எனவே கூட்டுக் கல்வி நன்மை இல்லை என்பதுடன், அதில் கெடுதல்கள் நிறைய இருக்கின்றன என்றுதான் கருதுகிறேன்.

இப்படிக்கு,
பூமாதேவி.

அவள் அழகில் வெற்றி இருக்கிறது **அவள் அழகில் ஒரு இரகசியம் இருக்கிறது**

"நான் வத்னியை உபயோகிக்கிறேன்"
என்று மதுபாலா கூறுகிறார்.

"மூன்று நல்ல காரணங்களுக்காக:

அது கடைசி செதில்வரை புதுமையும் நறுமணமுமுள்ளது.

அது உயர்ந்த ரகமும் ஸ்வதேசியுமானது.

அது கோத்ரெஜினால் தயாரிக்கப்பட்டது"

மதுபாலா மேலும்
கோத்ரெஜ்
டாய்லெட் பவுடர்
கூந்தல் தைலம்
சலவை சோப்புத் தூள்களை
உபயோகிக்கிறார்.

"அவைகள் மிகவும் நம்பகமானது" என்று கூறுகிறார்.

100% இந்திய நிர்வாகம் மூலதனம்




Godrej கோத்ரெஜ்
ரிஜிஸ்டர்டு

வத்னி*

சாவி மார்க்

வத்னி 'பேபி' விலை 2¼ அணாதான்

*"தாய்நாடு" என்று அர்த்தங்கொண்ட 'வதன்' என்ற வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.



கலைச் செல்வி

கி. ராஜேந்திரன்

மூன்றும் அத்தியாயம்

கலைச்செல்வியை நான் பார்க்கப் போனபோது அவள் நான் எதிர்பார்த்த படி மலர்ந்த முகத்துடன் ஓடி வந்து என்னை வரவேற்றாள்.

'அண்ணாச்சி! கொட்டகையில் உங்களுக்குப்பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தாரே அவர் யார்?' என்று கேட்டாள்.

'யாரோ வந்து உட்கார்ந்தார்கள், அம்மா! யார் என்று எனக்குத் தெரியாது' என்றேன் விளையாட்டாக.

'யார் என்று தெரியாமல்தான் கச்சேரிக்குப் பிறகு அவருடன் நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்களாக்கும்!'

'நீ ரொம்பக் கெட்டிக்காரியம்மா! ஆனால், நான் உன்னைவிடக் கெட்டிக்காரன் தெரியுமா? உனக்கு இன்று சரியாக நாலு தடவைகள் தாளம் தவறி விட்டது. அதற்குப் பின் நான் இருந்த பக்கமே திரும்பிப் பார்க்காமல் ஆடினாய். தாளம் தவறவில்லை. ஏன் அப்படி?' என்று கேட்டேன்.

கலைச்செல்வியின் முகம் சிவந்து விட்டது. நான் கூறியது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டு, கச்சேரி முடிந்ததும் அவரை இன்னும் ஒரு முறையாவது பார்த்து விட வேண்டும் என்ற ஆவலில் திரையைச் சற்று விலக்கிப் பார்த்ததாயும் அவர் என்னோடு பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதாயும் கூறினாள்.

பின்னர், 'அண்ணாச்சி! சபையோர் ரசித்ததைப் பற்றி எனக்கு ஒன்றும் அக்கறை யில்லை. அவர் என் நடனத்தைப் பற்றி என்ன சொன்னார்? அதைச் சொல்லுங்கள்' என்றாள்.

'உன் நடனத்தைப் பற்றி அவன் ஒன்றுமே சொல்லவில்லை', என்ற போது அவள் முகம் சுருங்கி விட்டது. 'ஆனால் உன்னை நேரில் கண்டுதான் தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினான்' என்று நான் கூறி முடித்தேன்.

கலைச்செல்வி கலகலவென்று சிரித்து விட்டு, 'அவரை எப்போது அழைத்து வருகிறீர்கள்?' என்று கேட்டாள்.

கோகிலத்திடமும் உமாபதியைப் பற்றிக் கூறி அவனை மறுநாள் அழைத்து வருவதாகவும் சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

மறுநாள் நான் உமாபதியைக் காணச் சென்றபோது அப்பாவிடம் இருந்த பழக்கம் பையனுக்கும் இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்த போதிலும் எப்படியோ வாரத்துக்கு ஒரு முறையாவது எங்கிருந்தோ மதுவைக்கொண்டு வந்து அருந்தி விடுகிறான் என்று அவன் தங்கை சாந்தம்மா கூறப் புரிந்து கொண்டு, மிகுந்த மனத் துயரத்துடன் கலைச்செல்வியைக் காணச் சென்றேன்.

வாசலுக்கு ஆவலுடன் ஓடி வந்த கலைச் செல்வி என்னோடு உமாபதி வராததைக் கண்டு ஏமாற்றம் அடைந்தாள். உமாபதி அவசர காரியமாக எங்கேயோ போய் இருப்பதாகக் கூறினேன். 'நான் இன்னும் சில நாட்கள் பொறுத்துத்தான் ஊருக்குப் புறப்படுகிறேன். அதற்குள் கண்டிப்பாக உமாபதியை அழைத்து வருகிறேன்' என்று உறுதி கூறினேன். பின்னர் 'தங்கச்சி! மனத்தை ரொம்ப அலைய விடாதே. அவன் அப்பாவுக்கு மது பானம் செய்யும் பழக்கம் இருந்தது. பிள்ளையிடமும் அந்தப் பழக்கம் இருக்கிறது' என்று எச்சரித்தேன்.

'அதெப்படி முடியும்? இப்போதுதான் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக்கிறதே?' என்றுகேட்டாள் கலைச்செல்வி.


'சட்டம் இருக்கிறது, தங்கச்சி! ஆனால் சட்டம் இருக்கும் இடத்தில் அதை மீறவும் ஆட்கள் இருக்கிறார்களே!' என்றேன்.

பெண்களின் மனத்தைப் புரிந்து கொள்வது இயலாத காரியம் என்று சொல்வார்களே, அதன் உண்மை எனக்கு அப்போதுதான் தெரிந்தது. உமாபதியைப் பற்றி இந்த விவரமெல்லாம் தெரியப் படுத்தினால் கலைச்செல்வி அவனை வெறுத்து விடுவாள் என்று எண்ணினேன். ஆனால் ஏமாந்து போனேன்.

'அண்ணாச்சி! அவரை மட்டும் நான் ஒரு முறை பார்த்துப் பேசி விட்டேனானால் பின்னர் அவர் நிச்சயம் அந்த வழிக்கே போக மாட்டார்' என்று உறுதியாகச் சொன்னாள் கலைச்செல்வி.

நான்காம் அத்தியாயம்

உமாபதியை நான் அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போனபோது அங்கு டி. எஸ். பி. சட்டநாதம் பிள்ளை வந்



திருந்தார். கோகிலத்துக்கு அவர் ஏதோ தூரத்து உறவு. அவருக்குக் கலைச் செல்வி முறைப் பெண். கலைச்செல்வி யைத் திருமணம் செய்து கொள்ள அவர் தயாராக இருந்தார். கோகிலமும் தன் பெண் காலா காலத்தில் கல்யா ணம் செய்து கொண்டு குடியும் குடித் தனமுமாக விளங்க வேண்டும் என்று விரும்பினாள்.

சட்டநாதம் பிள்ளையைப் பார்த்ததும் உமாபதி திடுக்கிட்டுப் போனான். 'நான் மற்றொரு சமயம் வருகிறேன்' என்று புறப்பட ஆரம்பித்தான்.

'இல்லை, இல்லை. இவர் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்' என்று கலைச்செல்வி கூறினாள். அவள் அப்படிக் கூறியதால் தானோ என்னவோ டி. எஸ். பி. சட்ட நாதம் பிள்ளை உடனே அங்கிருந்து புறப் பட்டு விட்டார். நீண்ட நேரத்துக்குப் பிறகு நாங்களும் கலைச்செல்வியிட மிருந்து விடைபெற்றுக் கொண்டோம்.

மறுபடியும் நான் கோகிலத்தையும் கலைச்செல்வியையும் சந்தித்த போது இருவரும் இரண்டு விதமாக உமாபதி யைப் பற்றிப் பேசினார்கள். கோகிலம் ரொம்பக் கவலைப்பட்டாள். 'உமாபதி மது அருந்தியதற்காக ஒரு முறை சிறை சென்றவனாமே? சட்டநாதம் பிள்ளை, தாமே அவன் கையில் விலங்கை மாட்டி னாராம். முதல் தடவை மூன்று மாதத் தோடு போயிற்று. மறுபடியும் பிடி பட்டால் மூன்று வருஷம் சிறையில் போட்டு விடுவார்களாம்' என்று மிகுந்த கவலையுடன் கூறினாள்.

கலைச் செல்வியோ ரொம்ப உற்சாக மாகக் காணப்பட்டாள். 'அண்ணாச்சி! அவர் மனத்தை மாற்றிவிட்டேன். இனி மதுபானத்தை அவர் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்' என்றாள்.

'அவ்வளவு உறுதியாக எப்படிச் சொல் கிறாய், தங்கச்சி? குடிகாரர்கள் அனை வருமே அப்படித்தான் சொல்வார்கள். ஆனால் மது நினைவு வந்தவுடன் அவர்க ளுடைய மன உறுதியெல்லாம் பஞ் சாய்ப் பறந்து போய் விடும்' என்றேன்.

'இவர் அப்படி இல்லை, அண்ணாச்சி! என் நடனக் கலையின் மீதே ஆணையிட்டுச் சபதம் செய்திருக்கிறார்!'

இதைக் கேட்டதும் என்னை அறியா மல்' ஐயையோ' என்று அலறி விட்டேன்.

'இது என்ன அசட்டுத்தனம் தங்கச்சி? மது அருந்த மாட்டேன் என்று சொன் னால் போதாதா? உன் நடனக் கலையை அதில் சம்பந்தப் படுத்துவானேன்?'

கலைச் செல்வி கல கல வென்று சிரித் தாள். 'இதற்காகவா அப்படி அலறி னீர்கள்?' என்று கேட்டாள்.

உமாபதி இனமும் வருகிறான் என்றும் சட்டநாதம் பிள்ளையும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறார் என்றும் அறிந்து கொண்டேன்.

நான் ஊருக்குப் புறப்படுவதற்கு முன் கலைச் செல்வியை மீண்டும் ஒரு முறை பார்த்துப் புத்திமதி கூறினேன். 'தங் கச்சி! கல்யாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக இருப்பது சாதாரணப் பெண்களுக்குத்தான். நீ அப்படியல்ல. நடனமாடுவதற்காகவே பிறந்திருக்கிறாய். அந்தக் கலைச் செல் வத்துக்கு ஆபத்து நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் கடமை' என்று கூறிவிட்டு அன்று இரவு கோய முத்தூரை விட்டுப் புறப்பட்டேன்.

ஐந்தாம் அத்தியாயம்

திருச்செந்தூரில் சுவாமி தரிசனம் செய்து விட்டு வெளியே வந்தபோது நாயனக்காரர் மிக்க அக்கறையுடன் அவ சரம் அவசரமாக ஓடி வந்து, 'விஷயம் தெரியுமா, பிள்ளைவாள்? சீகாழி சிற்றம் பலம் பிள்ளையின் மகன் உமாபதி குடி போதையில் இருந்தானும். மூன்று வரு ஷங்கள் உள்ளே தள்ளி விட்டார்களாம். ஹூம், அப்பனைப் போலவே பிள்ளை!' என்று கூறினார்.

இதைக் கேட்டவுடனேயே உமாபதி யைப் போய்ப் பார்த்து விட்டு வர வேண்டும்போல் தோன்றியது. ஆனால் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண் டேன். 'சத்தியம்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாத அற்பனைப் போய்ப் பார்ப்பானேன்?' என்று சும்மா இருந்து விட்டேன்.

கலைச்செல்வியைப் பற்றி எண்ணிய போதுதான் ரொம்ப வருத்தமாக இருந் தது. பாவம், அந்தப் பெண் என்ன செய்கிறாளோ? உமாபதியை எண்ணி எண்ணி அழுது கொண்டிருப்பாள்.

விரைவிலேயே நான் எண்ணியதெல் லாம் தவறு என்று உணர்ந்து கொண் டேன். உமாபதி சிறைப்பட்டபின் கலைச்செல்வி ஆடமாட்டாள் என்றும் சோகமே உருவாய் உட்கார்ந்திருப்பாள் என்றும் எண்ணினேன். ஆனால் நான் கேள்விப்பட்டது வேறு விதமாக இருந் தது. கலைச்செல்வியின் புகழ் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. போகும் இடங்களிலெல்லாம் புகழ்மாலை சூடி வந்தாள். தஞ்சாவூரில் பத்து நாட்கள் சேர்ந்தாற் போல் கச்சேரி நடந்ததாம். பத்து நாட்களும் கொட் டகை நிரம்பி வழிந்ததாம்.

ஒரு விதத்தில் இதையெல்லாம் கேள் விப்பட்டபோது எனக்கு ஒரே ஆனந்த

மாக இருந்தது. கூடவே உமாபதி சிறையில் இருக்கையில் இவள் இப்படி ஆடிக் கொண்டிருக்கிறாளே என்ற எண்ணமும் ஏற்பட்டது. அதே சமயத்தில் டி. எஸ். பி. சட்டநாதம்பிள்ளைக்கும் கலைச் செல்விக்கும் விரைவிலேயே திருமணம் நடைபெறலாம் என்றும் கேள்விப்பட்டேன். எனக்குச் 'சீ' என்று போய் விட்டது. உமாபதிதான் தவறு செய்தான் என்றால் அதற்காகக் கலைச் செல்வி அவனை மறந்து விடலாமா? உமாபதி சிறையில் வாடிக் கொண்டிருக்கும்போது அவள் வேறு ஒருவனைக் கல்யாணம் செய்து கொள்வது என்றால் அது எனக்குச் சரியாகப்படவில்லை.

நல்ல வேளையாக, நான் ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்ததால் என் விலாசம் அவர்களுக்குத் தெரியாது. கல்யாணக் கடிதம் ஐயம்பேட்டைக்குத்தான் போகும். பின்னால் கோகிலத்தையோ கலைச் செல்வியையோ பார்க்க நேர்ந்தால், எனக்கு விவரம் தெரியாது என்று சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

இந்த இடத்தில் ஐயம்பேட்டைக் கந்தப்பப் பிள்ளை கதையை நிறுத்தி விட்டு மௌனமாக இருந்தார்.

* *

''அப்புறம் என்ன நடந்தது?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''அப்புறம் என்ன? கணவனும் மனைவியும் சௌக்கியமாக இருக்கிறார்கள். அவ்வளவுதான்'' என்று கந்தப்பப் பிள்ளை கதையை முடித்து விட்டார்.



எனக்கு என்னவோ கதை முடிந்ததாகத் தோன்றவில்லை. மனம் சமாதானம் அடையாமல், ''அப்புறம் நீங்கள் உமாபதியைப் பார்க்கவில்லையா?'' என்றேன்.

''பார்த்தேன் தம்பி. முதலில் உமாபதி மீது எனக்கு ரொம்பக் கோபமாக இருந்த போதிலும், கலைச்செல்வியின் கல்யாணத்துக்குப் பிறகு உமாபதியின் மீது இருந்த கோபமெல்லாம் பறந்து போய்விட்டது. அவனைச் சிறையிலேயே போய்ப் பார்த்தேன். என்னைக் கண்டதும் உமாபதி கண்ணீர் விட்டுக் கதறி அழுதுவிட்டான்.''

''உமாபதி என்ன சொன்னான்?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

''உமாபதி தான் குடித்ததை ஒப்புக் கொண்டான். ஆனால் சாராயத்தைத் தான் வாங்கி வரவும் இல்லை, பதுக்கி வைக்கவும் இல்லை என்று கூறினான். ஒரு நாள் அவன் வீட்டுக்கு வந்ததும் அவன் தங்கை சாந்தம்மா யாரோ ஒருவர் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனார் என்று கூறி ஒரு கள்ளிப் பெட்டியை உமாபதியிடம் கொடுத்தாளாம். அதைத் திறந்ததும் உள்ளே ஆறு ஏழு சாராயப் புட்டிகள் இருந்தனவாம். அவற்றைப் பார்த்தவுடன் உமாபதிக்கு ஆசையை அடக்க முடியவில்லை. நன்றாகப் போட்டு விட்டான். குடி போதையில் இருக்கும்போது போலீஸார் 'திடுதிப்'பென்று நுழைந்து கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டனராம். சாந்தம்மா கூறியதைப் போலீஸார் ஒப்புக் கொள்ளவில்லை. அண்ணனைக் காப்பாற்றுவதற்காக யாரோ கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று பொய் சொல்கிறாள் என்பதாக வாதாடினார்களாம். உமாபதி பணம் கொடுத்துச் சாராயம் வாங்கிப் பதுக்கி வைத்திருந்ததாகவும், அவற்றைக் குடித்ததாகவும் குற்றம் சாட்டினார்கள். அவனுக்கு மூன்று வருட தண்டனை கிடைத்தது.''

''உமாபதி கூறியதை நான் நம்பத் தயாராக இல்லை. வேண்டுமென்றே யாராவது சாராயப் புட்டிகளை அவன் வீட்டில் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போவார்களா?'' என்றேன்.

''நானும் முதலில் நம்பவில்லை தம்பி! ஆனால் உமாபதி அதற்குக் காரணத்தைக் கூறியதும் நம்பும்படி நேர்ந்தது'' என்றார் ஐயம்பேட்டைக் கந்தப்பப் பிள்ளை.

''என்ன காரணம்?''

''டி.எஸ்.பி. சட்டநாதம்பிள்ளையைக் கலைச் செல்வி வெறுத்து உமாபதியை விரும்பினாள். டி. எஸ். பி.க்குக் கலைச் செல்வியின் மேல் ஒரு கண் இருந்தது. உமாபதி மேல் பொறாமை. மேலும் அவன் கலைச் செல்விக்கு அளித்திருந்த வாக்குறுதியும் அவருக்குத் தெரிந்திருந்தது. அவனைச் சிறையில் தள்ளிவிட்டால் கலைச் செல்வி அவனை வெறுத்துத் தம்மை மணப்பாள் என்று நம்பினார். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை.''

''எனக்குப் புரியவில்லையே! விவரமாகச் சொல்லுங்கள்.''

''இதுகூடப் புரியவில்லையா தம்பி! சட்டநாதம் பிள்ளை தாமே சாராயப் புட்டிகளை உமாபதியின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் தாமே அவன் வீட்டுக்குச் சென்று அவனைக் கைது செய்து கொண்டு வந்தார்!''

''இப்படிப்பட்ட அக்கிரமமும் நடக்குமா?''-என் மனத்தை என்னவோ செய்தது. கந்தப்பப் பிள்ளை எழுந்தார்.

''இன்னும் ஒரே ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''உமாபதி கலைச் செல்வியைப் பற்றி ஒன்றுமே கேட்க வில்லையா?''

'' 'கலைச் செல்வி சௌக்கியமா?' என்று கேட்டான். 'சௌக்கியம்தான்!' என்றேன். 'நான்விசாரித்ததாகச் சொல்லுங்கள்' என்றான்.''



'' கலைச் செல்விக்குத் திருமணம் நடந்துவிட்டதுபற்றி நீங்கள் உமாபதியிடம் ஒன்றுமே கூறவில்லையா?''

''இல்லை, தம்பி. உமாபதியின் மனம் ஏற்கனவே புண்பட்டிருந்தது. இந்த விவரத்தையும் சொல்லி அதில் வேலைப் பாய்ச்சுவானேன் என்று எண்ணிப் பேசாமல் வந்து விட்டேன்.''

''அதே காரணத்தால்தான் நீங்கள் மீண்டும் கலைச் செல்வியைப் பார்க்கவில்லையாக்கும்?''

'' ஆமாம், தம்பி. கணவனும் மனைவியும் சௌக்கியமாக இருக்கும்போது நான் குறுக்கிடுவானேன்? சட்டநாதம் பிள்ளையைப் பார்த்தால் வார்த்தை தடிக்கும். கலைச்செல்விக்கு உமாபதியைப் பற்றின உண்மை விவரம் தெரிந்து போகும். தம்பதிகளுக்கிடையே விரோதம் உண்டாகும். அந்தப் பாவத்தை நான் ஏன் கட்டிக்கொள்ள வேண்டும்?''

'' என்ன இருந்தாலும் நீங்கள் கலைச் செல்வியை இப்படி அலட்சியம் செய்யக் கூடாது. அவள் தவறு செய்திருந்தாலும் பொறுத்துக் கொள்ளத்தான் வேணும்.''

''உண்மைதான் தம்பி. தங்கச்சியைப் பார்த்துக் கிட்டத்தட்ட மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. கோயமுத்தூர் பக்கம் போனால் அவசியம் பார்ப்பேன்.''

ஆறும் அத்தியாயம்

கந்தப்பப் பிள்ளை போய்விட்டார். என் மனம் திருப்தி அடையவே இல்லை. கதையில் ஏதோ பாக்கி இருக்கிறது என்று எனக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. உமாபதி விடுதலை அடைந்தானா? விடுதலைக்குப் பின் என்ன செய்தான்? என்றெல்லாம் என் மனத்தில் கேள்விகள் எழுந்து கொண்டிருந்தன.

சமீபத்தில் நண்பர் ஒருவருடைய திருமணத்துக்கு மாயவரம் வரையில் சென்ற போது எதிர்பாராத வகையில் கந்தப்பப் பிள்ளையைச் சந்திக்க நேர்ந்தது. சிதம்பரம் ஸ்டேஷனில் 'கதவைத் திறவுங்கள்' என்ற குரல் கேட்டதும், 'இடமில்லை ஸார், வேறு பெட்டியில் ஏறுங்கள்' என்று சொல்லிக் கொண்டே ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன். தோளில் தொங்கும் தவுலுடன் சாட்சாத் கந்தப்பப்பிள்ளை காட்சியளித்தார்.

''ஓ, நீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே அவசரம் அவசரமாகக்கதவைத் திறந்தேன். ஒரு பையன் பெட்டியையும் படுக்கையையும் உள்ளே கொண்டு வந்து வைத்தான். இந்த வயதுக் காலத்திலும் தவுலை மட்டும் தாமே தூக்கிய வண்ணம் கந்தப்பப் பிள்ளை ரயிலில் ஏறினார். உள்ளே வந்து உட்கார்ந்தவர் தவுலின் உறையைப் பிரித்து அன்போடு அதைத் தடவிக் கொடுத்தார். 'பம் பம்' என்று ஒருமுறை சப்தித்துவிட்டுத் தவுலை மீண்டும் உறையினால் மூடினார்.

''கலைச் செல்வியை அப்புறம் பார்த்தீர்களா? சௌக்கியமாக இருக்கிறாளா?'' என்று கேட்டேன்.

''பார்த்தேன், தம்பி! கணவனும் மனைவியும் சௌக்கியம்தான். ஆனால் கணவனைப் பொறுத்தவரையில் ரொம்ப மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.''

''என்ன மாறுதல்? டி.எஸ்.பி. சட்டநாதம் பிள்ளை இப்போது நல்லவராகி விட்டாரா?'' என்று கேட்டேன்.

''இல்லை, தம்பி! மாறுதல் கணவனுடைய குணத்தில் மட்டும் இல்லை. கணவனே மாறுதல் அடைந்திருக்கிறான்!'' என்றார் கந்தப்பப் பிள்ளை.

நான் விழிப்பதைப் பார்த்து விட்டுக் கந்தப்பப்பிள்ளை தொடர்ந்து கூறினார்:

'' புரியவில்லையா தம்பி? எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு எனக்கு அசட்டுப் பட்டம் கட்டினார்கள். அவ்வளவு தான். உமாபதி சிறைப்பட்டதும் கலைச் செல்விக்கு அவன்மீது ரொம்பக் கோபம் உண்டாயிற்றாம். அந்தக் கோபத்தில் சட்டநாதம்பிள்ளை கல்யாணப் பேச்சை எடுத்த போது 'சரி' என்று சொல்லி விட்டாளாம். ஆனால் கல்யாண நாள் நெருங்க, நெருங்க, அவள் மனம் மாறி விட்டதாம். சட்டநாதம் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொள்வதானாலும் அதை உமாபதிக்குத் தெரியப்படுத்தி

விட வேண்டும் என்றும், அவனுக்குத் துரோகம் செய்யக் கூடாது என்றும் எண்ணினாள். சிறைச்சாலைக்குச் சென்று உமாபதியைப் பார்த்தாள்.

உமாபதி தங்கச்சியிடம் எல்லாவற்றையும் விவரமாகக் கூறியிருக்கிறான். ஓரளவுக்கு இவை முன்னமேயே கலைச்செல்விக்குத் தெரிந்திருந்த போதிலும் இப்போது தம்பியின் வாயாலேயே கேட்டபோது அவள் மனம் இளகி விட்டது.

''நேராகச் சட்டநாதம் பிள்ளையின் வீட்டுக்குச் சென்றாள். சட்டநாதம் பிள்ளை மாடியில் இருக்கிறார் என்று தெரிந்துகொண்டு மாடிக்குச் சென்றாள். கடைசிப் படியில் கால் எடுத்து வைக்கும் போது எதிரே அவர் வந்து விட்டார். அவரைப் பார்த்த உடனேயே தங்கச்சி விம்மலுக்கும் அழுகைக்கும் இடையே அவரைத் தூற்றி யிருக்கிறாள். சட்டநாதம் பிள்ளைக்கு உமாபதியிடம் ஒரே கோபம். அதைவிட இவ்வளவு தைரியமாகத் தம்மைத் தூற்றும் கலைச் செல்வியின் மேல் கோபம். ரௌத்திராகாரம் அடைந்தவராய்த் தங்கச்சியின் கன்னத்திலே ஓங்கி அடித்து விட்டார். தங்கச்சி இதை எதிர்பார்க்கவேயில்லை. நிலை தடுமாறி மாடிப் படிகளில் உருண்டு உருண்டு விழுந்து விட்டாள். டாக்டர் வந்து பார்த்து விட்டுப் போனார். கல்யாணம் நின்று போய்விட்டது.

''சிறைச்சாலையில் உமாபதி தன் நன்னடத்தையால் ஆறு மாதங்கள் முன்னதாகவே விடுதலை அடைந்தான். உமாபதி வெளியே வந்ததும் நல்ல நாள் பார்த்துக் கலைச்செல்வியைக் கல்யாணம் செய்து கொண்டான். நானே இருந்து திருமணத்தை நடத்தி வைத்தேன்.

'உன் புண்ணியாவசனத்துக்குத் தவுல் வாசித்த கையாலேயே உன் குழந்தைக்கும் வாசித்து விடுகிறேன். குழந்தை பிறந்ததும் சொல்லி அனுப்பு' என்று கலைச்செல்வியிடம் கூறிவிட்டுவந்தேன்.''

கந்தப்பப் பிள்ளை மறுபடியும் கதையை முடித்துவிட்டு மௌனமானார்.

''பிள்ளைவாள்! ரொம்ப சந்தோஷம். இன்னும் ஒரே ஒரு சந்தேகம் இருக்கிறது. அதை மட்டும் தயவு செய்து விளக்கி விடுங்கள்'' என்று கேட்டுக்கொண்டேன்.

''என்ன அது?''

''கலைச்செல்வி ஏன் இப்போதெல்லாம் நாட்டியம் ஆடுவதில்லை என்று நான் கேட்டபோது, 'உலகம் தாளாது தம்பி!' என்று பதில் கூறினீர்கள். அதுதான் உண்மையான காரணமா? அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா?''

''நான் கூறிய காரணம் உண்மைதான். அதில் தவறில்லை. கலைச் செல்வியின் நாட்டியம் திருச்செந்தூர் முருகனுக்கு அர்ப்பணிக்கவேண்டிய விஷயம். ரஸிகத் தன்மை சிறிதும் இல்லாத மக்களுக்கு எதிரே அவள் ஆடுவது பாவம் என்றே நான் கருதுவேன். ஆனால் வேறு ஒரு காரணமும் இருக்கிறது. நீ கேட்ட படியால் அதையும் சொல்லிவிடுகிறேன்.

''அந்தக் கிராதகன் சட்டநாதம் பிள்ளை தங்கச்சியை அடித்தபோது அவள் மாடிப்படிகளில் உருண்டு விழுந்தாள் அல்லவா? அப்போது அவளுடைய வலது கால் எலும்பு முறிந்து விட்டது. டாக்டர் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார். ஆனால் கடைசியில் அவள் முன்போலச் சாதாரணமாக நடக்க முடியாது. வலது காலில் ஊனம் விழுந்து விட்டது என்று கூறிவிட்டார்.

''இதனால் உமாபதி சிறையிலிருந்து வெளியே வந்ததும் தங்கச்சி முதலில் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விட்டாளாம்.

''உமாபதிக்குக் கோபம் வந்து விட்டதாம். 'உன் மனம் எனக்குத் தெரிந்து போய் விட்டது. நீ இன்னும் அந்த டி. எஸ். பி. யைத்தான் விரும்புகிறாய்' என்று சத்தம் போட்டானாம்.

''தங்கச்சி கண்களில் கண்ணீருடன் நாற்காலியிலிருந்து எழுந்து நடந்து காண்பித்தாளாம். 'என் நடனத்தைப் பார்த்துவிட்டு என்னைக் காதலித்தீர்கள். ஆனால் நான் இனிமேல் நடனமாடி உங்களை மகிழ்விக்க முடியாது' என்று விம்மலுக்கிடையே கூறினாளாம்.

''உமாபதி தலையில் 'பட் பட்' என்று போட்டுக் கொண்டானாம். 'என்னால் தான் உனக்கு இந்த கதி ஏற்பட்டது. உன் நாட்டியத்தின் மீது ஆணையிட்டேன்! பின்னர் அதை மீறினேன். அதனால்தான் இப்படி ஆகிவிட்டது' என்று கூறிக் கதறினானாம்.

''ஒரு வழியாக அழுகையெல்லாம் ஓய்ந்த பிறகு நடந்ததையெல்லாம் மறந்து விடுவது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். உமாபதி கலைச்செல்வியைத் திருமணம் செய்து கொண்டான்.

''இப்போது உமாபதி தன் தங்கை சாந்தம்மாவுக்கு வரன் தேடிக் கொண்டிருக்கிறான். பெண் கிளியாட்டமாயிருப்பாள். உனக்கு யாராவது தெரிந்தால் சொல்லேன், தம்பி!'' என்றார் ஐயம் பேட்டைக் கந்தப்பப் பிள்ளை.

இதற்குள், மாயவரம் ஜங்ஷன் வந்து விடவே ''ஆகட்டும்'' என்று சொல்லிக் கந்தப்பப்பிள்ளையிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு ரயிலைவிட்டு இறங்கினேன்.

சற்று நேரத்துக்கெல்லாம் 'குப்குப் குபுகுப்' என்று மூச்சு விட்டுக் கொண்டு ரயில் கிளம்பி விட்டது. ★ ★ ★

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சிதான் இவ்வாரத்து அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.


பாருங்கள்!
ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
SUNLIGHT SOAP
பளிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-50 TM

மருதாணி இட்ட விரல்களால் ஸ்நானம் செய்த கூந்தலை ஆற்றிக் கொண்டே, மைதிலி ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள். தாய்மைப் பேற்றை அடைந்திருப்பதால் அவள் முகம் பார்ப்பதற்கு வசீகரமாக இருந்தது. தந்தத்தில் கடைந்தெடுத்தமாதிரி அவள் கைகள் உருண்டு திரண்டு இருந்தன. அக் கைகளில் நிறையக் கண்ணாடி வளையல்களைப் போட்டிருந்தாள் மைதிலி. வளைகாப்புக்கென்று



அணையாத தீபம்

அவள் கணவன் டில்லியிலிருந்து நல்ல மாதிரியான வளையல்கள் வாங்கி அனுப்பியிருந்தான். நீல நிறத்தில் மெல்லிய கைத்தறிப் புடவை ஒன்றை உடுத்தி வெள்ளை நிறத்தில் சோளி போட்டுக் கொண்டிருந்தாள் மைதிலி. புடவையின் நீல வண்ணம் அவளது சிவந்த கன்னங்களின் நிழல் அடித்தது.

சமையலறையிலிருந்து பார்வதி அம்மாள்—மைதிலியின் தாய்—ஒரு தட்டில் வெற்றிலைப் பாக்கை எடுத்துக் கொண்டு ஊஞ்சல் அருகில் வந்து நின்றாள். மைதிலியின் அழகைப் பார்த்து அவள் ஆச்சரியம் அடைந்தாள். அவள் கண்ணே பட்டுவிடும்

போல் இருந்தது. வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவிக்கொண்டே பார்வதி யோசித்தாள்.

'இப்படி ஒரு அழகு வந்து உடலை மூடிக் கொண்டிருக்கிறதே! இந்தப் பெண் பெற்றுப் பிழைக்க வேண்டுமே!' என்று அவள் மிகவும் கவலைப்பட்டாள்.

"நிற்கிறாயே அம்மா! உட்காரேன்!" என்று மைதிலி தாயைப் பார்த்துச் சொல்லி விட்டு, அவள் அமரச் சற்று நகர்ந்தும் உட்கார்ந்து கொண்டாள்.

பார்வதி அம்மாள் உட்கார்ந்து கொண்டாள். பிறகு மகளின் பக்கம் திரும்பி, "உன் புருஷனிடமிருந்து கடிதம் ஏதாவது வந்ததா அம்மா? சீமந்தத்துக்கு நாள் பார்த்தாயிற்று என்று உன்னுடைய அப்பா சொன்னாரே?" என்று கேட்டாள்.

"வந்தது. ஒரு வாரம் லீவில் கிளம்பி வருவதாக எழுதி இருக்கிறார், சீமந்தச் செலவு முழுதும் அவருடையதாக இருக்க வேண்டுமாம். இது அவர்கள் வீட்டுச் செலவுதானே? எனக்கு மாமியார், மாமனார் இல்லாத காரணத்தால் நீங்கள் எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு செய்கிறீர்கள்" என்று சொன்னாள் மைதிலி.

"யார் செய்தால் என்ன? நல்லபடியாக முடியவேண்டியது ஒன்றுதானே முக்கியம்? உன்னைக் கையும் குழந்தையுமாக மறுபடியும் உன் புருஷனிடத்தில் சேர்த்து விட்டால் போதும்" என்றாள் பார்வதி.

அவள் கண்களில் கண்ணீர் துளித்திருந்தது. அது ஆனந்தக் கண்ணீரா, அல்லது சோகக் கண்ணீரா என்பது பார்வதிக்கே புரியவில்லை.

மகள் சிரித்தாள்.

"மாப்பிள்ளை கொடுக்கும் பணத்தைப் பேசாமல் வாங்கிக் கொள், அம்மா! திருப்பி நீ அதை எனக்குத்தானே தரப் போகிறாய்?" என்றாள் மைதிலி.

மைதிலி அவர்களுக்கு ஒரே மகள். சீருக்கும், சிறப்புக்கும் குறைவுண்டா?

வெளியே போயிருந்த தகப்பனார் வந்தார்: மகள் அருகில் வாஞ்சையுடன் உட்கார்ந்து கொண்டார். கையிலிருந்த மிட்டாய்களை எடுத்துக் கொடுத்தார்.

"இவ்வளவு எதற்கு அப்பா? திகட்டிப் போகிறதே! எங்கள் தில்லியில் கிடைக்கிற மாதிரிதான் இங்கே கான்பூரிலும் கிடைக்கிறது. வேறே புது மாதிரியாக ஒன்றையும்



காணுமே!'' என்று சொல்லிக் கொண்டே மிட்டாய்களைச் சாப்பிட்டாள் மைதிலி.

''கண்டதை யெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்துப் பிள்ளைத்தாய்ச்சியின் உடம்பைக் கெடுக்கிறீர்களே!'' என்று பார்வதி கோபித்துக் கொண்டாள்.

டில்லியிலிருந்து ராமச்சந்திரன் சீமந்தத்துக்கு முன்பாகவே வந்து விட்டான். அவன் வண்டியிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்ததும் கூடத்தில் நின்று கொண்டிருந்த மைதிலியைப் பார்த்துப் பிரமித்துப் போனான். டில்லியில் மைதிலி இருந்தபோது மசக்கைத் தொந்தரவினால் இளைத்துப் போயிருந்தாள். அதற்கு மாறாக இப்பொழுது கொழுகொழுவென்று பருத்து, உடலில் வனப்பு மேலிட அவள் நின்றபோது அவன் மனத்தில் சந்தோஷம் பொங்கிப் பெருகியது.

சாப்பாட்டுக்கு அப்புறம் மாடியில் இருவரும் தனிமையில் பேசிக் கொண்டிருந்தார்கள். பட்டுப்போன்ற அவளது கரங்களைத் தொட்டு அதில் அணிந்திருந்த வளையல்களைப் பார்த்தான் ராமச்சந்திரன். விரல்களில் இட்டிருந்த மருதாணிச் சிவப்பும் கண்ணாடி வளையல்களின் பல வர்ணங்களும் அந்த மென் கரங்களுக்கு அப்படி ஒரு அழகை அளித்தன.

''ஹூம்... அப்புறம் என்ன விஷயம்? இது தான் வளைகாப்பு வளையல்களா? பேஷாக இருக்கிறதே? நான் அனுப்பிய வளையல்கள் எங்கே மைதிலி?'' என்று கேட்டான் அவன்.

மைதிலி தன்னுடைய மற்றொரு கரத்தைத் தூக்கி அவன் ஆசையுடன் அனுப்பிய வளையல்களைக் காண்பித்தாள்.

''சரி! உனக்குச்சீமந்தத்துக்கு என்ன வாங்கி வந்திருக்கிறேன் தெரியுமா?'' என்று கேட்டான் ராமச்சந்திரன்.

''ஆமாம்! எனக்குத் தெரியாதாக்கும்! தூத்பேடாவும் ஹல்வாவும் வாங்கி வந்திருப்பீர்கள்!'' என்றாள் மைதிலி.

அவன் எழுந்து அறைக்குள் சென்று பெட்டியைத் திறந்து ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து வந்தான். அதனுள் அழகிய பட்டுப் புடவை ஒன்று இருந்தது. ஆகாச வர்ணத்தில் ஜரிகையில் நக்ஷத்திரங்கள் போட்ட அந்தப் புடவை நிலவொளியில் 'தக' 'தக' வென்று மின்னியது.

''அடேயப்பா! என்ன விலை?'' என்று கேட்டாள் மைதிலி மகிழ்ச்சி பொங்க.

''நூற்றைம்பது ரூபாய்!...''

இப்படி, கணவனும் பெற்றோரும் அன்பைச் சொரிந்து வந்தார்கள் மைதிலியின் பேரில்.

சீமந்தம் விமரிசையாக நடந்தது. மாலையில் மைதிலியை மணையில் உட்காரவைத்துப் பாடினார்கள். அவள் கணவன் அன்புடன் வாங்கி வந்த நீலப் புடவையை உடுத்திக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்த காட்சி தெய்வலோக மங்கையொருத்தி அலங்கிருதையாக வீற்றிருப்பது போல இருந்தது. மஞ்சள் குங்குமத்துக்கு வந்திருந்த பெண்களே, ''அப்பா! என்ன அழகு! இப்படியும் ஒரு பெண்ணுக்கு அழகு வருமா? நல்லபடியாகப் பெற்றுப் பிழைக்க வேண்டுமே!'' என்று பேசிக் கொண்டார்கள்.

மைதிலியின் தாய் பார்வதிக்கு மட்டும் மனத்துள் 'கரீர்' என்று ஏதோ வேதனை செய்து கொண்டிருந்தது. ராமச்சந்திரன் சீமந்தம் ஆனபிறகு இரண்டு தினங்களில் ஊருக்குப் புறப்பட்டான். மனைவிக்கு அவனை விட்டுப் பிரியவே மனமில்லை.

''மனசிலே ஏதோ சங்கடம் செய்கிறது. லீவு போட்டு விட்டுப் பிரசவத்தின் போது என்னுடனேயே வந்து தங்கி விடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டாள் மைதிலி. அவளுடைய சுந்தர வதனத்தில் துக்கம் பரவியிருந்தது. கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் உருண்டு ராமச்சந்திரனின் கரங்களை நனைத்தன. அவன் கைகளை எடுத்துக் கண்களை மூடிக் கொண்டு விசித்தாள் மைதிலி.

''பிரசவம் என்றால் பயப்பட வேண்டிய காலம் எல்லாம் போய் விட்டது. நம் பாட்டிகள் காலத்தைப் போல இந்தக் காலத்தில் பிரசவத்தில் கோளாறுகள் ஏற்பட்டு, ஆபத்தில் முடிவதில்லை. தைரியமாக இரு'' என்று தேற்றினான் ராமச்சந்திரன்.

எல்லோரும் தெய்வத்தை நம்பியிருந்தார்கள். நாள் தவறாமல் நல்ல வைத்தியரிடம் உடம்பைக் காண்பித்து ஜாக்கிரதையுடன்தான் மைதிலி இருந்து வந்தாள்.

★


தெய்வத்தின் சித்தம் வேறாக இருந்தது. அவள் வழக்கமாக உடம்பைக் காண்பித்து வரும் வைத்தியர் ஊருக்குப் போய்விட்டார். அவர் வெளியூர் சென்றிருந்த சமயம் மைதிலிக்கு உடம்பு சரியில்லை. அவசரத்துக்கென்று புது வைத்தியரைத் தேடிப் போனார்கள். அந்த வைத்திய விடுதியில் சேர்த்து, விடுதியின் லேடி டாக்டர் குலாப் வந்து பார்க்க நேரமாகி விட்டது. அதற்குள் காலன் அவசரப்பட்டு வந்து விட்டான். பிரசவித்து இரண்டு மணி நேரத்துக்கெல்லாம், உடம்பெல்லாம் நீலமாக விஷம் பரவி அண்மையில் நின்று தவிக்கும் பெற்றோரையும் தங்கச் சிலைபோல் அப்பொழுதுதான் உலகத்துக்கு வந்திருக்கும் பச்சிளங் குழந்தையையும் தவிக்க விட்டு மைதிலி கண்ணை மூடிவிட்டாள்.

அவள் தாய்மை அடைந்து பிறந்தகம் வந்ததிலிருந்து மனத்திலே வேதனையைத் தாங்கிக் கொண்டிருந்த பார்வதி அம்மாள் எரிமலை வெடிப்பது போல் துக்கத்தால் குமுறினாள். கல்லினும் கடினமாக அவள் தந்தை அசையாமல் உட்கார்ந்து விட்டார். டில்லியிலிருந்து விமானத்தில் பறந்து வந்த கணவன் தலை உடைத்து போகிற மாதிரி துக்கத்தினால் அலறினான்.

அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கைக் காலம் மிகக் குறுகியதாக இருந்தாலும் அது அவ்வளவு உறுதிப்பட்டு இருந்தது என்பது அவனுடைய எல்லை கடந்த துயரைப் பார்த்தே அறிந்துகொள்ள முடிந்தது.

'எல்லாம் முடிந்து விட்டது' என்று ஒவ்வொருவருடைய மனமும் தீர்ப்புச் சொல்லி விட்டது போல் அவரவர்களுடைய வேலையைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்து விட்டார்கள்.


டாக்டர் குலாப் ஒரு ஆள் மூலம் தன்னுடைய விடுதியில் குழந்தை-அவர்களுடைய பேத்தி - இருப்பதாக அறிவித்தாள்.




பினிக்ஸ், ப்ரிண்ட்ஸ், வாயில் வீஜேஸ்

உங்களுக்கேற்ற, ஆனால் நீங்கள் இதுவரை கண்டிராத கண்ணைப் பறிக்கும் கலர்களிலும், டிசைன்களிலும் இப்போது கிடைக்கின்றன. பினிக்ஸ் பிரிண்ட்ஸ் மற்றும் வாயில்களையே வாங்குங்கள். நாள் முழுவதும் அணிந்தபோதிலும் அவை மொற மொறப்பையும் புதுமையையும் இழக்கமாட்டா.

அவை நேர்த்தியானவை என்பதை நீங்கள் உணர்வீர்கள்



தி பினிக்ஸ் மில்ஸ் லிமிடெட், லோயர் பரேல், பம்பாய்—13



பட்டுப்
போன்ற
மிருதுவான
கூந்தலுக்கு
அழகாயிருக்க விரும்பும் ஒவ்வொரு பெண்மணியும் போற்றும் பொக்கிஷம். சரிவர பராமரிப்பு அவசியம். கூந்தல் வளருவதற்கும், பராமரிப்புக்கும் இதைப் போன்று வேறு கிடையாது.
ஸ்வஸ்திக்
பெர்பியூம்டு கேஸ்டர் ஆயில்
தி ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்
மென்மையான சோப்புகளையும் மற்றும்
கூந்தல் தைலங்களையும் தயாரிப்பவர்கள்
SHILPI-SOM-448 A Tam.

''குழந்தையா அது? என் வயிற்றில் நெருப்பை அள்ளிப் போட்ட எமன்'' என்றாள் பாட்டி பார்வதியம்மாள்.

''இருபது வயது வளர்த்த மகனே நொடியில் போய் விட்டான். இதுதான் தங்கப் போகிறதாக்கும்'' என்றார் தாத்தா.

''என் மைதிலியை என்னிடமிருந்து பிரித்த சனியன். அது எக்கேடு கெட்டாவது தொலையட்டும்'' என்று கூறிவிட்டு ராமச்சந்திரன் விரக்தியுடன் தில்லிக்குப் போய் விட்டான்.

உலகத்திலே அனுப்பப்படும் ஜீவனைக் காப்பாற்ற சர்வாந்தர்யாமியாக ஒருவன் இருக்கிறான் என்பதை மனித அறிவு மறந்துவிடுகிறது. எல்லோராலும் வெறுக்கப்பட்ட அந்தச் சிசுவை வளர்க்க விஷ்ணுகரே என்கிற மராட்டியர் ஒருவரும் அவர் மனைவி கிரிஜாபாயும் முன் வந்தார்கள். முதலில் டாக்டர் குலாப் ஆட்சேபனை செய்தாள். குழந்தையின் சொந்தக்காரர்கள் வந்து கேட்டால் அவர்களிடம் குழந்தையை ஒப்புவித்துவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். குழந்தையின் சொந்தக்காரரின் விலாசம் வேறு கிரிஜாபாயிடம் கொடுத்தாள்.

குழந்தை வேண்டும் என்று தவமிருந்த கிரிஜாபாய்க்குக் குழந்தை கிடைக்கவே, குருடனுக்குக் கண்கிடைத்த மாதிரிஇருந்தது.

விஷ்ணுகரே கண்யமான மனிதர். குழந்தையின் தாத்தாவைத் தேடிப் போய்க் குழந்தை தம்மிடம் இருப்பதாகக் கூறினார். அளவுக்கு மீறிய துயரத்தை அளித்த ஆண்டவன் அதை மறக்க ஒரு சிசுவைக் கொடுத்திருப்பதை அறிந்து குழந்தையை ஏற்றுக் கொள்ள வேண்டினார்.

மகனின் பிரிவால் சித்தம் சரியில்லாமல் இருந்த பார்வதியம்மாள் ஒரேயடியாக மறுத்தாள். அவள் மனத்தில் சூன்யம் குடி கொண்டு விட்டது.

அது பாலைவனமாகிவிட்டது. பாலைவனத்தில் நீர் தெளித்த மாதிரி கரேயின் வார்த்தைகள் எடுபடாமல் போயின. இனி, பகவான் ஒருவனால்தான் பாலைவனத்தைப் பசுஞ்சோலையாக மாற்ற முடியும் என்று தீர்மானித்துக் கரே வீடு திரும்பினார். குழந்தை பிறந்தவுடன் எல்லோராலும் நிராகரிக்கப்பட்டு நிராதரவாக விடப்பட்டதால் அதற்குச் 'சகுந்தலா' என்று பெயர் வைத்தார்; தாமே கண்வராகவும் மாறினார் கரே.

பார்வதி தம்பதிகள் கான்பூருக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டுத் தஞ்சைக்கு வந்து சேர்ந்தார்கள். இனி யாருக்காக மைதிலியின் தகப்பனார் உத்தியோகம் பார்க்க வேண்டும்? எல்லாம்தான் முடிந்து விட்டதே!

★

காலத்துக்குத்தான் எவ்வளவு வேகம்! மைதிலியின் பெற்றோர் கான்பூரை விட்டுக் கிளம்பும்பொழுது கார்த்திகை மாதம். அதற்குள் தைப்பொங்கல் வந்து சித்திரை வருஷப் பிறப்பும் ஆகிவிட்டது. பண்டிகைகளும் பருவங்களும் மாறி மாறி வந்து போயின. இலை உதிர்ந்து காய்ந்த கம்பாய் நின்ற மரம் தளிர் விட்டுப் பூத்துக் குலுங்கிக் காய்த்துப் பழங்களைச் சிந்தின. ஓயாமல்



ராணிப்பேட்டை கே. வி. ராகவனின் புதல்வியும், பந்தக்குடி ராமஸ்வாமியின் மாணவியுமான குமாரி ஹேமமாலினியின் நடன அரங்கேற்றம் சமீபத்தில் சென்னை, மியூஸியம் தியேட்டரில் சிறப்பாகக் கோத்தமங்கலம் சுப்பு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி அவர்கள் ஹேமமாலினியைப் பாராட்டிப் பேசினார்.

ஓழியாமல் இயற்கை தன் வேலையைச் செய்து கொண்டே போயிற்று. பார்வதி அம்மாளுக்கும் அவள் கணவருக்கும் உலக வாழ்க்கை முதலில் சூன்யமாகத்தான் இருந்தது. காய்ந்த மரத்தைப் போல. பிறகு படிப்படியாக மனத்தில் ஆசைகளும் விருப்பங்களும் எழ ஆரம்பித்தன. பதினைந்து வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்ட பிறகு மனத்தில் கட்ட புண் ஆறித்தானே போயிருக்கும்!

ஆம்! மைதிலி இறந்து போய்ப் பதினைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. இந்தப் பதினைந்து வருஷ காலத்தில் சில சமயங்களில் கான்பூரில் கரேயின் குடும்பத்தில் விட்டு வந்த தங்கள் பேத்தியை நினைத்துப் பேசிக் கொண்டார்கள். ஒரு மாதம் கூட நிரம்பாத குழந்தையை விட்டு வந்தவர்கள் சாவகாசமாகக் குழந்தைக்கு நான்கைந்து வருஷங்கள் கழித்த பிறகு மனச்சங்கடம் ஆகி அதைப்பற்றி நினைத்தார்கள். எழுதி விசாரிக்கலாமா என்றும் யோசித்தார்கள். கான்பூரிலிருந்து தஞ்சைக்கு வந்திருந்த தென்னிந்தியக் குடும்பத்தினர் ஒருவரைச் சந்தித்து விசாரித்தும் பார்த்தார்கள்.

''கரேயா! அவரை எங்கோ சிம்லாவுக்கு மாற்றி விட்டார்களாமே! அவர் ஊரை விட்டுப் போய் இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகி விட்டதே!'' என்று அவர்கள் தகவல் தெரிவித்த பிறகு, இருவருடைய ஆசையும் தணிந்து விட்டது. ''நம் வயிற்றில் பிறந்தது ஒன்றுதான், அதுதான் போய் விட்டதே!'' என்ற தீர்மானத்துக்கு வந்தார்கள்.

அங்கே தில்லியில் ராமச்சந்திரன் மறுமணம் செய்து கொள்ளவேயில்லை. பெயருக்கேற்ப ஏகபத்தினி விரதனாகவே இருந்து விட்டான்.

மைதிலியின் உருவம் அவன் மனத்தில் பதிந்து போயிருந்தது. புறத்தில் அவன் வேறொருத்தியை மணந்து போலி வாழ்க்கை வாழ ஆசைப்படவில்லை. ஆனால், அவன் மனத்துள் அவன் மைதிலிக்கு ஏதோ தீங்கு இழைத்து விட்டதாகவே கருதினான். இறந்தவளின் ஆத்மா சாந்தியடைந்திருக்குமா என்று ஏங்கினான். மனைவியின் உயிரற்ற உடலுக்கருகில் டாக்டர் குலாபின் வீட்டில் 'வீல் வீல்' என்று அழுது கொண்டிருந்த சிசுவின் முகம் அவனுக்கு இலேசாக நினைவு வரும். அந்தக் குழந்தை.—ஒரு வேளை அதுவும் போய் விட்டதோ என்னவோ என்று நினைத்துக் கொண்டான். மனைவி ஒருத்தியால்தான் கணவனின் வாழ்க்கை பூர்த்தியடைகிறது என்று நம்பி வந்த அவனுடைய உள்ளத்தில் ஆட்டம் கண்டது.

நாற்பது வயதுக்கு மேல் குழந்தைகளின் பேச்சும் இன்சொல்லும் மனைவியின் அன்பை விட ஆறுதலளிக்க முடியும் என்று நினைத்த போது, அவனுடைய உள்ளம் தன் ஒரே குழந்தைக்காக ஏங்கியது.

விஷ்ணு கரேயின் குடும்பத்தில் தான் எத்தகைய மலர்ச்சி? ஒரு மகவுக்காகத் தவமிருந்த கிரிஜாபாய்க்கு, சகுந்தலா கிடைத்த பிறகு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள்.

★

அன்று கார்த்திகைத் திருநாள். தஞ்சையில் இருந்த பார்வதி அம்மாள் இரண்டு அகல் விளக்குகளைக் கொண்டு வந்து வாசல் பிறையில் வைத்து விட்டு உள்ளே போகத் திரும்பினாள். திண்ணையில் உட்கார்ந்திருந்த அவள் கணவர் அவளை அழைத்தார்.

"இன்னும் நாலு விளக்குகள் ஏற்றி வைக்கக் கூடாதா?" என்று கேட்டார் அவர்.

"வைக்க வேண்டியதுதான்! என் குடும்ப விளக்கை அணைத்த கடவுளுக்கு நாலு என்ன, லக்ஷதீபம் கூட ஏற்றத்தான் வேண்டும்!" என்றாள் பார்வதி அம்மாள். சுருங்கிய அவள் கன்னங்களில் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி வழிந்தது.

"பொரி உருண்டை வேண்டுமென்று அடம் பிடித்தீர்கள். பிடித்து வைத்திருக்கிறேன். தின்னுங்கள். பேரனும் பேத்தியும் குதி போட வேண்டிய வீட்டில் கிழம்தானே துள்ளி விளையாட வேண்டும்!"

கிழவர் அழவில்லை. கோபித்துக் கொள்ளவுமில்லை. சிரித்தார்.

"மூடமே! நம் குடும்ப விளக்கை பகவான் அணைக்கவில்லை. ஒரு பொறி நெருப்பிலிருந்து லக்ஷ தீபங்களை ஏற்றுவது போல, ஒரு சிறு பொறியை - குழந்தையை - நமக்குக் கொடுத்தான். நாம்தான் அதை அணையாமல் பாதுகாக்கத் தவறிவிட்டோம்!" என்றார்.

பார்வதி அம்மாள் பிரமை பிடித்தவள் போல் நின்றாள். பிறகு, "வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"எங்கே?" என்று கேட்டார் கிழவர்.

"ஒவ்வொரு தலமாகச் சென்று கடவுளின் சன்னிதியில் விளக்கேற்றி வைப்போம். குழந்தை எங்கேயாவது உயிரோடு இருந்தால் பூரண ஆயுளுடன் வாழட்டும், அந்தப் புண்ணியத்தையாவது செய்வோம்" என்றாள்.

அடுத்தநாளே இரண்டு பேருமாகத் தலயாத்திரை கிளம்பி விட்டார்கள்.

தில்லி, ஜனதா எக்ஸ்பிரஸில் ராமச்சந்திரன் ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தான்: "வாழ்க்கையே கசந்து விட்டது சார்! தலயாத்திரை போகிறேன்" என்று.

ராமேஸ்வரத்தில் மூன்று கடல்களும் கலக்கின்றன. பார்வதி அம்மாளும், கிழவரும் தலைப்பைச் சேர்த்து முடிந்துகொண்டு கடலில் இறங்கி ஸ்நானம் செய்தார்கள்.


ராமச்சந்திரன் கடலில் குளித்துக் கரை ஏறியவன் பல வருஷங்களுக்கு அப்புறம் தன் மாமியார் மாமனாரைச் சமுத்திரக் கரையில் கண்டான். கிழவருக்கு அடையாளம் புரிந்து கொள்ளவே தாமதமாயிற்று.


"நம்ப மாப்பிள்ளை!" என்றாள் பார்வதி.

"இன்னும் யார் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டார் அவர்.

"நான்தான் மாமா, மைதிலிக்கு அப்புறம். நான் தனிமரம்!"....என்றான் ராமச்சந்திரன் உணர்ச்சி பொங்கும் குரலில்.

மூவரும் ஒன்றாக ராமநாதசுவாமி ஆலயத்துக்குச் சென்றார்கள். சன்னிதியில் கூட்டம் அதிகம் இல்லை. ஒருபுறம் இம்மூவரும் நின்றிருந்தார்கள். மற்றொருபுறம் ஒரு வட இந்தியக் குடும்பத்தினர் நின்றிருந்தார்கள்.


இக்கடுங் கோடைக்கு......
ஓரியண்ட்
பலவிதம் பயனுள்ள மின்சார விசிறி
மேஜை விசிறி
சுவரில் பதிக்கும் விசிறி
காபின், & ஸீலிங் விசிறி
மற்றும் ஏர் சர்குலேட்டர்
இப்படி எந்தவிதமாக வேண்டுமானாலும் உபயோகிக்கப் புதிய முறையில் தயாரிக்கப்பட்டது
இவையாவும் ரூ. 70/-தான்
16" SWEEP A.C.
TABLE
WALL BRACKET
CABIN & CEILING
AIR CIRCULATOR
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
6, கோர் பிபி லேன், கல்கத்தா-11
டிஸ்ட்ரிபியூட்டர்கள்
M/s. ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிட்., 4, ஸ்டிரிங்கர் தெரு, மதராஸ்
தந்தி : "DEALHIND"
போன் : 2658


பாட்டரீஸ்
ESTRELA
இருட்டு நேரங்களில்
உங்களுக்கோர் வழிகாட்டி
எஸ்டிரெல்லா பாட்டரீஸ் லிட்.
பம்பாய் — மதராஸ் — டெல்லி — நாகபூர் — கல்கத்தா — கான்பூர்
E 2



புரசைவாக்கம் டாக்டர் ருக்மிணி வாசுதேவன் சங்கீத வித்யாலயத்தின் ஸ்தாபகர் தின விழா ஏப்ரல் 20ந் தேதி சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யர் தலைமையில் வெகு விமரிசையாக நடந்தேறியது. வெற்றி பெற்ற மாணவிகளுக்குத் தலைவர் பரிசுகள் வழங்கினார்.

அந்தக் குடும்பத்தில் நின்றிருந்த இளம் பெண் ஒருத்தியைக் கவனித்தான் ராமச்சந்திரன். பதினைந்து வயது நிரம்பிய அந்தப் பெண்ணின் முகம், அப்படியே மைதிலியைப் போல் இருந்தது. அவன் இருபது வருஷங்களுக்கு முன்பு மணவறையில் முதன் முதலில் சந்தித்த மைதிலியின் முகத்தை அதுநினைவுபடுத்தியது.

மூலஸ்தானத்தில் அர்ச்சனை நடந்துகொண்டிருந்தது. ராமச்சந்திரன் வியப்போடு அந்தப் பெண்ணையே பார்த்தான். மருமகன் அப்படி வியப்புடன் எதைக் கவனிக்கிறான் என்று மாமியார் கவனித்தாள்.

மனைவி, ஸ்ரீராமநாதனைத் தரிசனம் செய்யாமல் எதைப் பார்க்கிறாள் என்று கிழவர் திரும்பிப் பார்த்தார். சுருள் சுருளான கேசமும் கோதுமை வண்ண உடலும் கொண்ட அந்தப் பெண் இவர்கள் மூவரும் தன்னையே பார்ப்பதைக் கண்டு பயந்து, தன் தாயின் பின் பக்கம் சென்று மறைந்து நின்றாள்.

தீபாராதனை முடிந்ததும் பிராகாரத்தில் கிழவர் அந்த வட இந்தியக் குடும்பத் தலைவரிடம் கேட்டார்.

"ஏன், ஸார்! நீங்கள் கான்பூரில் இருந்திருக்கிறீர்களா?"

"ஆமாம்! இருந்திருக்கிறேன், அந்த இடத்தை விட்டுப் பதினாறு வருஷங்கள் ஆயிற்று!—ஏன்?" என்று கேட்டார் அவர்.

"நீங்கள்..., நீங்கள்.,.. விஷ்ணுகரே தானே?" என்றார் கிழவர் நாக்குழற.

"ஆமாம்! நான்தான் அது. ஏன்?" என்று ஒன்றும் புரியாமல் விழித்தார் விஷ்ணுகரே.

சகுந்தலா இடைத்த பிறகு அவர் ஒரு முறை அவர்கள் வீட்டுக்குச் சென்று குழந்தையை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். அங்கே அன்பு வறண்டு சூன்யமாகி விட்டதைப் பார்த்து, அவர்களைப்பற்றி அவர் அடியோடு மறந்து போனார். 'குழந்தை தங்களுடையதே' என்று உள்ளம் நிறைந்து அவளை வளர்த்தார்கள். அவர்களுடைய அன்பின் தூய்மையைக் கண்டு, இறைவன் அவர்களுக்கு, மேலும் மக்கட் செல்வத்தை அருளினார். பிறகு சகுந்தலாவின் தாத்தாவையும் பாட்டியையும், அப்பாவையும் கரே அனேகமாக மறந்து போய் விட்டார்.

"நான்தான் அந்தக் குழந்தையின் தாத்தா சார்! எங்கள் மகளின் குழந்தைதானே சார் அவள்?" என்று உள்ளமும் உடலும் பதறக் கிழவர் கரேயைப் பார்த்துக் கேட்டார்.

கரே ஒரு கணம் திகைத்து நின்றார். கிரிஜா பாய் தன் அகன்ற விழிகளினால் இந்த அதிசயத்தைப் பார்த்து நின்றாள்.

"பார்வதி! பார்வதி! நம்ப பேத்திதான் இவள். ராமச்சந்திரா! உன் மகள்தானப்பா இவள்! அம்மா! குழந்தை இப்படி வா! உன்னைப் பார்க்கலாம்!" என்று சகுந்தலாவை அழைத்தார் அவர்.

அங்கேதான் பகவான் ராமநாதன் அன்பின் தரத்தை உணர்த்தினான். அவன் நேராகப் பிரத்யட்சமாகும் யுகம் இது அல்ல அல்லவா?

சகுந்தலா திகைத்து விழித்தாள். பேந்தப் பேந்த விழித்தபடி கண்களில் நீர் ததும்பக் கிரிஜாபாயின் உடலோடு சேர்த்து ஒட்டிக் கொண்டு விட்டாள்.

"அம்மா! அவர்கள் யார்? என்னை அவர்களுடன் அனுப்பி விடாதே......" என்றாள் சகுந்தலா மராத்தியில்.


கிரிஜாபாய் அவளை அணைத்துப் பிடித்துக் கொண்டாள். அந்த அணைப்புக்கீடாக ஜகன் மாதா பார்வதி தேவியின் அன்பு அணைப்பைத்தான் சொல்ல முடியும். உயிரினங்கள் யாவையும் ஆதரிக்கும் அன்பல்லவா அது?

பார்வதி இரண்டடி முன்னால் வந்தவள், இந்தக் காட்சியைக் கண்டு பேச முடியாமல் திகைத்து நின்றுவிட்டாள். சகுந்தலா கிரிஜா பாயை விட்டு ஒரு அடிகூட முன்னால் நகரவில்லை. "அம்மா!" என்றாள் சகுந்தலா. அவள் முகத்தில் ஏற்பட்ட சோகத்தைக் கண்டு எல்லோரும் பயந்தார்கள்.


மூன்று கடல்களும் கலக்கும் சேதுக்கரையில் இந்த மூன்று குடும்பங்களும் சந்தித்தன. மணற்பரப்பில் உட்கார்ந்திருந்த ராமச்சந்திரன், பார்வதியிடம் கிழவர் சொன்னார்:

"பிறந்தவுடன் அவளை அநாதையாக்கிய நாம் அவளுக்கு எப்படி உறவினர்கள் ஆவோம்? நீதான் அவளுக்கு எப்படித் தகப்பன் ஆவாய்? நிராதரவாக விடப்பட்ட அந்தச் சிசுவை அள்ளி அணைத்து வளர்க்கத் தவறிய நீ 'பாட்டி' என்று உறவு கொண்டாடுவது தர்மமல்ல. குழந்தை அவர்களுடனேயே இருக்கட்டும். அவர்களுடைய அன்புக்கு எதிரில் நம்முடைய ஆசாபாசங்கள் எல்லாம் துச்சமாகி விட்டன" என்றார்.

சேதுக்கரையை அடுத்த ரஸ்தாவில் மாட்டு வண்டியில் கரேயின் குடும்பத்தினர் ரயிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கிரிஜா பாயின் அன்புக் கரங்கள் சகுந்தலாவை அணைத்துப் பிடித்திருந்தன.



"உங்கள் பற்களை பாதுகாறுங்கள்!"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
ஒரே ஒரு வழிதான் உண்டு. அது தான் கீழ் காட்டிய விதம் நல்ல 'விஸ்டம் டூத் ப்ரஷால் துலக்குவது.........
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரைக் காணுங்கள்
Wisdom
நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்



மர்ம விளக்கு

சில மாதங்களுக்கு முன் பாகிஸ்தானில், கீழ் வங்கத்தில் பத்திரிகைகளிலெல்லாம் மர்ம விளக்கு விஷயம் அடிபட்டது. கிழக்கு வங்காள சட்டசபையில் இரண்டொரு அங்கத்தினர்கள் அதைப் பற்றிக் கேள்விகள் கூட எழுப்பினர். சில பத்திரிகைகள் தலையங்கம் கூட எழுதியிருந்தன. சுருக்கமாய்ச் சொன்னால், டாக்கா சுற்று வட்டாரங்கள் முழுவதும் அமர்க்களப்பட்டது. எங்கும் அந்த அதிசய விளக்கு பற்றிய பேச்சுத்தான்.

விஷயம் இதுதான்: டாக்காவிலிருந்து பதினைந்து இருபது கல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு சின்னச் சிவன் கோயிலில் தினமும் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இருட்டாக அந்தக் கோயில் இருந்ததில்லை. ஆனால் அந்த ஊரிலேயே ஒரு ஹிந்து கூடக் கிடையாது. இதுதான் அதில் வேடிக்கை மர்மம். பெயரளவுக்குக் கூட ஹிந்து மதத்தான் ஒருவன்கூட இல்லாத அந்தக் கிராமத்து சிவன் கோயிலில் தினமும் இரவில் விளக்கு எரிவது விந்தைதானே?

அந்த விளக்கின் மர்மத்தை எவராலும் கண்டு பிடிக்க முடிய வில்லை. பாகிஸ்தான் வாழ் ஹிந்துக்களே கேட்டுப் பிரமித்து விட்டனர். கலியுக அதிசயம்தான் இது என்று பேசிக் கொண்டனர். முஸ்லிம்களும் வியப்போடு வாசித்தனர். ஆனால், உண்மை மட்டும் வெளிவரவே யில்லை. அப்புறம் விஷயத்தை விட்டு விட்டனர். விளக்கு மட்டும் எரிந்துகொண்டுதான் இருக்கிறது.

டாக்கா மாவட்டத்தில் சிவபூர் ஒரு சின்ன கிராமம். எல்லாக் குடும்பங்களையும் சேர்த்தால் முந்நூறு, நானூறு இருக்கலாம். பெரும்பாலோர் முஸ்லிம்கள் தான்; ஹிந்துக்கள், மருந்துக்குக் கொஞ்சம்; கிறிஸ்தவர்கள் உண்டு. ஒரு மசூதி, சிவாலயம் ஒன்று, ஒரு மாதா கோயில் - இம் மூன்றும் அங்கு இருந்தன.

சிவன் கோயில் சின்னதுதான். அந்தக் கிராமத்துக்கு அது போதுமே. தெய்வத்தின் திருநாமம் நாகநாத் என்பதாகும். அவருக்கு அச் சிறு கோயில் போதும். ஏனென்றால், அவருடைய பொறுப்பே அங்குள்ள நாற்பது, ஐம்பது குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டியதுதானே? அதிகப் பேர் அவருக்குக் கிடையாதே! முந்நூற்றுச் சொச்சம் முஸ்லிம் குடும்பங்களை அல்லா பார்த்துக் கொள்கிறார். இப்படித்தான் அவ்வூர்வாசிகளுக்குத் தத்தம் தெய்வங்களைப் பற்றி எண்ணம்.

இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் இது.

இரவு எட்டரை மணி. குருக்கள் சிவநாத் சாஸ்திரி கோயிலில் சுவாமியை வைத்துப் பூட்டி விட்டு வெளியே வந்து கொண்டிருந்தார். வேஷ்டி மிகவும் அழுக்கேறியது; இடுப்பில் சாவிக் கொத்து; காதில் எண்ணெய் இறங்கிய சிட்டகாங் கடுக்கன்; வலது கையில் சாத உருண்டை; இடது கையில் கீதை.



இப்படி வந்து கொண்டிருந்தவருக்கு வாசற்படியில் கால் வைத்ததும், சுரீர் என்றது. பரபரவென்று உள்ளே சென்ருர். கை விளக்கை எடுத்து வந்தார்.

அவர் எண்ணியது சரி. படியில் தலே வைத்துக் கொண்டு யாரோ ஒருவன் படுத்திருந்தான். சின்னஞ் சிறு பையன் சுருண்டு விழுந்து கிடந்தான். அவன் மேலே அவர் தவறிக் காலே வைத்து விட்டார். முகத்துக்கு நேரே விளக்கைப் பிடித்தார். பையனின் தோற்றத்திலே பால் வடிந்தது. குன்றிக் குறுகிப் போய் அவன் விழுந்து கிடந்த காட்சி தான் கண்ணே அராவியது. 'இந்தாப்பா' என்று சிவநாத் சாஸ்திரி அவன் காதோடு உரக்கக் கூப்பிட்டார். பையனின் உடலில் நெளிவு தான் கண்டது.

"இந்தாப்பா, பையா! எழுந்திரு" என்று பலமாகக் கூப்பிட்டார் குருக்கள்.

திடுக்குற்று, சிறுவன் பதற்றத் தோடு விழிப் புற்று எழுந்து நின்ருன். அவன் முகத்தை அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லே. சொல்லவொண்ணுத ஓர் வேதனே, ஒரு தவிப்பு ஆங்கு இடம் பெற்றிருந்தது. "ஏன், இங்கேயே படுத்திட்டே, தம்பி?" என்று கேட்டார்.

பையனின் முகத்தில் பயம் பாதி.

"சும்மாச்சொல்லு."

சிறுவன் சொன்னுன். நாலுநாட்களாக அவன் பட்டினி; விஷயம் வேறு ஒன்றுமில்லே.

சாஸ்திரிக்குப் பரமசந்தோஷம். சற்று முன்பு தான் எதிலேயோ படித்துக் கொண்டிருந்தார். பசியென்று யாராவது வர மாட்டாரு என்று மனசு துடித்துக் கொண்டிருக்க வேண்டும். ஏன் என்ருல் காய்ந்து கொண்டிருக்கிற வயிற்றுக்கு உணவளிப்பதை விடச் சிறந்தகைங்கரியம் எதுவுமில்லே என்று பகவானே கூறி யிருப்பதாகப் புத்தகத்தில் போட்டிருந்தது.

இப்போது, எத்தனே பொருத்தம்!

பையனேஉட்காரச்சொல்லி, வாதாம் இலேயை எதிரே கிடத்தினுர். "எவ்வளவு வேண்டுமானுலும் சாப்பிடு" என்று சாஸ்திரி சோற்று உருண்டையை அப்படியே அவன் இலேயில் வைத்தார். அவருக்கு ஒரு சிறு சந்தேகம். தான் வழிபடும் தெய்வம்தான் இப்படித் திடீரென்று பஞ்சக் கோலத்தில் பட்டினி வேடத்தில் பரம சாதுபோல் வந்து நிற்கிறதோ பையனுக? ஏன் இருக்கக்கூடாது?

"ஏன் நீ நாலு நாட்களாய்ப் பட்டினி?" என்று அவர் கேட்டது அவன் காதில் புகவேயில்லே. அவன் கருமமே கண்ணுக, இலேயைக் காலி செய்து கொண்டிருந்தான். அவன் 'லபக்லபக்'கென்று சோற்றை அள்ளி அள்ளி

விழுங்குவதையே பார்த்துக் கொண்டு நின்றார் பெரியவர், நிறைந்த உள்ளத்தோடு.

"ஏன் நீ பட்டினி? அதைச் சொல்லவில்லையே இன்னும்?"

இக்கித் திணறிக் கொண்டு பையன் பேசினான். அவன் எங்கேயோ அநாதைச் சிறுவர் விடுதியில் இருந்து கொண்டிருந்தாலும், அவ் விடுதிக்குப் பணம் தந்து வரும் தர்மகர்த்தா எவனோ செத்து விட்டானாம். அவனுடைய பணம் வருவது நின்று விடவே, அநாதை விடுதியின் நிர்வாகஸ்தன் அவனைப் போன்ற நிலையில் இருந்த நாலைந்து பேர்களை வெளியேற்றி விட்டானாம்.

சாஸ்திரிக்கு அநாதை விடுதியின் மீதே ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"எங்கே இருக்கிறது அந்த விடுதி?"

"டாக்காவுக்குப் பக்கத்திலே."

"அங்கேயிருந்து நடந்தா வந்தாய்?"

அதற்குப் பையன் தலையாட்டினான்.

"நீ கவலைப்படாதே. தினமும் இரண்டு வேளையும் இங்கே வந்துவிடு. வயிற்றை நிரப்பிடுவார் நாகநாத்ஜீ!"

பையன் தலையைக் குனிந்து கொண்டான்.

"என்ன? வந்து விடு இங்கே!" மீண்டும் சொன்னார்.

பையன் தலையாட்டினான்.

ஏழெட்டு நாட்களுக்குப் பின்புதான் பையனிடம் அவன் பெயர் இன்னதென்று கேட்க, அவருக்கு நினைவு வந்தது.

அவன் சொன்ன பெயர் சற்றுத் தூக்கிவாரிப் போட்டதென்னவோ உண்மைதான்.

"என் பெயர்..." என்று சிறுவன் தடுமாறினான். அவருக்குப் புரியவில்லை.

"என் பெயர்..." இழுத்தான் பையன்.

"சும்மாச் சொல்லு."

"காதர்."

"என்ன? காதரா?"

பையனின் முகம் பேயறை பட்டாற்போல் இருந்தது.

"நீ முஸ்லிம் பையன் என்று சொல்லு."

"ஆமாம்" என்று கஷ்டப்பட்டுக் கொண்டு முணுமுணுத்தான். சாஸ்திரியின் உள்ளத்தில் தெய்வம் இருந்தது. அவர் சொன்னார். "பரவாயில்லை. தினமும் வந்து விடு. நான் சோறு போடுகிறேன். பயப்படாதே."

காதரின் கண்களில் இனம் புரியாததோர் உணர்ச்சி சுடர் விட்டது.

சிவநாத் சாஸ்திரி எண்ணியதென்னவென்றால், 'தெய்வம்தான் எந்த உருவிலும் வரலாமே. ஆகவே இப்படி முஸ்லிம் பையனாக வந்து தன்னைப் பரீட்சிக்கிறதோ...' என்று எண்ணமிட்டார்.

அவருக்கு வயிறு மிகச் சிறியது. இரண்டு வேளையும் சோறு நிறையக் கிடைக்கும். அப்படியே அதைக் காதருக்கு அளித்து வந்தார்.

கோயிலில் சிப்பந்திகள் இரண்டே பேர்கள் தான்; அவரும், நகரா அடிக்கிறவனும். நகராக்காரனுக்கு ஒரு பெரிய சோற்று உருண்டை உண்டு. சாஸ்திரியின் பங்கில் முக்காலும் காதர் வயிற்றுக்குத்தான் போய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் காதரைக் கூப்பிட்டு அவர் எச்சரிக்கை கூடச் செய்து விட்டார். "இதோ பார், சொல்லி விட்டேன். இந்தக் கோயில் பிரசாதத்தைப் பற்றி வெளியிலே ஒருத்தருக்கும் தெரிய வேண்டாம். சுவாமி பிரசாதத்தைப் போய் எவனோ அன்னிய மதக்காரனுக்குப் போடுகிறதாகச் செய்தி காதில் விழுந்து விட்டால், அவ்வளவுதான்; தர்மகர்த்தா என்னைக் கிளப்பி விடுவார். ஜாக்கிரதை."

காதர் அவரை வழக்கம் போல, ஏதோ தெய்வத்தைத் தரிசிக்கிறாற் போல் பார்த்துக் கொண்டே நின்றான்.

"சரி, போயேன்" என்றார் குருக்கள்.

"இல்லை. எனக்கு ஏதாவது வேலை..கொடுத்தால், செய்வேன்."

சாஸ்திரி ஒரு கணம் யோசித்தார்.

"சரி. தினமும் கிடைக்கிற நல்ல பூவெல்லாம் பறித்துக் கொண்டு வா." காதர் புள்ளிமான் எனத் துள்ளியோடினான்.

★

வருஷக் கணக்காக, சிவாலயச் சோறு உண்டு வளர்ந்த அப்துல் காதர் ஏதோ தையல் தொழிலைக் கொஞ்சம் கற்றுக் கொண்டு மரியாதையாக ஒதுங்கி விட்டான். ஆனால், கோயிலுக்குப் பூ அனுப்புவதை மட்டும் நிறுத்தவில்லை. சாஸ்திரியும் கிழவராகப் போய் விட்டார். கோயிலை விட்டு அப்பால் இப்பால் நகர உடம்பு இடம் கொடுக்கவில்லை.

இதற்கிடையில் எத்தனையோ மாறுதல்கள்! பாரத நாடு துண்டு போடப்பட்டது. எத்தனையோ கொலை, கொள்ளை எல்லாம் செய்து வகுப்புவாத வெறியைப் பாய்ச்சினர்.

சிவபூர் இவ் விஷயத்தில் பின் தங்கவில்லை. ஹிந்துக்கள் பெரும்பாலோர் எப்படியோ மூட்டை கட்டிக் கொண்டு ஊரை விட்டுப் போய்விட்டனர். சாஸ்திரி மட்டும் நாகநாத்ஜியை விட்டு விட்டுப் போவதாவது என்று இருந்து விட்டார்.

ஒரு நாள் இரவு.

அப்துல் காதர் ஓடி வந்தான்.

'ஜீ. ஜீ' என்று அழைத்தான்.

சாஸ்திரி வெளியே வந்தார்.

"நீங்கள் தயவு செய்து. இந்தியாவுக்கு ஓடி விடுங்களேன்."

"என்ன உளறுகிறாய் நீ?"

"கல்கத்தாவுக்குப் போய் விடுங்க. இங்கே இருந்தால், உயிர் தப்புகிறது கஷ்டம்."

சாஸ்திரிக்கு அலாதித் துணிச்சல்! காதருக்கு அற்புதமானதொரு வாஞ்சை அவரிடம்.

"வருகிற வாரம் எங்கள் ஆட்கள் சில பேர் சேர்ந்து கொண்டு, மிஞ்சியிருக்கிற அவ்வளவு ஹிந்துக்களையும் தீர்த்து விடப் போகிறாங்க. பெரிய சதித் திட்டம் நடக்குது. நீங்கள் உயிர் தப்பணும். எனக்காகக் கொஞ்சம் கேளுங்க."

காதர் கெஞ்சினான்.

கிழவர் அசைந்து கொடுக்கவில்லை.

அந்த நாளும் வந்தது. அன்று முழுவதும் காதர் என்ன ஆகப் போகிறதோ என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தான்.

இரவு தையற்கடையைப் பூட்டிக் கொண்டு கோயிலுக்கு ஓடினான். கதவு ஒருக்களித்திருந்தது. அவன் மனம் 'பக்பக்'கென்று வேகமாக அடித்துக் கொண்டது.

'ஜீ. ஜீ' என்று உரக்கக் கூப்பிட்டுப் பார்த்தான். பதிலே காணோம்.

ஏழெட்டுத் தடவைகள் உரக்க அழைத்துப் பார்த்தான். பிறகு புகுந்து விட்டான் காதர், உள்ளே புயல் போல.

அவன் எண்ணியது எதிரே காட்சி யளித்தது. ஒரே இரத்த வெள்ளத்தில் சாஸ்திரி மிதந்து கொண்டிருந்தார். அவர் குடலைக் கிழித்துப் போட்டு விட்டுப்போயிருந்தார்கள், சதிகாரர்கள்.

ஓவென்றலறிக் கொண்டு அவர் காலடியில் காதர் 'தொப்'பென்று சாய்ந்தான். குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிழவர் பேசினார்—

"யாரு? காதரா?"

"ஆமாம்."

"வாப்பா, உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்."

காதர் பைத்தியம் போல் நின்றான்.

கிழவர் அவனை அருகே அழைத்தார்.

"வேறே ஒன்றுமில்லை, காதர்! நீ ஒரு காரியம் செய்யவேணும்."

"என்ன!" என்றான் ஆவேசத்துடன்.

"நான் போய்க் கொண்டிருக்கிறேன். மறந்துவிடக் கூடாது. இந்தக் கோயிலிலே நாகநாத்ஜிக்குத் தினமும் நீ வந்து ஒரு விளக்கு ஏற்றி வைத்து விட்டுப் போகணும். ஒரு நிமிஷ நேரமாவது தினமும் விளக்கு எரியணும். நான் உன்னிடம் கேட்டுக்கொள்கிறது அவ்வளவுதான்!" என்று முக்கி முனகிச் சொல்லி முடித்தார். அடுத்த கணம் அவரது உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தது.

*

அப்துல் காதர் உண்மையான முஸ்லிம்; அவனால் நன்றி மறப்பதும் முடியாது; கூறிய சொல் தவறுவதும் நடவாது.

இன்னும் சிவபுரியில் நாகநாத்ஜி எதிரே அர்த்தராத்திரியில் விளக்கேற்றி வைத்து விட்டு வருவதற்காக ஒரு உருவம் ஊர்ந்து செல்வதை யாரும் பார்க்கலாம்!

படித்துப் பாருங்கள்!

டணாயக்கன் கோட்டை

நாவல்கள் பலவிதம். அவற்றுள் சரித்திரப் பின்னணி கொண்ட நாவலுக்கு என்றும் தனிமதிப்பு உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்பு இறந்து மடிந்து புதையுண்டுபோன சரித்திரப் பாத்திரங்களுக்குக் கற்பனைத் திறனால் உயிர்த் துடிப்பைக் கொடுத்து, அவைகளுக்குள் மட்டற்ற மனித உணர்ச்சியைப் புகுத்தி வாசகர்களுக்கு முன் நடமாட விட்டால் சுவை ததும்பத்தானே செய்யும்?

இந்நாவலில் வரும் சரித்திரக் கதாபாத்திரங்கள் மிகவும் சுவாரஸ்யமானவர்கள்; திப்பு சுல்தான், திறமை மிகுந்த அவனது தாய் சுல்தானா, ராஜதந்திர நுட்பம் மிகுந்த ராணிலட்சுமி, அந்நாளில் வெற்றி வீராங்கனையாகத் திகழ்ந்த வீரம்மா இவர்களின் குணாதிசயங்களைச் சமத்காரமான முறையில் ஆசிரியர் தம் நூலில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இப்பெருங்கதையில் வரும் நிகழ்ச்சிகள் எண்ணற்றவை. மைசூர் வரலாற்றை நிலைக்களனாகக் கொண்டு இந்தக் கதைக் கோட்டை எழும்பியிருக்கிறது. அடுக்கடுக்கான சம்பவக் கோவைகள் கதையை மேலே மேலே படிக்கத் தூண்டுகின்றன. ஆசிரியர் கையாண்டிருக்கும் தமிழ் நடை விறுவிறுப்புடன் ஆற்று வெள்ளம் போல் வேகமாக இழுத்துச் செல்கிறது. 460 பக்கங்கள் கொண்ட இந்தப்புத்தக அமைப்பே மாபெரும் கோட்டை மாதிரி தான் இருக்கிறது.

எழுதியவர்: இ. எஸ். பாலகிருஷ்ண நாயுடு; பிரசுரம்: நவஇந்தியா வெளியீடு, பீளமேடு, கோயமுத்தூர்; விலை: ரூ. 4-0-0.

அணையா விளக்கு

விருப்பு வேற்றுமையையும், அந்தஸ்து வேற்றுமையும் கடந்து பாய்ந்த காதலின் சக்தியை இந்நூலாசிரியர், புரட்சிகரமாகத் துணிந்து பயன் அளிக்கச் செய்திருக்கிறார். சாதாரணமாக, இத்தகைய காதல், நம் வாழ்க்கையிலும் சரி, கதைகளிலும் சரி கருகிப் போய் விடுவதையே கண்டிருக்கிறோம். இந்நூலாசிரியரின் சமத்காரம் அதைத் தவிர்க்கச் செய்திருக்கிறது.

மேற்கூறிய கருத்தை நிலைக் களனாகக் கொண்டு, 'ஆர்வி' நல்லதோர் நாவலை உணர்ச்சி ததும்பப் புனைந்திருக்கிறார். புதுமையும் கவர்ச்சியும் மிகுந்த காதல் ஒருபுறமும், பேதைமையும் பழமையும் மிகுந்த கிராம மக்களின் பண்டைக்கால சம்பிரதாய நெறி ஒரு புறமும் இந்நாவலில் போராடுகின்றன.

அழகும் அறிவும் மிக்க கதாநாயகன் சந்தானம் மிகவும் சாவதானமாகத் தன் மன உறுதியினால் வாழ்க்கைப் பிரச்னைகளை எதிர்த்து வெல்கிறான். அவன் நண்பன் அதற்கு உறுதுணையாயிருக்கிறான்; சந்தானத்தின் உள்ளன்புக்குப் பாத்திரமான பாப்பா, பாவம் பேதைப் பெண்! அவள் உள்ளப் பதைப்பு நம் இதயத்திலும் புகுந்து வேகமாகத் துடிக்கச் செய்கிறது. 444 பக்கங்கள் கொண்ட இப்பெரிய நாவல் அவசியம் படித்துப் பார்க்க வேண்டிய நூல். குறைவான சம்பவங்களைக் கொண்டே, உள்ளப் பிரதிபலிப்பின் வேகத்தினால், நாவலுக்குச் சுவையூட்ட முடியும் என்னும் உண்மையை இந்நாவலில் காண முடிகிறது. ஒவ்வொரு பாத்திரமும் பூரணத்வம் பெற்று முழு வடிவமாக விளங்குவது இந்நாவலின் சிறப்பான அம்சம். ஸ்ரீ கி. சந்திரசேகரன் இந்நூலுக்கு அளித்திருக்கும் முன்னுரையில் சமூகக் கதையின் இன்றியமையாத அம்சங்களை அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். தெள்ளிய நடையில் கதை குன்றாத சுவையுடன் விறுவிறுப்பாகச் செல்கிறது.

எழுதியவர்: ஆர்வி.; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4 விலை: ரூ. 5—0—0.


Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


என் வெகு நேர்த்தியான
'சோளி'களையும் லக்ஸ்
பத்திரமாகப் பராமரிக்கிறது
இவ்வருஷத்து மோஸ்தரான 'சோளி'கள் முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிக வனப்புடையவை —முன்னிலும் அதிகமாகவே நமது சம்பிரதாயத்தை அனுசரிப்பவை. பருத்தித் துணிகள் தென்னிந்தியப் பட்டுத் துணிகள், பளபளக்கிற நைலான்கள், விலையுயர்ந்த ப்ரோகேடுகள் ஆகியவை போன்ற இன்னும் அநேக ஆடைகள், புத்தம்புது மோஸ்தர் சோளிகளையும் கவர்ச்சி பெறச் செய்யும். உங்களுடைய சோளிகளை நீங்கள் கண்கவரும் புதுமையோடு வைத்திருங்கள்— தூய, மென்மையான லக்ஸ் துகள்களை உபயோகித்து அவற்றைப் பராமரியுங்கள்.
இலவசம்
துண்டுப் பிரசுரம்: ''ரவிக்கைகளையும் சோளிகளையும் சரிவர சலவைசெய்யும் வழி''. லக்ஸ் பெட்டியின் மேல் மூடியிலுள்ள பாப்பா படத்தை இணைத்து, ''தபால் பெட்டி நெ. 409, பம்பாய்''க்கு எழுதுங்கள்.
அழகுமிக்க ஆடைகளுக்கு நெடுங்காலம்
புதுமைத் தோற்றம் அளிப்பது லக்ஸ்
LUX
for gentle washing of lovely clothes
LUX

LK. 184-80 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

உங்கள் வீட்டுக்கு வேண்டியது விம்
அப்பழுக்கின்றி விரைவில் சுத்தம் செய்யும்!



உங்களுடைய சமையல் பாத்திரங்களை மினுக்கச் செய்தால் மட்டும் போதாது — சுகாதார ரீதியாக அவை சுத்தமாக வேண்டும்! விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட, துலக்கும் பவுடராகிய விம் உபயோகியுங்கள்: அழுக்கு, பசை யாவையும் கொஞ்சப் பொழுதில் விரட்டிவிடலாம்! ஒரு சுத்துணியில் விம் தூவி, தேய்த்தலம்பி, உலரவிட வேண்டியதுதான் தாமதம் ... எல்லாம் ஒளி மயமாகக் காண்பீர்கள்! எவர்சில்வர், சாதாரண பிங்கான், கண்ணாடி சாமான்கள், வாஷ் பேஸின்கள், பாத்திரங்களைக் கழுவும் பேஸின்கள், தரைகள், ஓடுகள் ஆகியவற்றைத் துலக்குவதற்கும் விம் பயன்படும். அது சிக்கனமானது என்பதும் உங்களுக்குத் தெரியவரும் — சிறிதளவு விம் உபயோகித்தாலும் அதிகமான அளவு பரிசுத்தம் காணலாம்.



இங்கிலாந்தில் தயாரித்தது

விம் — விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட, துலக்கும் பவுடர்

V 90A-30 TM